வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்



மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 கார்த்திகை திங்கள் 27-ம் நாள் (13—12—1959) ஞாயிற்றுக்கிழமை ஜ. ஆகிர் பிறை 12 இதழ் 28

# இலங்கை அரசியலில் திடுதிப்பென்று திருப்பம்!

## இராணுவ ஆட்சியோ அல்லது சர்வாதிகார ஆட்சியோ வந்தால்....?

## கொழும்பில் எங்கும் கவலையும் பரபரப்பும்

## பொதுத் தேர்தல் நடப்பது பற்றியும் ஐயம்

(சுதந்திரன் நிருபர்)

இலங்கை அரசியலில் திடுதிப்பென்று திருப்பம் ஏற்பட்டால் அது பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை இன்றைய நிலையில், வெகு விரைவில் சர்வாதிகார ஆட்சியோ அன்றி இராணுவ ஆட்சியோ ஏற்பட்டு விட்டால்......? இது பற்றிய கவலையும் பரபரப்பும் மக்களிடையே, அவர்களிலும் குறிப்பாக கொழும்பில் உள்ள படித்த வட்டாரத்தினரிடையே வளர்ந்து வருவதாகத் தெரிகிறது.

பாராளுமன்றம் திடீரென்று கலைக்கப்பட்டதும், அதைத் தொடர்ந்து நடைபெற்றுவரும் மறைமுகமான, வெளிப்படையான சம்பவங்களும் கொழும்பில் உள்ள படித்த மக்களிடையே ஒருவித பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன

அரசாங்கக் காரியாலயங்களிலும், வர்த்தக ஸ்தாபனங்களிலும் கடமை பார்க்கும் உத்தியோகஸ்தர்கள் அலுவலகங்களிலும், பஸ்ஸிலும், ரயிலிலும இலங்கையின் எதிர் காலம் பற்றியே சர்ச்சைகள் நடத்தி வருகின்றனர்.

### சோர்வு நிலை

அரசாங்கக் காரியாலயங்களில் அன்றாட வேலைகள் எதுவும் சிப்பந்திகளால் அக்கறையோடு கவனிக்கப்படுவதாய் இல்லை. சகலரும் பத்திரிகைகளைக் கையில் வைத்துக்கொண்டு அரசியல் நிலை பற்றி உன்னிப்பாக உரையாடிக்கொண்டு காலம் கழிக்கும் காட்சிகளைக்காண முடிகிறது.

எல்லாக் கருமங்களிலும் ஏனோ தானோ என்ற நிலையில் தான் நடைபெற்று வருகின்றன. நிலையற்ற அரசாங்கத்தினால் ஏற்பட்ட சோர்வு வர்த்தகத் துறையிலும பரந்து காணப்படுகிறது.

### இராணுவ ஆட்சி

சேர். ஒலிவர், திரு தஹநாயகா ஆகியோரின் விருப்பு வெறுப்புப்படி மந்திரிகள் நின்ற நின்றவாறு விலக்கப்பட்டு வருவதும், திரு தஹநாயகா தமது புதிய அரசியல் கொள்கைகளை வெளியிடுவதும், விலக்கிவைத்த திரு ஸ்டான்லி டி. சொய்ஸாவைத் திரும்பவும் மந்திரிப் பதவி கொடுத்து அரவணைத்திருப்பதும் மற்றும் சில இரகசிய சம்பவங்களும் சேர்ந்து இந்த நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சியோ, அன்றி இராணுவ ஆட்சியோ ஏற்பட்டு விடலாம் என்ற சில அவதானிகளின் அபிப்பிராயத்துக்கு ஆதரவு தருகின்றனர்.

### சில்வா தகராறு

குறிப்பாக மந்திரி சி. பி. டி சில்வா கோஷ்டியினர் பிரதமர் தஹநாயகாவுக்கு எதிராகப் பாணந் தொடுக்கத் தொடங்கியிருப்பதும், அவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட பின்னர் பிரதமராக இருக்க அவருக்கு என்ன உரிமை இருக்கிறது என்று கவர்ணர் ஜெனரலைக் கேட்க ஆரம்பித்

(9-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரன் சொன்னால் சொன்னது தான்

சுதந்திரன் சொன்னால் சொன்னதுதான்--பொய்க்காது. அப்படிச் சொல்லுவதையும் தினப் பத்திரிகைகளையெல்லாம் முந்திக்கொண்டு சுதந்திரன் சொல்லி வந்திருப்பதை நேயர்கள் அறிவார்கள்.

அதிக தூரம் போக வேண்டியதில்லை. கடந்த வார முதல் பக்கத்து முக்கிய செய்தியைப பார்த்தாலேபோதும்.

(8ம் பக்கம் பார்க்க)

தமிழரசுக் கட்சி:

## அபேட்சகர் நியமனங்கள் இவ்வாரம் ஆராயப்படும்

## காங்கேசன்துறைக்கு எஸ். ஜே. வி: பொய் வதந்திக்கு மறுப்பு

## 27 தொகுதிகளில் போட்டி பல முஸ்லிம்களும் இடம் பெறுவர்

[சுதந்திரன் நிருபர்]

எதிர் வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் நிறுத்தப்பட விருக்கும் அபேட்சகர்கள் யார் யார் என்பது இவ்வாரம் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் நடைபெறவிருக்கும் கட்சி அபேட்சகர் நியமன சபைக் கூட்டங்களில் தீர்மானிக்கப்படும் என்றும், தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் இம்முறை காங்கேசன்துறைத் தொகுதிக்குப் போட்டியிடமாட்டார் என்று யாழ்ப்பாணப் பகுதிகளில் சிலா விஷமத்தனமாக் கிளப்பிவிட்டிருக்கும் வதந்தி முற்றும் பொய்யானது என்றும் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் சுதந்திரனுக்குத் தெரிவிக்கிருர்.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களைத் தேர்ந்து நியமிப்பதற்காக எதிர் வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலும, திங்கட்கிழமை மட்டக்களப்பிலுமாக தமிழரசுக் கட்சி அபேட்சகர் நியமன சபை கூடுகிறது.

### அங்கம் வகிப்போர்

இந்த சபையில் கட்சித் தலைவர் திரு. என் ஆர். இராசவரோதயம், பொதுச் செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், திருவாளர்கள் எஸ். ஜே வி. செல்வநாயகம், வி ஏ கந்தையா, செ. இராசதுரை, எஸ். எம். இராசமாணிக்கம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கு மாகாணங்களில் அம்பாறை தவிர்ந்த, எல்லா ஸ்தானங்களுக்கும் கொழும்பு வடக்குத்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஐக் டில்லியில் காலடி வைத்ததும் நிகழ்ந்த சம்பவம்

## இலங்கையில் ஒரு மேலிடத்துடன் கடல் தந்தியில் பேச்சு நடந்ததா?

## சம்பாஷணையின் தாற்பரியம் பற்றி பலவித அரசியல் ஹேஸ்யங்கள்

(சுதந்திரன் நிருபர்)

இந்தியாவிற்கு தற்சமயம் விஜயம் செய்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஐஸனேவர் டில்லியில் காலடி வைததுச் சொற்ப நேரத்தில் இலங்கைக்கு பறந்து வந்தது பேச்சுக்குரல் ஒன்று. அதாவது கடல் டெலிபோனில் இங்குள்ள மேலிடத்தோடு நீண்ட நேரம் சம்பாஷணை நடத்தப்பட்டது என்று தெரிய வருகிறது. (9-ம் பக்கம் பார்க்க)

இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)




ஒரு பிரசித்தி பெற்ற தயாரிப்பு குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, தொய்வுக்கு இது ஒரு வரப்பிரசாதம்!

● மூச்சு விடுதல் தடைபடுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தை ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாய்யிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசபபை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்கு வரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்—நுறை—போன்ற சளியை இளகச் செய்து காறி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு. நெஞ்சுவலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு; தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல், காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப் படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

63, பாங்ஷால் வீதி, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்



# சட்டமும் சமூகமும்



## சூனிய விவாகமும் நடுத்தீர்ப்புப் பிரிவினையும்

**வி**வாகத்தைப் பற்றியும் விவாகத்தின் விளைவுகளைப் பற்றியும் முந்திய கட்டுரைகளில் ஒருபடியறிந்துள்ளோம். இக் கட்டுரையில் எச் சந்தர்ப்பத்தில் சட்டரீதியாக அமைந்த விவாகம் சூனியமாக்கப்படலாமென்பதையும், எச் சந்தர்ப்பத்தில் நடுத் தீர்ப்பின் மூலம் விவாகப் பிரிவினை செய்யலாமென்பதையும் ஆராய்வோம்.

மேற்பார்வைக்குச் சட்டரீதியான விவாகமெனக் கொள்ளப்பட்ட விவாகம் சில சமயங்களில் சூனியமுள்ள விவாகமெனக் கருதப்படும். ஒரு விவாகம் சூனியமான விவாகமாயிருந்தால் அவ்விவாகம் தொடக்கத்திலிருந்தே ஏற்படாத விவாகமெனக் கருதப்படும். உதாரணமாக அவ் விவாகம் காரணமாகப் பிள்ளைகள் பிறந்திருந்தாலும் அப் பிள்ளைகள் சட்டரீதியற்ற பிள்ளைளெனவே கருதப்படுவர். மணவினை முறிக்கும் (Divorce) சூனிய விவாகத்துக்குமுள்ள பிரதானமான வித்தியாசம் இதுவே. மணவினை முறியேற்பட்டால் அக் காலம்வரை உற்பத்தியான பிள்ளைகள் யாவும் கணவனுக்குச் சட்டரீதியாகப் பிறந்த பிள்ளைகளெனவே கருதப்படுவர்.

### சூனிய விவாகங்கள்

தொடக்கத்திலிருந்து சூனியமாகக் கருதப்படும் விவாகங்கள் பின்வருவன:

1. இரு தம்பதிகளும் இரத்தத் தொடர்பினால் விவாகம் செய்ய இயலாத நெருங்கிய இனத்தவர்களாயிருந்தால் அவ் விவாகம் சூனிய விவாகமெனக் கருதப்படும். உதாரணமாக ஒருவர் தன் சகோதர சகோதரிகளின் மகளை விவாகம் செய்தால் அவ் விவாகம் சூனிய விவாகமாகக் கருதப்படும். சமுதாய வழக்கத்துக்கு முரணாயிருந்த போதிலும் ஒருவர் தன் தகப்பனின் சகோதரனின் மகளை அல்லது தாயின் சகோதரியின் மகளை விவாகம் செய்யச் சட்டம் இடம்கொடுக்கிறது. ஒரு காலத்தில் அவ் விவாகங்களும் சூனியமான விவாகங்களாகக் கருதப்பட்டன. இப்பொழுது அக் கொள்கையில்லை.

2. தம்பதிகளிலொருவருக்கு நடக்கும் கிரியை விவாகக் கிரியையென அறியாவண்ணம் ஏமாற்றி நடத்தப்பட்ட விவாகமும் சூனியமுள்ள விவாகமாகும். ஒப்பந்தங்களில், ஒருவரின் மனம் அவ்வொப்பந்தத்தில் பதியாவிடில் அவ் வொப்பந்தம் சூனிய ஒப்பந்தமாகும். எனவே விவாகமும் ஒரு ஒப்பந்தத்தால் உற்பத்தியாவதால் கிரியையறியாமல் ஏற்பட்ட விவாகம் தொடக்கத்திலிருந்தே சூனியமானதாகும்.

3. தம்பதிகளில் ஒருவர் விவாகமானவராக இருந்து அவ் விவாகம் மணவினை முறியால் அல்லது மரணத்தால் விலக்கப்படாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் அவர் மறுதர விவாகம் செய்தால் அவ் இரண்டாம் விவாகம் சூனிய விவாகமாகும்.

4. தம்பதிகளிலொருவர் விவாகப் பருவம் (Puberty) அடையாவிட்டால் அவ் விவாகம் சூனியமான விவாகமாகும். தமிழருக்கும் சிங்களவர்களுக்கும் பெண் 12 வயது நிரம்பப்பெற்றால் அவள் விவாகப் பருவம் அடைந்தவளெனக் கருதப்படுவாள். ஐரோப்பிய பறங்கிய சமுதாயங்களைச் சேர்ந்த பெண்கள் 14 வயதிலேயே பருவமடைந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

### கோவிலும் மத குருவும்

பொது விவாகச் சட்டத்தின் 42-ம் ஷரத்தின்படி விவாகத்திற்கெனவே ஏற்படுத்தப்படாத இடத்தில் விவாகம் நடந்தால் அவ் விவாகம் சூனிய விவாகமாகும். உதாரணமாக கிறிஸ்தவர்கள் கோவிலில் விவாகம் செய்தால் அக் கோவில் சட்டரீதியாக விவாகத்துக்கு அனுமதிக்கப்பட்ட கட்டடமாயிருக்க வேண்டும். விவாகப் பதிவுக்காரர் பதிவதாயிருந்தால் அவரின் உத்தரவு பெற்ற காரியாலயமாயிருக்க வேண்டும், அல்லது அதற்கெனவே மாகாண அதிபரால் அனுமதிக்கப்பட்ட இல்லமாயிருக்க வேண்டும்.

இதைவிட விவாகக்கிரிகை நடத்துபவர் அதற்கெனவே உத்தரவு பெற்றவராயிருக்க வேண்டும். உதாரணமாக மதகுரு, விவாகப் பதிவுக்காரர் இருக்க வேண்டும்.

### பொய்ப் பெயரும் அறிவித்தல் இல்லாமையும்

பொய்ப் பெயரில்விவாகம் செய்தாலும் விவாக அறிவித்தல் கொடாமல் விவாகம் செய்தாலும் அது தொடக்கத்திலிருந்தே சூனியமான விவாகமெனக் கருதப்படும். இந்து சமயச் சடங்கின்படி நடக்கும் விவாகங்கள் மேற் கூறியவையிலிருந்து விதிவிலக்காயுள்ளவை.

மேலே குறிப்பிட்ட நான்கு சந்தர்ப்பங்களிலும் நடக்கும் விவாகங்கள் தொடக்கத்திலிருந்தே சூனியமானவை. அதாவது நீதிமன்றத்தில் எவ்வித நடவடிக்கையெடாவிட்டாலும் அவை விவாகப் பலனை அனுபவிக்கமாட்டா. எனினும் தங்கள் உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக தம்பதிகளிலொருவர் அல்லது இவ் விவாகத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் இவ் விவாகத்தைச் சூனியமாக்குவதற்காக நீதிமன்றத்தில் சூனிய விவாக வழக்கை (Nullity of Marriage) தொடரலாம். இவ்வழக்கைத் தொடருபவர் தாம் வசிக்கும் இடத்தையடக்கிய மாவட்ட நீதி மன்றத்தில் விவாக சூனிய வழக்கை யாரம்பிக்கலாம்.

### பலட்சயம் இருத்தல்

1. விவாகத்துக்கு முன்னிருந்த பலட்சயம் (Impotency) அதாவது விவாகக் கடமையை நிறைவேற்றும் சக்தியின்மை. இச் சந்தர்ப்பங்களில் விவாகச் சக்தியுள்ள தம்பதியே விவாக சக்தியற்ற தம்பதிமேல் வழக்குத் தொடர்வது வழக்கம். ஆயினும் சில சந்தர்ப்பங்களில் சக்தியற்ற தம்பதியும் வழக்குத் தொடரலாம். உதாரணமாக சக்தியுள்ள தம்பதி விவாகத்தை சூனியமாக்கக் கருதிக்கொண்டு விவாகத்தை விலக்குவதற்கு ஒருவித நடவடிக்கையுமெடாமல் உதாசீனப்படுத்தி வந்தால் சக்தியற்ற தம்பதி தாமாகவே தம் சக்தியின்மையைக் காட்டி விவாகத்தைச் சூனியமாக்கிக் கொள்ளலாம்.

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசீலனைக்குழு சட்ட ஆலோசகர்

### சூனியமாக்கக் கூடிய விவாகங்கள்

மேற்கூறிய சந்தர்ப்பங்களைத் தவிர்த்து வேறு சந்தர்ப்பங்களிலும் விவாகத்தைச் சூனியமாக்கலாம். இவ்வித விவாகம் தொடக்கத்திலிருந்து முறையான விவாகமாகக் கருதப்பட்டு வழக்குத் தொடர்ந்து தீர்ப்புக் கொடுக்கப்பட்டபின் அந்நாள் தொட்டு சூனியமாக்கப்படுவதாகும். இவ்வித சந்தர்ப்பங்களில் தம்பதிகள் விவாகத்தைச் சூனியமாக்குமுரிமையைக் கையாளாமலவிடின் அவ்விவாகம் முறையான விவாகமாகும். இப்படியான விவாகங்களுக்குச் உதாரணங்கள் பின்வருவன:

விவாகமானபிறகு ஒரு நோயின் காரணமாக அல்லது ஒரு சத்திர வைத்தியம் மூலம் ஒருவர் பலட்சயமடைந்தால் அது காரணம்பற்றி விவாகத்தைச் சூனியமாக்க முடியாது. அது தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒரு இடையூறென்றே கருதப்படும்.

விவாகத்துக்கு முன்னரிருந்தே வந்த பலட்சயமாயின் அது வெளிப்படையாகத் தோன்றாவிடின் விவாகத்தைச் சூனியமாக்குவதற்கு மூன்று வருடம் பொறுத்திருக்கவேண்டும். மூன்று வருடத்திற்குப் பின்னும் அப்பெலவீனம் நிலைத்திருந்தால் அக்காரணம் காட்டி விவாகத்தைச் சூனியமாக்கலாம். அப்பலட்சயம் வெளிப்படையானதாயிருந்தால் மூன்று வருடம் வரை காத்திராமல் உடனேயே வழக்குத் தொடரலாம்.

### கன்னித் தன்மையில் சந்தேகம்

2. விவாகமான காலத்தில் தம் மனைவி கன்னியாயில்லை யெனவும்வேறொருஆடவனுக்குக் கருத்தரித்திருக்கிறாளெனவும் கணவனறிந்தால் அவளைச் சேராமல் விடலாம். அதன்பிறகு விவாகத்தை சூனியமாக்கலாம். கன்னியாயில்லாவிடினும் கருத்தரியாவிடின் விவாகத்தைச் சூனியமாக்க முடியாது. அதுபோலவே ஒரு விதவை தம் விதவைக்காலத்தில் கருத்தரித்து அதன் பிறகு வேறொருவரை விவாகம் செய்தாலும் அவர் அதை யறிந்தவுடன் விவாகத்தைச் சூனியமாக்க வழக்குத் தொடரலாம். (தம்பதிகளிலொருவர் பிரமேக சம்பந்தமான நோய்வாய்ப்பட்டிருந்த காரணத்தால் விவாகத்தைச் சூனியமாக்க முடியாதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.) மனைவி விவாகத்துக்குமுன்பே கருத்தரித்ததையறிந்த பிறகும் அவளுடன் இல்லற வாழ்க்கை நடத்திய கணவன் விவாகத்தைச் சூனியமாக்க முடியாது.

### வலோற்காரம்

3. விவாகத்துக்கு இணங்காத தம்பதியை வலுக்கட்டாயப் படுத்தி அல்லது வலோற்காரம்பண்ணி விவாகத்தை நடத்தியிருந்தால் அத்தம்பதி விவாகத்தைச் சூனியமாக்க வழக்குத் தொடரலாம். இது ஒப்பந்தக் கொள்கையின் (Principle of Contract) அடைப்படையாயுள்ள தாகும். ஆனால் ஒருவர் தம் பெற்றோர் அல்லது உற்றாரைத் திருப்திப்படுத்துமுகமாக அவர்களின் கட்டாயத்துக்காக விவாகம் செய்தால் அது முறையான விவாகமே.

### நடுத்தீர்ப்புப் பிரிவினை

விவாகமான தம்பதிகளுக்கிடையே சச்சரவுகளும் பிரிவினையும் வருவது சகஜமே. சச்சரவு காரணமாக தம்பதிகள் மனமொத்துப் பிரிந்திருந்தாலும் சரி அல்லது ஒற்றுமையின்றிப் பிரிந்திருந்தாலும் சரி அவர்கள் விவாகக் கடமைகளுக்கும் விவாக விளைவுகளுக்கும் உட்பட்டவர்களாவார்கள். ஆனால் இக் கடமைகளினின்றும் நீங்க வேண்டுமாயின் அல்லது இவ் விளைவுகளைத் தற்காலிகமாக அகற்ற வேண்டுமாயின் அவர்கள் நடுத் தீர்ப்பு பிரிவினையைப் பெற வேண்டும். நடுத் தீர்ப்புப் பிரிவினைமூலம் தம்பதிகள் இல்லற வாழ்க்கை, ஒருங்கு கூடி வாழ்தல் ஆகிய கடமைகளின்றும் நீக்கப்படுவர். இதைவிட ஆதன உரிமைபோன்ற சில விவாக விளைவுகளையும் அகற்ற முடியும் ஆனால் அவர்கள் மணவினை முறி பெற்றவர்கள் போல் வேறு தார விவாகம் செய்துகொள்வதற்கில்லை.

இல்லற வாழ்வில் சச்சரவுக்கு உள்ளாகும் தம்பதிகள் தற்காலிகமாக இல்லற வாழ்க்கையினின்று நீங்குவும் அவர்கள் பின் ஒற்றுமைப் பட்டால் இல்லற வாழ்க்கையை நடாத்தவும் இடம் கொடுக்கும் நோக்கமாகவே நடுத்தீர்ப்புப் பிரிவினைக்கு சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. மணவினை முறி உடனேயே விவாகத்தைக் கலைக்கும். நடுத் தீர்ப்புப் பிரிவினை (Judicial Separation) தற்காலிகமாக இல்லற வாழ்க்கையை நிறுத்தி வைக்கும்.

### விவாக விளைவு ஒத்திவைப்பு

நடுத் தீர்ப்புப் பிரிவினை நீதிமன்றம் மூலமே பெறக் கூடியது. சட்டத்திலே வகுக்கப்பட்ட போதிய காரணங்கள் காட்டியே அதைப் பெறலாம். இரு தம்பதிகள் ஒப்பந்தமூலம் பிரிந்திருந்த போதிலும் அவர்களில் ஒருவர் அவ்வொப்பந்தத்தை மீறி இல்லற வாழ்க்கை கோர இடமுண்டு. அப்படிக் கோரும் தம்பதியைத்தடுக்க வேண்டுமாயின் நீதி மன்ற மூலம் நடுத் தீர்ப்புப் பிரிவினை பெற வேண்டும் ஒப்பந்தப் பிரிவினை நிலைநிற்க வேண்டுமாயின் இரு தம்பதிகளும் எப்பொழுதுமே பிரிவினையில் ஒருமித்து நிற்க வேண்டும். ஒரு தம்பதி மனம் மாறிக் கூடிவாழ விரும்பின் மற்றைய தம்பதி நடுத் தீர்ப்பு பிரிவினை மூலம் அதைத் தடுக்க முடியும். நடுத் தீர்ப்பு பிரிவினை கிடைத்தால் தம்பதிகளில் ஒருவர் மற்றவருக்கு ஆதனத்தொடர்போ அல்ல வேறு எவ்வித தொடர்போ கிடையாது. விவாக விளைவுகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படும்.

ரோமன் டச் சட்டத்திலும் எங்கள் சட்டத்திலும் பின்வரும் சந்தர்ப்பங்களில்

(10-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

செல்வி கு. இராசமணி, திருகோணமலை

கே: ஆண், பெண் என்ற பதங்கள் எப்படி வந்தன. அவை காரணச் சொற்களா, இடு குறிச் சொற்களா?

ப: காரணச் சொற்கள் தாம். ஆண் என்றால் ஆளும் தன்மை உடையவன் என்றும், பெண் என்றால்பேணும் தன்மை உடையவள் என்றும் பொருள்படும்.

ஃ

மா. சண்முகராஜா, திருகோணமலை

கே. குயுக்தியாரே, தாங்கள் யாருக்காவது தலைபணிவதுண்டா?

ப: உண்டு ஒரேயொருவருக்கு மட்டும். என் நண்பரான சலூன் தொழிலாளிக்கு மட்டும் மாதத்தில் ஒருதடவை நான் தலைபணிவதுண்டு.

ஃ

ஈழமணி, இறக்காமம்

கே: இளங்கோவைக்குறை கூறியும் அவர் இயற்றிய சிலப்பதிகாரத்தில் பிழை கண்டும் இந்தியப்பத்திராசிரியர் ஒருவர் ஆராய்ச்சி தொடங்கப்போகிருராமே இதுபற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: இது ஒன்றும் புதிய விஷயம் அல்லவே ஏற்கனவே ஏழு வருடங்களுக்கு முன்பு சுதந்திரனில் பண்டிதர் திருமலைராயர் என்பவர் ஆராய்ந்து வெளியிட்ட முடிவுதானையா இது.

ஃ

எம். கிருஷ்ணன், கண்டி

கே: 'மூன்று மாதத்துக்குள் பொதுமக்களைத் திகைக்க வைப்பேன்' என்று சொன்னபடி தஹநாயகா திடீரென்று பாராளுமன்றத்தைக் கலைத்து திகைக்க வைத்துவிட்டாரல்லவா?

ப: திகைத்தவர்கள் யார்? பொதுமக்கள் திகைக்கவில்லை. அவர்கள் எந்த நிமிஷமும் பாராளுமன்றம் கவிழலாம் என்பதை எதிர்பார்த்தார்கள். திகைத்தவர்கள் முழு மந்திரிகளும், அரை மந்திரிகளும், அங்கத்தவர்களும்தாம்.

ஃ

மெ. சிங்கராஜன், நாவலப்பிட்டி

கே: இலங்கையில் பைசிக்கிள் உற்பத்தி செய்யப்படுகின்றதா?

ப: செய்யப்படுகின்றது ஆனால் உற்பத்தி செய்யப்படவில்லை. உதிரி பாகங்களைத் தருவித்து ஒன்ருகச் சேர்த்து பொருத்து வேலை நடக்கிறது. அப்படிப் பொருத்தப்படும் பைசிக்கிளுக்கு பெயர் 'மொனரு' எனபபடும். மொனரு என்றால் சிங்களத்தில் மயில் என்று பொருள். டோச் லைட் பாட்டரிகள் முக்கால்வாசி உற்பத்தி செய்யப்படுகின்றன. ரஸாயனப் பொருட்களும், தாகத் தகடுகளும், கரித் துண்டுகளும் மட்டும் தருவிக்கப்படுகின்றன.

ஃ

கரிவளவன், செங்கலடி

கே: சைக்கிள் ஓட்ட வீரர் வலம்புரி எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

ப: தி. மு. க.வைச் சேர்ந்தவர் என்று தெரியவருகிறது. அவர் ஓடும்போது ஒரு பாக்கட்டிலிருந்து கறுப்புக் கைக்குட்டையையும் மறு பாக்கட்டிலிருந்து சிவப்புக் கைக்குட்டையையும் எடுத்து முகத்தைத் துடைத்துக் கொள்கிருர் அல்லவா? தி. மு. க. கொடியின் நிறம் கறுப்பும் சிவப்பும்தானே. சைக்கிள் ஓடும்போது அவர் கேட்க விரும்பும் பாட்டு 'தூங்காதே தம்பி தூங்காதே' என்ற எம். ஜி. ஆரின் பாட்டாகும்.

ஃ

கே. கோவிந்தன், தலவாக்கொல்லை

கே: தி. மு. க.வுக்கு யாழ்ப்பாணத்தில் செல்வாக்குண்டா?

ப: அதையேன் கேட்கிறீர்கள்? இலங்கைத் தி. மு. க. வினர் யாழ்ப்பாணம் பண்டைத்தரிப்பில் ஒரு கூட்டம் போட்டனர் கடந்த வாரம். தி. மு. க. தம்பிகளில் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் போது மதத்தை மணந்து பார்த்தார் என்பதற்காக மலைப் பிஞ்சுகள் உதிரத் தொடங்கிவிட்டன. ஒருவருக்கு மண்டை பிளந்தது! பொதுச் செயலாளர் இரா. அதிமணிக்கு கண்டைக்கால் புடைத்தது. பெட்ரோமாக்ஸ் லாம்பு பொரிபொரியாய்ப்போயிற்று. என்ருலும், இந்தக் காரியம் எந்த வகையிலும் பண்டைத்தரிப்புக்குப் பெருமை தருவதாகாது. கல்லெறிவதன் மூலம் கருத்தை மாற்றலாம் என்ற காலம் மலையேறிவிட்டது.

ஃ

எஸ். தங்கராஜன், யாழ்ப்பாணம்

கே: தமிழர்கள் தங்கள் மறைந்த தலைவர்களைக் கனம்பண்ணுவது மிகக் குறைவு எனகிறேன். நீர் என்ன சொல்லுகிறீர்?

ப: நான் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. கனம்பண்ணும் பண்பு வளர்ந்து வருகிறது. அதிகரித்து வருகிறது என்பதே புள்ளி விவரம் காட்டும் உண்மையாகும். மறைந்த மாபெரும் தமிழ்த் தலைவர் ஒருவருடைய விழா கடந்த வருடம் ஸாஹிரா கல்லூரியில் நடைபெற்றது. பேச்சாளர் உட்படப் பொது மக்கள் 17 பேர் கலந்து கொண்டு கனம்பண்ணினூர்கள் இவ்வருடம் விவேகானந்த சபையில் அதே விழா நடைபெற்றது. 45 பேர் கலந்துகொண்டார்கள் 25 லட்சம் தமிழ் மக்களைக் கொண்ட இந்த நாட்டில் அட்லீஸ்ட் ஒரு 45 பேர் சேர்ந்து அஞ்சலி செய்தது போதாதா?

ஃ

மா. செல்வநாயகம், மட்டக்களப்பு

கே: நீங்கள் ஏன் கலியாணம் செய்துகொண்டீர்கள்?

ப: எதுவும் செய்யாமல் இறப்பதைவிட அசையாவது செய்தோமே என்ற திருப்தியோடு இறக்கலாமே என்றுதான் செய்துகொண்டேன். ஒரு வகையில் அதுவும் நல்லதாய்த்தான் போயிற்று நாட்டை ஆளாவிட்டாலும் நல்ல முறையில் வீட்டையாவது ஆளப் பழகிகொண்டேனே நல்ல முறையில் கலியாணம் செய்துகொள்ளாத டட்லியும், கொத்தலாவலையும், தஹநாயகாவும் நாட்டை ஆள முடியாமல் கவிழ்ந்துவிட்டார்களே, பார்க்கவில்லையா?

ஃ

எம். ஐ. மன்சூர், காத்தான்குடி

கே: சினிமா நடிகர் எம். எம். முஸ்தபா இலங்கை வந்துள்ளாரே, அவரைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: அருமையான நடிகர். பண்போடு பழகுகிருர். தமிழ்ப் பற்றும் கலைப் பற்றும் அவரிடம் நிரம்ப மிளிர்கின்றன நண்பர்களோடு சம்பாஷிக்கும்போது காணப்படும் இறுக்கமும் சுருக்கமும்மேடையில் பேசும் போது இல்லை. கொஞ்சம் வளவளத்துக்கொண்டே போகிருர்.

ஃ

எல். சீனிவாசன், கிளிநொச்சி.

கே: ராஜாஜி எதற்காக இந்தத் தள்ளாத வயதில் சுதந்திரக் கட்சியை தோற்றுவித்திருக்கிருர்?

ப: தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தி.மு க.வுக்கு உதவி புரிவதற்காக. அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரசும் சுதந்திரக் கட்சியும் பிடுங்குப்பட்டு ஒரே கோஷ்டி வாக்குகளைப் பிரிக்க தி. மு. க. இடையிலே அடித்துக்கொண்டு அரசாங்கம் அமைக்கப் போகிறது. இந்த உண்மையை அறிந்தபடியினால்தான் அறிஞர் அண்ணு சுதந்திரக் கட்சியைத் தீவிரமாகத் தாக்காமல் கண்டுங் காணுமலும் விட்டுவருகிருர்.

| |
|---|
| மிஸ்டர் குயுக்தியார் |
| C/o சுதந்திரன். |
| த. பெ. 1183 |
| கொழும்பு.—12 |

ஃ

செல்லி கே. வஸந்தராணி, வட்டுக்கோட்டை.

கே: மச்சத்தைப் போக்க மருந்து உண்டா?

ப: மருந்து எதற்கு? மரக்கறியைக் கைக் கொண்டால் மச்சம் தானகவே போய் விடுகிறது.

ஃ

கே. ஆறுமுகம், யாழ்ப்பாணம்.

கே: இலங்கையில் அதிகமான கவிஞர்கள் எங்கிருக்கிருர்கள்?

ப: மட்டக்களப்பில்தான். இளங் கவிஞர்கள் அங்கு அபரிமிதமாகத் தோன்றி வருகிருர்கள். மட்டக்களப்பில் உள்ள முஸ்லிம் பெண்கள் மட்டுமல்ல, மீன்கள்கூட கவி பாடுகின்றனவே.

ஃ

கே. டொமினிக், யாழ்ப்பாணம்.

கே: வெறுங் கையால் முழம் போட முடியுமா?

ப: சாதாரணமாக முடியாது. ஆனல் தமிழ் மக்களை முழு முட்டாள்கள் என்று எண்ணும் கொம்யூனிஸ்டுகள் வெறும் கையால் முழம் போட முடியும் என்றுசாதிக்கப்போகிருர்களாம்! தமிழ் மக்களுக்கு பிரதேச ஆட்சி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையின்மீது அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் பகுதிகளில் போட்டியிடப் போகிருர்களாம். தமிழ்ப் பிரதேசம், சிங்களப் பிரதேசம் என்று பேசினல் அது வடிகட்டிய வகுப்புவாதம் என்று குதர்க்க வாதமிடும் இந்த நாசாபிமானிகள் இப்போது பிரதேச ஆட்சி கோரப்போகிருர்களாம் பிரதேசம் இல்லாமல் பிரதேச ஆட்சி கோருவது எப்படி? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவார்களா? கொஞ்சம் பொறுங்கள் மாஸ்கோவுக்கு எழுதி விடை அறிந்து சொல்லுவார்கள்.

ஃ

த. சங்கரதாஸ், மட்டக்களப்பு.

கே: மட்டக்களப்பில் இளம் வழக்கறிஞர் யார் என்று [illegible] குயுக்தியாரே?

ப: பழைய பரம்பரையைச் சேர்ந்தவர்களை விட்டுவிடுவோம். எதிர்காலத்தைப் பார்த்தால் இன்றைய இளம் வழக்கறிஞர்களில் சிலர் இப்போதுதான் திறமையைச் சம்பாதித்து வாழ்க்கையை வளமபடுத்திக்கொண்டு வருகிருர்கள். அவர்களையும் பாராளுமன்றத் தேர்தல் என்ற வழுக்கு மரத்தில் ஏற்றி தலைகுப்புறக்கவிழ்த்து விடப்பார்க்கின்றன, அவர் தம் நண்பர்கள் என்று வேஷம் போடும் செந்நிற ஓநாய்கள் சில.

ஃ

த. சந்திரமௌலீசன், திருமலை.

கே: அடுத்த பொதுத் தேர்தலில் எந்தக் கட்சி அரசாங்கம் அமைக்கும்?

ப: 151 அங்கத்தவர்களைக் கொண்ட புதுப் பாராளுமன்றத்தில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காது கூட்டு அரசாங்கம்தான் ஏற்பட வேண்டி வரும். தமிழர் மட்டும் ஒரே கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தனுப்புவார்களானல் எவ்வளவோ நல்ல காரியங்களைச் சாதிக்கக்கூடியதாக இருக்கும்.


## ஆஸ்த்மாவால் அவதிப்படும் அன்பர்களுக்கு....

ஆஸ்த்மா என்ற தொய்வு ஏற்படுவதற்கு மார்ச்சளி, மூக்கடைப்பு, இருமல், காலநிலை, மூச்சடைப்பு, மூந்திரக் கோளாறுகள் என்பன போன்ற பல காரணங்கள் உண்டு காரணம் எதுவானலும்........................

## ஆஸ்த்மடிக்கா

வியாதியைப் பூரணமாகக் குணமாக்கும் என்பது நம் உத்திரவாதம்.

பாவித்த அன்பர்கள் கூறுவதைக் கேளுங்கள். வணக்கத்துக்குரிய பிதா தோமஸ் (டிரெகடர் ஜெனரல்) ரோசரி ஆஸ்ரமம் வாசவிளான் எழுதுகிருர்.

தங்களது ஆஸ்த்மடிக்காவைப் பாவித்ததில் என் வியாதியஸ்தர் பெரிதும் குணமடைந்துள்ளார் என்பதை—நன்றியுடன் தெரிவிக்கிறேன்—என் வாழ்த்துக்கள்— ஆஸ்த்மடிக்காவுக்கு

Rev. Fr. B. A. Thomas (O. M. I.)
Rosary Asthrama,
VASAVILAN.

எனக்கு வயது 50 க்கு மேலாகிறது—கொழும்பிலுள்ள பெரிய கம்பெனி ஒன்றில் சித்திர விசிகையாக Draughtsman) வேலை பார்க்கிறேன்.

சென்ற 20 வருட காலமாக ஆஸ்த்மா—மாரடைப்பு, மார்ச்சளி இரவில் தூக்கமின்மை இவைகளால் பெரும் கஷ்டப் பட்டுள்ளேன நான் காணுத டாக்டர்கள் இல்லை. எவ்வளவோ ஊசிகள் போட்டும் பலனில்லாமல்இருந்த எனக்கு ஆஸ்த்மடிக்கா 3 பாட்டில்கள் பூரண குணமளித்துள்ளது. என்பதை கடவுள் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்.

எஸ். ஏ. தோமஸ், 87, தெலன்கபாத ரோட், வத்தளை.

S. A. Thomas, 87, Telangapatha Road, WATTALA.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, இருமல் இவைகளுக்கு ஆஸ்மடிக்கா ஒரு நவீன சஞ்சீவி.

3 அல்லது 4 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண குணமடையும் என்பது உத்திரவாதம்.

ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-
ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல் ரூ. 15/-
(மிக உபாதைத் தரக்கூடிய ஆஸ்த்மாவுக்கு)

வி. பி. பி. தனி

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்

## மொடர்ன் கிளினிக்,

255, காலி ரோட்,
பம்பலப்பிட்டிய கன்வண்ட் எதிரில்
பம்பலப்பிட்டிய
கொழும்பு—4.

கடுகண்ணுவையில் கிடைக்குமிடம்:

டி. பி. குஞ்சிமூசா & கோ,
கடுகண்ணுவை.

சம்மாந்துறையில் கிடைக்குமிடம்:

எம். வெள்ளத்தம்பி,
புடவை வியாபாரம்,
3-ம் குறிச்சி,
சம்மாந்துறை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

**"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"**

கொழும்பிலே சோவியத்து ஒன்றியம் ஒரு பொருட்காட்சியினை நடத்தியது. தமிழர்கள் யாவரும் மகிழத்தக்கதொரு செயல் அங்குகாணப்பட்டது. எல்லா விவரங்களும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் எனும் மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தன. தமிழ் மொழி பெயர்ப்புப் பெரும்பாலும் நன்ருகவிருந்தது. எனினும் பொருத்தமற்ற சொற்களும் பிழையான சொற்களுஞ் சில அங்கு இருக்கவே செய்தன. தமிழ் எழுத்தாளர்களே Form எனும் சொல்லைப் யாரம் என்று வழங்கும்பொழுது பிறருடைய மொழி பெயர்ப்பைப் பற்றி குறை கூறுதல் பொருத்தமாகத் தோற்றவில்லை.

தமிழுக்குஞ் சிங்களத்துக்கும் ஆங்கிலத்துக்குஞ் சரி நிகர் சமத்துவம் அளித்த சோவியத்து ஒன்றியத்தைப் பாராட்டுகிருேம். முன்னர் மக்கள் சீன நடத்திய காட்சியிலே தமிழுக்குப் போதிய இடம் அளிக்கப்படவில்லை என்று மக்கள் கூறிய குறைக்குச் சோவியத்து ஒன்றியம் இடங் கொடுக்காதது மகிழ்ச்சிக்குரியது. சோவியத்து ஒன்றியத்தின் இப்பெருஞ் செயலை-நீதியான செயலை-பிற நாடுகள் யாவும் பின்பற்றும் என்று எண்ணுகிருேம்.

## பேராதனைப் பூந்தோட்டம்

ஆங்கிலமுஞ் சிங்களமுந் தெரியாத தமிழ் மக்கள் இலங்கையிலே பெருந்தொகையினராகவுளர் என்பதையறிந்து அவர்களுக்கும் பயன்படத்தக்க முறையிற் பிற நாடாகிய சோவியத்து ஒன்றியம் தன் காட்சியினை அமைத்த இந்த இலங்கையிலே-நம்முடைய நாட்டிலே நமது அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? பேராதனையிலுள்ள பூந்தோட்டத்துக்கு அண்மையிலே சென்றிருந்த தொண்டர்கள் சிலர் பெருந்துன்பப்பட்டனர். தங்கள் துன்பத்தைத் தாங்க முடியாமல் ஆத்திரம் பொங்க அவர்கள் வரைந்த கடிதம் முழுவதையும் இங்கு தருதற்கு இடம் போதாது.

### கடிதம்:
### இதுவா செய்வது?

"பேராதனைப் பூந்தோட்டம் இந் நாட்டுத் தமிழருக்கும் உரியதுதானே! சிங்களமும் ஆங்கிலமுந் தெரியாதவர்கள் அங்கு போனல் அங்கு எழுதப்பட்டிருப்பவற்றை எவ்வாறு அறிவார்கள். பல இலட்சக்கணக்கான தமிழருடைய மொழி ஏன் அப் பூந்தோட்டத்தில் இடம்பெறவில்லை. இந்த அநியாயத்தைக் கேட்பாரில்லையா? சிங்களம் உத்தியோக மொழி என்றல், அது தெரியாத தமிழர் இங்கு வாழ முடியாதா? இந்த நாட்டில ஆங்கிலத்துக்குரிய உரிமைதானும் தமிழுக்கு இல்லையா? சிங்களத்தோடு ஆங்கிலத்தை எழுதியவர்கள் தமிழையும் ஏன் சேர்க்கவில்லை. தமிழர் செல்லும் இடம் எங்கும் பார்க்கும் இடம் எங்கும் தமிழை ஒதுக்கப்படும காட்சியைத் தானு காட்டல் வேண்டும்..." இது அத் தொண்டர்களின் துன்பக் குரலில் ஒரு பகுதி.

இந்தத்தொண்டர்கள்போலத் தமிழ் ஒதுக்கப்படும் இடங்களையும், அலுவலகங்களையும் எமக்கு அறிவிக்குமாறு ஏனைய தொண்டர்களுக்கு நினைவூட்டுகிருேம்.

அநீதி செய்பவர்கள் அழிவார் என்று தமிழர்கள் கண்மூடி மௌனிகளாயிருத்தல் கூடாது நாம் இழந்த உரிமைகளைப் பெறுதற்கு அல்லும் பகலும் நல்வழியிலே முயலுதல் நம் கடமை. நாம் செய்யத்தக்கவற்றுள்ளே மிகச் சிறந்தது எமது கருமங்கள் யாவற்றையும் தமிழிலே செய்தலே இதற்காகவே தமிழியக்கந் தொண்டாற்றுகிறது. ஆயிரக்கணக்கிலே தமிழியக்கத்திலே சேருங்கள் தமிழிலே தங்கள் அலுவல்களைச் செய்வோம். என்கின்றவர்கள் யாவரும் சேரலாம். உடனே உங்கள் பெயர் முகவரி தொழில் வயது முதலியவற்றை எழுதிக் கையொப்பமிட்டுத் தமிழியக்கம், மே/பா சுதந்திரன், த. பொ. எண் 1183, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்புங்கள்.

அவசரகால நிலைமை ஒழிக்கப்பட்டபடியால் தமிழியக்க வாரத்தைத் தைப்பொங்கல் விழா என்று ஜனவரி 14 ஆம் தேதி முதல் ஒரு வாரத்துக்கு நடத்த எண்ணுகிறோம். தமிழியக்கத் தொண்டர்கள் ஒவ்வோரூரிலும் தமிழியக்க வாரத்தை கொண்டாட ஒழுங்கு செய்தல் வேண்டும். தாங்கள் செய்யும் ஒழுங்குகளை உடனே அறிவிக்குமாறு ஒவ்வோரூரிலும் உள்ள தமிழியத் தொண்டர்களையும் பொது நிலையங்களின் நிருவாகிகளையும் வேண்டிக் கொள்ளுகிருேம். தமிழியக்கத் தொண்டர்கள் மட்டுமன்றி மாணவர் மன்றங்கள், சனசமூக நிலையங்கள், கிராமச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள், தமிழ்ச் சங்கங்கள், அரசியற் கட்சிகள், வாலிப முன்னணிகள், திராவிட முன்னேற்றக் கழகங்கள் முதலியவற்றின் நிருவாகிகளையும் தமிழியக்க வாரத்தினைக் கொண்டாடித் தமிழை வாழவைக்க முன்வருமாறு கேட்கிருேம்.

தமிழ்ப் பெரு மக்களே: இதுவரையில் இலங்கை காணுத முறையிலே தமிழியக்க வாரத்தைக் எங்குங் கொண்டாடித் தமிழைப் போற்றுவோம் வாரீர்! வாரீர்!!

### தமிழியக்கத் தொண்டர்கள்

281. எம். கிருஷ்ணசாமி, டிக்கோயா. 282 எஸ். சிவலிங்கம், டிக்கோயா. 283. பி. கோவிந்தராசு, டிக்கோயா 284 பி. முத்துசாமி, டிக்கோயா. 285. எம். நடராசு, டிக்கோயா.

286. கே மருதமுத்து, டிக்கோயா. 287 டி. பிச்சப்பிள்ளை, டிக்கோயா. 288 ஏ. கிருஷ்ணசாமி, டிக்கோயா. 289. ஏ. இராமையா, டிக்கோயா. 290. ஏ. பிரான்சிசு, டிக்கோயா. 291. ஏ. அருள்தாசு, டிக்கோயா. 292. எம். சுப்பிரமணியன், டிக்கோயா. 293. எம். மருதை, டிக்கோயா. 294. எம். செயராசு, டிக்கோயா. 295. கே. கண்ணன், டிக்கோயா.

296. கே. கலியபெருமாள், டிக்கோயா. 297. ஈ பஞ்சிராசு, டிக்கோயா. 298. எம். பிரான்சிசு, டிக்கோயா. 299. பி. ராசேஸ்வரி, டிக்கோயா. 300. எஸ். சீதாலெட்சுமி, டிக்கோயா. 301. வி. ரெசிமேரி, டிக்கோயா.


மிகச் சுத்தமான பிரபல மருந்து மூலிகைகளிலிருந்து சாஸ்திர ரீதியாகத் தயாரிக்கப்பட்ட

**ஆயுர்வேத மருந்துகள்**

- சியாவனப் பிரஸ் அவால கல்ஸியம் மற்றும் அஷ்டவர்கங்களும் கலந்தது
எல்லா வயதினருக்கும், நோயினின்று உடல் தேறும் எல்லாக் கட்டங்களிலும் எல்லாக் காலங்களிலும் குணமளிக்கும். சதா உஷ்ணப் பிரதேசத்திற்குரிய ஆயுர்வேத டாணிக் மருந்து.
- குல்கண்ட் ஜெலி கல்ஸியத்துடன் கூடியது. வெள்ளியும் ஏலக்காயும் வன்சலொச்சானும் சேர்ந்தது சகல வித உஷ்ணப் பிரதேச கோளாறுகளையும் போக்கடிக்கின்றது. கண்ணிலும், உடம்பிலுமுள்ள அரிப்பையும் எரிச்சலையும் அதோடு மலச்சிக்கலையும் இல்லாமலாக்குகின்றது. இரத்தத்தை சுத்திகரித்து மூளையைக் குளிர்மைப் படுத்துகிறது. இரத்தம் கசியும் மூல நோய்க்குச் சிறந்தது.
- பெமிப் பிளக்ஸ் வெள்ளி மயமான வில்லைகள்
வெள்ளை படுதலுக்கும் அங்க சம்பந்தமல்லாத சீழ் கண்டிக்கவும் இத்தியாதியான நோய்கள் எப்படிக் கடுமையானதாயினும் கண்டிக்கவல்லது.

அதோடு பலதரப்பட்ட ஆயுர்வேத மருந்துக்களும் எங்களிடம் உண்டு. பம்பாய் மெஸர்ஸ் சரக்பந்தர் ஸ்தாபனத்தாரால் உற்பத்தி செய்யப்படுவன.

விநியோகஸ்தர்கள்:

**சிர்ருல் கதீர் அன் கம்பெனி,**

41&43, இரண்டாம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.

போன்: 6009&3710



தலை முடியை சிவுவதல்ல உங்கள் பிரச்னை!

நீங்கள் விரும்புவதுபோல்

தலை முடியைச் சிவுவது எப்படி என்பதுதான்!

**நேத்திர லோக**

உங்கள் பிரச்னையை திர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

**நேத்திரலோக தைலம்**

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும்தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பினிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல, காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

**டபிள்யு. கே. ஜினதாஸ,**

ஆயுர்வேத வைத்தியர்

161, நோறிஸ்ரேட், புறக்கோட்டை,

கொழும்பு


அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம்:

# பிரதிநிதிகள் வெளிநடப்பு!

## கண்டிக் கூட்டத்தில் நிகழ்ந்தது

## பின்னர் நிர்வாகிகள் ஏகமனதாகத் தெரிவு

## புதுச் சங்கம் தொடங்க முழுமூச்சு முயற்சி—முன்னுள் நிர்வாகி வழக்குத் தொடரத் திட்டம்

(சுதந்திரன் கண்டி நிருபர்)

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் சபைக் கூட்டம் கடந்த 5-ந் தேதி கண்டியில் நடைபெற்றபோது அங்கு சமூகமளித்திருந்த பிரதிநிதிகள் சிலர் 'தகராறு' காரணமாக வெளியேறிய பின்னர் புது நிர்வாகிகள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கண்டிக் கூட்டத்தின் பெறுபேருக ஒரு சாரார் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திலிருந்து அடியோடு விலகி தமிழ அரசினர் ஆசிரியர் சங்கம் என்ற பெயரில் புதுச் சங்கம் ஒன்றைத் துவக்கும் முயற்சியில் முழு மூச்சாக ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

கண்டிக் கூட்டத்தின் மற்றொரு விளைவு வழக்கு என்று அறியவருகிறது. கூட்டத்துக்கு முன்னர் ஒரு சாராரால் விடுக்கப்பட்ட நீண்ட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில விஷயங்கள் தம்மை அவமானப்படுத்துவனவாக இருப்பதாகக் கருதும் முன்னுள் நிர்வாகி ஒருவர் மேற்படி அறிக்கை வெளியிட்டவர்கள் மேல் மான நஷ்ட வழக்குத் தொடரத் திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது.

### வெளி நடப்பு

அ. இ. அ. பா. த. ஆ. சங்கப் பொதுச் சபைக் கூட்டம் உதவிப் பொதுச் செயலாளராகவிருந்த திரு வ. க. ஈசுரபாதத்தால் கண்டி சிரேஷ்ட பாடசாலை மண்டபத்தில கூட்டப்பட்டது. மொத்தம் 196 பேர் கொண்ட சபையின் கூட்டத்துக்கு 64 பிரதிநிதிகளே சமுகமளித்தனர். அனுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு கிளைகள் தமது பிரதிநிதிகளை அனுப்ப முடியாமையைத் தெரிவித்துக் கூட்டத்தை ஒத்திவைக்குமாறு கேட்டு எழுதியிருந்தன. இது விஷயம் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எப்படியும் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது என்றே முடிவு செய்யப்பட்டது. இதை ஆட்சேபித்து, அதாவது இந்தப் புறக்கணிப்பு மாகாணப் பிரிவினைக்கு வித்து என்று கூறிச் சில பிரதிநிதிகள் வெளிநடப்பு செய்தார்கள்.

பொருளாளர் திரு எஸ். குருகுலசிங்கமும், உதவிப் பொதுச் செயலாளர் திரு வ. க. ஈசுரபாதமும் ராஜினாமாச் செய்து வெளியேறினர்கள். உடனே திரு அ. பொன்னம்பலம் தற்காலிக செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். சங்க உப தலைவர் திரு பி. ஈ. டி. ஐயாத்துரை தலைமையில் புது நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது.

### புகார்

நிர்வாகிகள் தெரிவு 'கோரம்' இல்லாமல் நடைபெற்றது என்று ஒரு புகாரும், கூட்ட அழைப்பு அனுப்பப்படாத கொழும்புக் கிளைப் பிரதிநிதிகள் எப்படிக் கூட்டத்துக்கு சமுகமளித்தனர் என்று இன்னொரு ஆசங்கையும் ஆசிரியர் வட்டாரத்தில் அடிபடுகின்றன.

இதற்கிடையில் புதுச் சங்கம் ஆரம்பிக்கும் முயற்சியும் மான நஷ்ட வழக்குத் தொடரும் விஷயமும் தீவிரமடைந்துவருகின்றன. புதுச் சங்கம் அ. இ. அ. பா. த. ஆ. சங்கத்தின் தலைமை அலுவலகம் இருந்த அதே முகவரியிலிருந்து இயங்கும் என்றும் அதன் கிளைகள் இலங்கை

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவில் திரு. இராசதுரை முழக்கம்:

# தமிழினத்தின் ஏகப் பிரதிநிதி தமிழரசுக் கட்சி

# மறுக்க முடியுமா இதை?

## கடந்த தேர்தலில் பதிவான வாக்குகளும் கிடைத்த வெற்றியுமே சான்று பகர்கின்றன

## வடக்கையும் கிழக்கையும் மலைநாட்டையும் ஒருமுனைப்படுத்திய ஒரே கட்சி இதுதான்

முதல் தடவை முல்லைத் தீவுக்கு வந்திருக்கின்றேன். சூறுவளியும்-கொந்தளிப்பும் நிலவும் தேர்தல் சமயத்தில் வந்திருக்கின்றேன். கல்லை வீசியோ-கனியையச் சுழற்றியோ எம்மையும்-எமது இயக்கத்தினரையும் கலைத்துவிட முடியாது. அஞ்சி அஞ்சிச் சாகும் கோழைகளல்ல நாம். இந்த நாட்டு முதல் மைச்சராகவிருந்த பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயகாவே அஞ்சும் மனிதனுக இருந்தவன நான். அச்சமென்பதில்லை எமக்கு. தனிச் சிங்கள சட்டத்தை கொண்டுவந்த பிரதமரை—சிங்கள சிறீ எழுத்தை மோட்டார் வண்டிகளில் பொறித்த பிரதமர் பண்டாரநாயகாவை-என் தமிழ் எழுத்து பொறித்த மோட்டாரில் ஏற்றிப் பவனி சென்றவன் நான்.

### ஒற்றுமை

தமிழ் மக்கள் ஒன்றுபடாவிட்டால் ஒற்றுமைப்படாவிட்டால் வாழ்வில்லை; விமோசனம் பிறக்காது; விடிவு கிடைக்காது என்று தமிழ் மக்கள் சிலர் கூப்பாடு போடுகிறார்கள். தமிழ் மக்கள் ஒன்றுபடுவது என்பது தமிழ்த் தலைவர்களைப் பார்த்து கூறும் கூற்று, அல்லது தமிழ் சமூகத்தைப் பார்த்துக் கூறும் கூற்று என்பதை நாம் ஆராய வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்கள் கடந்தகாலத் தவறுகளை மறந்து-விட்ட பிழைகளை மறந்து-என் தமிழ்த் தலைவர்களென்று தாம் நம்பியவர்கள் தமக்கிழைத்த பெரும் துரோகத்தை நினைத்து ஒன்றுபட முனைகிறார்கள். அதற்கு முன் வருகிறார்கள்; முயல்கிறார்கள்.

### விடுதலை இயக்கம்

தமிழ் மக்களின் அரசியல் விடுதலை, பொருளாதார சுதந்திரம் ஒரு குறிக்கப்பட்ட மாகாணத்து தமிழ் மக்களினுலோ—அல்லது மாவட்ட தமிழ் மக்களினுலோ—அன்றி தமிழ் மக்களின் ஒருசாராரினுலோ



திரு. செ. இராசதுரை

கிடைக்கக்கூடியதல்ல. தமிழ் மக்கள் இலங்கையில் எங்கெங்கு வாழ்ந்தாலும் ஒன்றுபட்டு உழைக்கும் ஒற்றுமையில்தான் அவை கிடைப்பது தங்கியிருக்கின்றது. இத்தகைய ஒற்றுமையை தமிழ் சமூகத்தில் உருவாக்கும் இயக்கத்தினுலேயே தமிழ் மக்கள் விடுதலை காண முடியும். அத்தகைய இயக்கம் தமிழ் மக்களிடமுண்டா? ஆம், உண்டு.

### கட்சியின் மகத்தான சாதனை

வட மாகாணத் தமிழன், கிழக்கு மாகாணத் தமிழன், மலைநாட்டுத் தமிழன்-இன்னும் வேண்டுமானுல மட்டக்களப்புத் தமிழன், மன்னார் தமிழன், வன்னித் தமிழன், திருமலைத் தமிழன் என்று பலபடச் சிதறிக் கிடந்த தமிழனை—

இந்து மதத் தமிழன், கிறிஸ்தவத் தமிழன், தமிழ் பேசும் இஸ்லாமிய சகோதரன் என்று மதத்தினுல் பிரிந்து கிடந்த தமிழ் பேசும் மக்களை—

உயர்ந்த ஜாதித் தமிழன், தாழ்ந்த ஜாதித் தமிழன் என்று பிரிந்திருந்த தமிழனை—

படித்த தமிழன், படித்தறியாப் பாமரத் தமிழன் என்று பெரிது, சிறிது பார்த்திருந்த தமிழனை—

இன்னும் பணக்காரத் தமிழன், பிச்சைக்காரத் தமிழன் என்று அந்தஸ்தினுல் பிளவுண்டு கிடந்த தமிழனை ஒன்றுபடுத்திய ஒரேயொரு அரசியல் இயக்கம் இந்த நாட்டில் தமிழரசுக் கட்சியைத் தவிர வேறொன்றில்லை. தமிழரசுக் கட்சியினுல் உருவாக்கப்பட்ட இந்த ஒற்றுமை பல நூற்றுண்டுக்காலச் சாதனைகளில் ஒன்ருகும்.

### தேர்தல் முடிவு காட்டும் உண்மை

இலங்கையில் தமிழரசுக் கட்சியின் கொள்கைகள் பரவாத தமிழ்ப் பிரதேசங்களே இல்லை. தமிழ்ப் பிரதேசங்களில் தமிழரசுக் கட்சியை ஆதரிக்கும் மக்கள் தொகை பல லட்சங்களாகும்.

1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் முடிவுகளை வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் கவனித்துப் பாருங்கள். வடக்கு மாகாணத்தில் ஒன்பது தொகுதிகள், கிழக்கு மாகாணத்தில் ஏழு தொகுதிகள். மொத்தம் பதினுறு தொகுதிகளில் சென்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி பதினுன்கு தொகுதிகளில் போட்டியிட்டு, பத்து தொகுதிகளில் வெற்றியீட்டியது. ஒரு தொகுதியில் 106 வாக்குகளால் தோற்றது. தமிழ் மக்களின் ஒற்றுமையை இத் தேர்தல் முடிவு காட்டவில்லையா?

### தமிழரசுக் கட்சிக்கு பெரும் ஆதரவு

அத்தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகர்களுக்கு சுமார் லட்சத்து நாற்பத்தாருயிரம் வாக்குகள் கிடைத்தன. வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்களிடம் இவ்வளவு பெருந்தொகையான வாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சி தமிழரசுக் கட்சியைத் தவிர வேறொன்றுமில்லை. இவ்வாக்குகளின் எண்ணிக்கை தமிழ் மக்களின் ஒற்றுமையின் விகிதாசாரத்தைக் காட்டவில்லையா?

லட்சத்து நாற்பத்தாருயிரம் வாக்குகளாயின்-ஒரு

(9-ம் பக்கம் பார்க்க)

## கடையைக் கட்டுங்கோ

'யாழ்ப்பாணன்'

கவுஞ்சில்முடிஞ்சு போச்சுதையா கடையைக் கட்டுங்கோ
கனக்கவெட்டிப் புடுங்கிநீங்க களைஞ்சுப் போனீங்கோ
பவுண்முடிச்சுப் பைநிரம்பத் திணிச்சுக் கொண்டீங்கோ
பாழாய்ப்போன கவுஞ்சில்போதும் கடையைக் கட்டுங்கோ

பட்டம்பதவி வேட்டைக்காகப் பாய்ஞ்சு போனீங்கோ
பவுண்தவிசி லேறநீங்கள் பாசம் கொண்டீங்கோ
அட்டதிக்கும் நும்பபேரே ஆலாய்ப் பறக்குது
அண்ணமாரே கவுஞ்சில்போதும் திரும்பி வாருங்கோ

புத்தன்கொள்கை வெட்டிநீங்கள் குழியில் போட்டீங்கோ
போதும்போதும் என்னநீங்கள் புரட்சி செய்திங்கோ?
எத்தன்பண்டா உயிர்க்கு நீங்கள் உலையும் வைத்திங்கோ
ஏழைஅன்று கொட்டும்கண்ணிர் இன்று பாருங்கோ

நெல்லுப்போட்டால் புல்லுமுளைக்குது நம்ம நாட்டிலே
நீரும்வாய்க்கால் தேங்கிப்பாஞ்சுது நும்ம பேச்சிலே
உல்லாசமாப் பவனிபோன மவா ராசக்களே
உளுத்தகவுஞ்சில் போச்சுதப்பா நடையைக் கட்டுங்கோ

அடுத்ததேர்தல் கிட்டிவருகுது அண்ணை மார்களே
ஆனைபூனை புள்ளியெல்லாம் அச்சில் ஏறுது
படுத்துத்தூங்கிக் காலம்போக்கில் பழுது பாருங்கோ
பாரைஆளப் பிரந்தராசா பறந்து வாருங்கோ

வரிசை: 2 கலைஞர்: 4 அறிமுகப்படுத்துகிறோம்



# புல்லாங்குழல் கானம் பொழியும் நமசிவாயம்

(காந்தன்)

கண்ணன் குழலிசை கேட்டு மாந்தரென்ன, மாக்களென்ன, மண்ணுலகும் விண்ணுலகுமே மெய் மறந்து போனதாக வழிவழியாகப் பலரும் சொல்லக் கேட்கிறோம். அது அன்று. ஆனல் இன்று—

வட இலங்கை நமசிவாயம் புன்னுகவராளியில் வாசிக்கும்பொழுது சபையிலுள்ள தலைகள் அத்தனையுமே தம்மை மறந்து ஆடும். வட இலங்கையில கலா நிகழ்ச்சிகள், கல்லூரி விழாக்கள், இசைக் கச்சேரிகள் ஆகியவற்றில் தேனினுமினிய, தெவிட்டாத புல்லாங்குழல் இசை பின்னணியாக வந்தால் அது திரு நமசிவாயத்தின் வாயிலிருந்து உதித்து வருகின்றது என்பதுதான் அர்த்தம்.

திரு நமசிவாயத்தின் சொந்த ஊர்: யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள திருநெல்வேலி; பெற்றோர்: அருணசலம் தம்பதிகள். பிறந்த தேதி: 5-2-1926 இளமையில் கற்ற பாடசாலைகள்: திருநெல்வேலி சைவ வித்தியாசாலை; பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவை.

1947-48-ல் பலாலி அரசினர் பயிற்சிக் கலாசாலையில் ஒரு ஆசிரியராகப் பயிற்றப் பட்டபின், அடுத்த ஆண்டில் 'வர்தா' கல்வித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு கோயம்புத்தூரிலும் ஓராண்டு பயிற்சிபெற்றுள்ளார். இப்போது இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக கடமை புரிகிருர்.

கோயம்புத்தூரில் நடந்த ஒரு சம்பவம் தான் இசைத் துறையில் இவர் இறங்க காரணமாக இருந்தது. அவருக்கு உறுதியும், தம் திறமையில் நம்பிக்கையும் அளித்த அந்த நிகழ்ச்சியை அவரே சொல்லுகிருர்:- "1949-ல் கோயம்புத்தூர், பெரிய நாயக்கன் பாளையம் இராமகிருஷ்ண மிஷன் பள்ளியில் ஒரு நடன நிகழ்ச்சி. பின்னணி வாத்திய கோஷ்டியில் புல்லாங்குழல் வாசிக்கும்படி என்னை வற்புறுத்தினர். போதிய ஞானம் அதில் இல்லாததால் அப்போது பயமாக இருந்தது. ஆனலும் பதுங்கி இருந்துவாசித்தேன். திடீரென இடையில் ஏனைய வாத்தியங்கள் நின்றுவிட்டன. ஆனலும் என்னை மறந்து புன்னுகவராளியில் வாசித்துக்கொண்டிருந்தேன். எல்லோரையும் கவர்ந்துவிட்டது. விழாவை அமைத்தவர் விரைந்துவந்து என் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக்கொண்டார்! என் கண்களில் நீர் துளிர்த்து விட்டது."

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் இசையை முறையாகக் கற்றுக்கொள்ளத் தொடங்கினர் திரு நமசிவாயம். இத்துறையில் இவருக்குப் பயிற்சியளித்த குரு: பிரபல நாதஸ்வர வித்துவான் திரு எஸ். பி. எம். திருநாவுக்கரசு ஆவர்.

முறையாகப் பயின்றுசிறப்பாக வாசிக்கும் திரு நமசிவாயம் இலங்கை வானெலியிலும் தமது திறமையை அவ்வப்போது காட்டி வருகிருர்.

திரு நமசிவாயம் புல்லாங்குழல் வாசித்துப் புகழீட்டி வருவது ஒருபுறம். மறு புறத்தில் இவர் ஒரு 'மேக் அப்' கலை நிபுணராகவும் விளங்குகிருர். நடிகர்களுக்கு ஒப்பனை செய்து விடுவதில் வல்லவராகத் திகழும் இவரை நாடகக்காரர்கள் பயன்படுத்திக்கொள்ள முந்துகிருர்கள்.

இவரது பொழுதுபோக்குகள்: கலை நிகழ்ச்சிகளுக்குச் செல்வது: சித்திரம் தீட்டுவது

பிடித்தவை: நேர்மையான பாராட்டு; அடக்கம்.

வெறுப்பது: படாடோபம்.

அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானல் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

ஸ்பேமடோன் கொம்பவுண்ட்
(Spermatone Compound)

ஒரு பிரபல ஜேர்மன் டாக்டரின் மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,
டாக்டர்

'மோடர்ன் கிலினிக்'
(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு 4.
பம்பலப்பிட்டிய கண்வண்ட் எதிரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல்:

# விஞ்ஞான வளர்ச்சிக்கு தெளிவான சிந்தனையும் தருக்கத் திறனும் தேவை

## இரண்டும் இல்லாததாலேயே எகிப்தின் அறிவியல்துறை மழுங்கியது

### உபயோக விஞ்ஞானத்தில் மட்டும் அவர்கள் கருத்தைச் செலுத்தினார்கள்

பூர்வ உலகத்துப் பேரரசி என்று சிறந்தோங்கி வாழ்ந்து வந்தது எகிப்து நாடு—700 ஆண்டுகளுக்கு முன்னர். நீல நதி எகிப்தின் ஜீவ நதி. அதன் நிலப்பரப்பில் லட்சக்கணக்கான அடிமைகள் கோதுமை விளையும் வயல்களையும், மனோகரமான தோட்டங்களையும் விஸ்தீரணமான சோலைகளையும் பரிபாலித்து வந்தார்கள்.

அதன் அகன்ற நீர்ப்பரப்பிலே பல தேசங்களிலிருந்து திரவியங்கள் திரட்டி வந்த நாவாய்கள் திரள் திரளாக மிதந்துகொண்டிருந்தன. நீல நதியின் பள்ளத்தாக்கில் பெரியதொரு சாம்ராஜ்யம் ஒரு காலத்தில் வல்லரசாக விளங்கியது. அயல் அரசுகளை தனது ஆதிக்கத்தின் கீழ் இருத்தி அது அடக்கி ஆண்டுவந்தது. பல திசைகளிலும் கர்வம் கொண்ட நகரங்களும் கம்பீரமான கலைக் கோயில்களும் தலைதூக்கி நின்றன.

#### பழம்பெருமை எங்கே?

ஆனால் இப்பொழுது அந்த நகரங்கள் எங்கே? அந்தக் கலைக் கோயில்கள் எங்கே? அந்த மிகவும் தொன்மை வாய்ந்த நாகரிகம் எங்கே? எல்லாம் மண்ணோடு மண்ணாகப் போய்விட்டன. இப்புவி முழுவதையும் ஒரு குடையின் கீழ் வைத்து ஆட்சி புரிய விரும்பிய கிளியோபத்ரா என்னும் பேரழகின் அரண்மனை இப்பொழுது நிலமாகி அதில் சிலந்திப் பூச்சிகள் கூடு கட்டிக்கொண்டு விட்டன. உலகத்திலுள்ள ஏழு அற்புதங்களுள் ஒன்றான பிரமிட்டும் சிங்கத்தின் சரீரமும் மனிதனுடைய முகமும் கொண்ட ஸ்பிங்க்ஸ் என்ற கல்லுருவமுமே இந்த பழங்காலத்து நாகரிகத்தின் எஞ்சி நிற்கும் சின்னங்கள். இவற்றைத்தான் இன்று காணமுடிகிறது.

#### உலோகவியல் தெரிந்திருந்தது

பண்டைக் காலத்து எகிப்த்து மக்களிடம் விஞ்ஞானப் பேரறிவு இருந்திருக்க வேண்டும். இல்லாவிடின் இவர்களால் சிறந்த கட்டடங்களும் வானளாவும் கலைக் கோயில்களும் அமைக்கப்பட்டிருக்கமாட்டா. பண்டைய எகிப்திய மன்னர்களின் சமாதிகளில் இரும்பு வெள்ளி, செம்பு, பொன் போன்ற உலோகங்களால் ஆக்கப்பட்ட பொருள்களும் கருவிகளும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் பெரும் முயற்சியால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே புராணகால எகிப்திய மக்களுக்கு உலோகவியல் தெரிந்திருக்க வேண்டும்.

#### வானவியலும் அறிந்திருந்தனர்

மேலும் 5000,6000 ஆண்டுகளுக்குமுன் ஜோசியர் எகிப்திய அரசர்களால் நன்கு மதிக்கப்பட்டனர் என்ற செய்தி அக் காலத்திய இலக்கியங்களிலிருந்து தெரியவருகின்றது. எனவே வானவியலும் ஓர் அளவுக்கு எகிப்தியருக்கு தெரிந்திருக்க வேண்டும். அன்றியும் முற்கூறிய பிரமிட் ஸ்பிங்க்ஸ் போன்ற கட்டடங்கள் தொலையிலிருந்து கொண்டு வந்ததும் அளவிற் பெரியதுமான கற் சிலைகளால் அமைக்கப் பட்டுள்ளன. பொறியியல் அறிவும் பொறியியல் கருவிகளும் இல்லாது இதுபோன்ற வானளாவும் கட்டடங்கள் எழும்பியிருக்கமாட்டா.

#### பல்துறை விஞ்ஞான அறிவு

அல்லாமலும் பண்டைய எகிப்திய மன்னர்களின் சமாதிகளில் இருக்கும் பிரேதங்கள் தைலமிட்டுப் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கெடாமல் காப்பாற்றப்பட்டுள்ளன. உடலியல் அறிவும் மருத்துவத் தேர்ச்சியும் இல்லையேல் இது நிகழ்ந்திருக்க மாட்டாது.

மற்றும் வருடா வருடம் நீல நதி வெள்ளத்தால் பெருகி அதன் பள்ளத்தாக்கில் இருக்கும் வயல்களை அழித்துவிடுகின்றது. விவசாயிகளின் வாழ்வுக்கு பங்கம் ஏற்படாமல் மீண்டும் அவரவர்களின் வயல்கள் அளந்து கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கு கேத்திர கணிதமும் நிலவளவு முறையும் இன்றியமையாதவை. இவையெல்லாவற்றிலுமிருந்து அறியவரும் பேருண்மையாதெனில்—6000 ஆண்டுகளுக்கு முன் எகிப்தில் சிறந்தவொரு நாகரிகம் இருந்திருக்க வேண்டும்என்பதாகும். அக் காலத்திய எகிப்திய மக்கள் கணிதம், கேத்திர கணிதம், விஞ்ஞானம், பொறியியல், சிற்பமுறை, நீர்ப்பாசன முறை, மருத்துவம் போன்ற துறைகளில் நல்ல பயிற்சியுடையவர்களாக விளங்கினர்.

எழுதியவர்:
பேராசிரியர் ஏ. டபிள்யூ. மயில்வாகனம்

#### எழுத்தும் மொழியும் இருந்தனவா?

எவ்வாறு புராதன எகிப்திய மக்கள் இந்த விஞ்ஞானப் பேரறிவையும் கலையறிவையும் பெற்றுள்ளனர்? இந்தக் கேள்விக்கு விடையளிக்குமுன் பிறிதொரு விடயம் கவனிக்கவேண்டியதாயிருக்கின்றது.

பண்டைக்கால எகிப்தில் எழுத்துக்கள் இருந்தனவா? விருத்தியடைந்த மொழியொன்று இருந்ததா?—மிக முக்கியமான கேள்விகள் இவை. ஏனெனில் எல்லாக் கருத்துக்களையும் உட்கொண்ட மொழியொன்று இல்லையேல் விஞ்ஞானம், கலை, மருத்துவம் போன்ற துறைகள் வளர்ச்சியடைந்திருக்கமாட்டா. விஞ்ஞானி அலலது கலைஞன் ஒருவன் விடயங்களை ஆழ்ந்து சிந்திக்கவும், தனது சிந்தனைகளைப் பிறிதொரு விஞ்ஞானிக்கு அல்லது கலைஞனுக்கு தெரிவிக்கவும், அல்லது அவற்றை நீண்ட காலம் எழுத்தில் எழுதிவைக்கவும் நன்கு விருத்தியடைந்ததும் நுணுக்கமானதுமானமொழியொன்று இன்றியமையாதது. புராதன எகிப்திய மக்களின் எழுத்துக்கள் யாவை? எந்த மொழியை அவர்கள் உபயோகித்தார்கள்? அந்த மொழி தற்கால ஆராய்ச்சியாளர்களுக்கு எவ்வாறு விளங்கப்படுத்தப்பட்டது?

#### நெப்போலியன் பாசறை

பாப்பிரஸ் என்னும் கோரைப் புல்லால் ஆக்கப்பட்ட காகிதத்திலும் கல்லிலும் எழுதிவைக்கும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள் அக் காலத்து எகிப்திய மக்கள். அவர்களது சொற்கள் சித்திர வடிவமுடையனவாக இருந்த காரணத்தால் அவற்றின் பொருள் நீண்ட காலம் விளங்காமல் இருந்து வந்தது. ஆனால் 18-ம் நூற்றாண்டின் இறுதியில் நெப்போலியன் எகிப்து நாட்டை போரில் வெல்லும்பொருட்டு நீல நதி மத்திய தரக் கடலுடன் ஐக்கியமாகும் ரொசெட்டா என்னும் முகத்துவாரத்தினருகில் பாசறை அமைத்திருந்தான்.

#### 'கல்' தரும் விளக்கம்

அப்பொழுது போர் வீரனொருவன் பண்டைய எகிப்திய மொழியிலும் பின்னர் தோன்றின கிரேக்க மொழியிலும் எழுதியிருந்த கல்லொன்றை பொறுக்கியெடுத்தான். ரொசெட்டாக் கல் என்று அழைக்கப்படுவதும் தற்பொழுது பாரிஸ் மாநகரின் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருப்பதுமான இந்தக் கல்லே பண்டைய எகிப்திய மொழியை அறிமுகப்படுத்துவதாகும். அது மட்டுமல்லாமல் அந்தக் கல் அக் காலத்து மக்களின் இலக்கியங்களையும் அவர்கள் விஞ்ஞானத் துறையில் அடைந்திருந்த முன்னேற்றத்தையும் கூடத்தெரியப்படுத்தியது.

#### வரலாற்றில் இடம்

பண்டைய எகிப்தின் வரலாற்றின் கண் இந்த ரொசெட்டாக் கல் முக்கியமானவொரு இடம் பெற்றிருக்கின்றது. ரொசெட்டாக்கல் இல்லையேல் புராதன எகிப்திய மக்களைப் பற்றியும் அவர்களது சிறந்த நாகரிகத்தைப் பற்றியும் ஓர் எள்ளத்தனையும் எமக்குத் தெரியவந்திருக்க மாட்டாது. விஞ்ஞானத்துறையிலும் கலைத்துறையிலும் பண்டையஎகிப்திய மக்கள் எவ்வேறு முன்னேற்றம் அடைந்தார்கள்? இது அவர்களது சொந்த முயற்சியால் நிகழ்ந்ததா அல்லது பிறநாடுகளிலிருந்து இம் மக்கள் பொறுக்கியெடுத்த அறிவின் பயனா?

#### அறிவுக் கலப்பு

இக் கேள்விக்கு விடையளிக்குமுன் உலகப்படத்தைப் பார்ப்போம். பண்டைக்கால வர்த்தகர் சென்ற வழி எகிப்து, கல்டீ பாபிலோனியா, பினிசியா, சுமேரியா, பாரசீகம், வட இந்தியா, சீனு போன்ற நாடுகள் ஊடாகப் போயிருக்கின்றது. கல்விமான்களும், தத்துவஞானிகளும், கலைஞர்களும், விஞ்ஞானிகளும் இவ் வர்த்தகர் கூட்டங்களுடன் சேர்ந்து ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டுக்குச் சென்றிருக்கக் கூடும் என்று நாம் ஊகிக்கலாம்.

மேலும் சற்றேறத்தாழ ஒரே சம காலத்தில் மேற்கூறிய நாடுகளின் மக்கள் மேம்பட்ட நாகரிகமுள்ள வாழ்க்கை நடாத்தி வந்தார்கள். எனவே அக் காலத்தில் விஞ்ஞானத்திலும் கலைகளிலும் கூட்டுறவு இருந்திருக்க வேண்டும் என்று யாதொரு தடையுமில்லாமல் கூறலாம். ஆனால் இவ்விடத்தில்கேள்வியொன்று எழுகின்றது. நீல நதியின் வெள்ளப் பெருக்குக்குப்பின் எகிப்திய மக்கள் தங்கள் கேத்திர கணித அறிவை தங்கள் வயல்களைப் பங்கம் ஏற்படாமல் மீண்டும் பெற்றுக்கொள்ள உபயோகித்தார்கள் என்று கூறினேமல்லவா.

#### கேத்திர கணிதம்

இந்த அறிவை, அதாவது கேத்திர கணித அறிவையும் இதர துறைகளில் இருந்த அறிவையும் ஏன் இவர்கள் விருத்தியடையச் செய்யவில்லை? நாங்கள் தற்பொழுது கல்லூரிகளிலும பல்கலைக் கழகங்களிலும் பயின்று வரும் கேத்திர கணிதம் பண்டைய எகிப்திய மக்களுக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின் தோன்றிய கிரேக்க ஞானிகளால் நிலைநாட்டப்பட்டது? இந்தச் செய்தி எங்களுக்கு வியப்பை அல்லவா உண்டாக்குகிறது.

பண்டைய எகிப்திய மக்களுக்குத் தெரிந்திருந்த கேத்திர கணிதத்துக்கும் கிரேக்க மக்களின் கேத்திர கணிதத்துக்கும் ஆக ஒரே ஒரு படிதான் வித்தியாசம். பண்டைய எகிப்திய மக்கள் ஏன் இந்தப் படியைத் தாண்டி இவ்வியலில் முன்னேற்றம் அடைய முயலவில்லை? இந்தப் பிரச்னையை சற்று ஆராய்வோம். இது முக்கியமானவொரு பிரச்னை. இதை சிக்கறுத்தால் பண்டைய எகிப்திய மக்களின் விஞ்ஞானப் போக்கையும் அவர்களது மனப்பான்மையும் நன்கு மதிப்பிடலாம்.

#### ஏன்எகிப்திய விஞ்ஞானம் வளரவில்லை?

கேத்திர கணிதம்ஒரு தூய உருவமற்ற கடினமான துறை. மிகக் குறைந்த அடிப்படையான மூலக் கொள்கைகள்மேல் எழுப்பப்பட்ட கட்டடம் அது. அதன் வளர்ச்சிக்கு தருக்கத் திறனும் தெளிவான சிந்தனையும் இன்றியமையாதவை. இவ்வியல்புகளும் பண்புகளும் பண்டைய எகிப்திய மக்களிடம் தோன்றவில்லை. கிரேக்க மக்களோ தருக்கத்திலும் தத்துவஞானத்திலும் தனி விருப்பம் கொண்டவர்களாக விளங்கினர்.

பேருண்மையொன்று இதிலிருந்து தெரிய வருகின்றது. விஞ்ஞான வளர்ச்சிக்கு அதன் அத்திவாரம் நன்கு நிலைநாட்டப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவதாகச் சிறந்த தருக்கத் திறன் தேவை. இவை இல்லையேல் விஞ்ஞானம் வளரமாட்டாது. இதுவே எகிப்திய விஞ்ஞானம் வளர்ச்சியடையாமல் இருந்ததற்கு மூல காரணம்.

#### உபயோக விஞ்ஞானத்தில் நாட்டம்

பண்டைய எகிப்திய மக்கள் தருக்கத்திலும் விஞ்ஞானத்தின் அடிப்படைகளிலும் விருப்பம் கொள்ளவில்லை. அவர்கள் விரும்பியது உபயோக விஞ்ஞானமாகும். எவ்வாறு நீல நதியின் நீரை வயல்களுக்குப் பாச்சலாம், எவ்வாறு உயர்ந்த கட்டடங்கள் அமைக்கலாம், எவ்வாறு மரணத்தின் பின் தங்கள் உடலை நீண்டகாலம் கெடாமல் வைத்திருக்கலாம். இவைபோன்ற விடயங்களே அவர்களது கவனத்தைக் கவர்ந்தன. இது காரணமாக இவர்கள் பெரியவொரு தண்டனைக்கு ஆளாகினார்கள். தூய சிந்தனையின்றி வாழ்ந்து வந்த இம் மக்கள், உடலுழைப்பின்றி அடிமைகளிடமிருந்து வேலை வாங்கி உயிர் வளர்த்த இம் மக்கள் காலக்கிரமத்தில் எங்களுக்கு ஞாபகசின்னமாக பிரமிடையும் ஸ்பிங்க்ஸையும்மட்டும் விட்டு மறைந்தார்கள்.

(உபயம்: இலங்கை வானொலி)




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கிராமப் பொருளாதாரம்:

# மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஒரு வழி:

## கிராமக் கைத் தொழில்களை நவீன முறையில் விருத்தி செய்ய வேண்டும்

### மட்பாண்டத் தொழில், தச்சுத் தொழில் செம்பு-பித்தளை தொழில், பாவை உற்பத்தி தொழில் ஈழத்துக் கிராமங்களில் செழித்து வளர முடியும்

அ. விஜயன் விக்டோரியா பி. ஏ.

இராமங்கள் பொருளாதார விருத்தி கருதி மேற்கொள்ளத்தக்க குடிசைக் கைத்தொழில்களில் மட்பாண்ட வேலையும் ஒன்றாகும். இந்நாட்டில் உண்டாக்கப்படும் பெரும்பாலான மட்பாண்டங்கள் பண்டைக்காலந்தொட்டு வீட்டுத் தேவைக்கான சட்டி பானைகளேயாகும். இவற்றின் உற்பத்தியிற் கையாளப்பட்டு வரும் நுட்பங்கள் வேறு நாடுகளில் உள்ளவை போல் இங்கும் சிறந்தவையாகவேயுள்ளன.

#### மட்பாண்ட வேலை

இலங்கையில் மட்பாண்ட வேலையில் பரம்பரை பரம்பரையாக ஈடுபட்டுள்ளோர் தொழில் நுட்ப முறையில் சிறந்து விளங்குகின்றனர். தொழில் திறன் இருந்தும் இத்தொழில் செய்வோரின் நிலை பெருமைப்படத்தக்கதாயில்லை. இவர்களது பொருளாதாரத்தைவிருத்தி செய்ய வேண்டுமாயின், கூடிய சந்தைப்படுத்தும் வசதிகளுக்கும், தேவையான மூலப்பொருள்களைச் சுலபமாகப் பெற்றுக்கொள்வதற்குமாக தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களை ஆக்குதல் அவசியமாகும்.

#### மின்சார சக்தி வேண்டும்

மட்பாண்டத் தொழிலை அபிவிருத்தி செய்து, திறமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு யந்திர சாதனம் தேவையாகின்றது. களிமண் அழுத்தப்படுதற்கும், கலவை கலத்தற்கும் தக்க சூளையிடுவதற்கும் யந்திர சக்தி வேண்டும். இத்தகைய தேவைகளுக்கு மின்சார சக்தியும் தேவைப்படும். இவற்றை மட்பாண்டத் தொழிலாளர் பெறுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

#### பிங்கான் களி மண்

இது ஒருபுறமிருக்க, பிங்கான் தரத்திற்கு ஒத்திருக்கக்கூடிய களிமண் காணப்படும் கிராமப் பகுதிகளைக் கண்டறிந்து ஆங்கே பிங்கான் தொழிலை ஆரம்பிப்பதும் நல்லது. இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் குறைந்தரகப் பிங்கான் பொருள்களுக்குப் பதிலாக, அத்தகைய பொருள்களை இங்குதானே உற்பத்தி செய்யும் வாய்ப்புகளைக் காண வேண்டும் ஈழநாட்டிலுள்ள நடுத்தர கீழ்த்தர வகுப்பினருக்கு மிகவும் தேவைப்படுவதான குறைந்த ரக,குறைந்த விலை பிங்கான் வீட்டுப் பொருள்களை இங்கு உற்பத்தி செய்யக்கூடுமாயின் அதனுல் பிங்கான் மட்பாண்ட வேலையில் ஈடுபட்டுள்ள கிராமப்புறத்தவர் தம் வருவாயைப் பெருக்கிக் கொள்வர்.

#### தச்சு வேலை

கிராமவாசிகளில் சிலர் இலாபகரமாக மேற்கொள்ளத்தக்க மற்ருெரு கைத்தொழில் தச்சு வேலையாகும். தச்சு வேலை நுட்பமானதும் அதிக வரும்படி தரக்கூடியதுமான தொழிலாக்கப்பட வேண்டுமாளுல் பழங்கால முறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். தச்சு வேலை நிபுணர்களின் மேற்பார்வையில் கிராமப்புற வாலிபர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டும். மின்சாரம் கிடைக்கக்கூடிய பகுதிகளில் சிறிய பெரிய உபகரணங்களைக் கொண்டு தச்சு வேலையை நுட்பமாகச் செய்யும் வழி காண வேண்டும். மேலும் தொழிற் சேமிப்பு முறைகளைக் கையாண்டு உற்பத்தியின் செலவினைக் குறைக்க முயற்சிக்க வேண்டும்.

#### ஒரு வசதி

தச்சு வேலையைச் சிறந்த அடிப்படையில் அமைத்துக் கொண்டால், தச்சு வேலைக்காரர் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை செய்தற்குக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி, அவற்றின்மூலம் மரச் சாமான்களை விற்பனை செய்யலாம். இன்னும் தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவியளிக்கும் நோக்கமாக அரசாங்க அலுவற் பகுதிகள் யாவும் தங்களுக்குத் தேவையான தளபாடங்களை அவைகள் ஏற்ற தரங்களை உடையனவாயின் அத்தகைய சங்கங்களிலிருந்து பெற வேண்டுமென அரசாங்கம் கூறியுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு பாடசாலைகளுக்கும் காரியாலயங்களுக்கும் தேவையான தளபாடங்களை தச்சுத் தொழிலாளர் உற்பத்தி செய்து கொடுக்கலாம். இவ்வாருகத் தச்சு வேலைக்காரரது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கின்றது. இதைப் பயன்படுத்தி கிராமப்புறங்களில் தச்சு வேலை செய்வோர் தம் பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொள்ளலாம்.

#### கன்ருர வேலை, பித்தளை வேலை

கன்ருர வேலையும் பித்தளை வேலையும் கிராமப்புறங்களில் விருத்தி செய்யப்பட வேண்டிய முக்கியமான இரு கைத்தொழில்களாகும். தற்காலத்திய கருவிகளைக் கொண்டும், திருத்தமடைந்த நுட்பங்களைக் கொண்டும் விவசாயத் துறைக்கும் வி[illegible] தேவைக்கும் வேண்டிய உபகரணங்களை உற்பத்தியாக்குவதற்கான திட்டம் வகுக்க வேண்டும். இந்தியாவில் பித்தளை வேலை மிக முன்னேற்றம் அடைந்து வருகிறது. இத்தொழிலில் அந்நாட்டில் கையாளப்படும் தொழில் நுட்பங்களை அறிந்து அவற்றை இங்கு புகுத்துதல் நன்மை பயப்பதாகும். கன்ருர வேலையும் பித்தளை வேலையும் கிராமப்புறங்களிலுள்ள பலருக்கு வேலைதரும் வாய்ப்பையளிப்பதுடன் அவர்களது பொருளாதாரத்தை வளர்க்கவும் உதவும்.

#### பொம்மை உற்பத்தி

பாவை—அதாவது பொம்மை உற்பத்தி செய்வதில் இந்நாட்டு மக்களிற் சிலர் பரம்பரையான தொழில் திறமையுடையோராயிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தொழிலைப் பரந்த அடிப்படையில் கிராமப்புறங்களில் புகுத்திஞல் அதனுல் பலருக்கு வேலை கிடைக்கும்.

ஜப்பானிலிருந்து நம்நாட்டுக்கு ஏராளமான பொம்மைகளும் விளையாட்டு பொருள்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆனுல் எம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாவைகள் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு மிகவும் தரம்குறைந்தனவாய் இருக்கின்றன. இந்நிலையை மாற்றியமைத்து கிராமப்புறங்களிலுள்ள பலருக்கு பாவைத் தொழிலில் [illegible] கொண்டு இத்தொழிலுக்கு ஆக்கந் தேட வேண்டும்.

#### விளையாட்டுப் பொருட்கள்

பாவைப் பிள்ளைகள், முகமூடிகள், சுவர் சித்திரங்கள் விளையாட்டுப் பொருட்கள், போன்றவற்றை சீர்திருத்திய முறையில் ஈழநாட்டுக் கிராமங்களிலேயே செய்வதற்கு வசதியமைப்பின் வெளிநாட்டுப் பாவை இறக்குமதிக்காகச் செலவிடும் ஏராளமான பணத்தை மிச்சப்படுத்துவதுடன், இங்குள்ள கிராம மக்களது வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்குப் போக்கவும் முடியும்.

இது தவிர மரத்தாலும் யந்திரத்தாலும் ஆன விளையாட்டுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைக் கிராமப் பகுதிகளில் செய்வதாலும் கிராம மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தலாம்.

#### அரசாங்கம் செய்வது என்ன?

கிராமங்களிலே இவ்வாருன குடிசைத் தொழில்களைப் புகுத்தி கிராமத்தவர்க்கு வாழ்வளிப்பதில் கிராமாபிவிருத்தி இலாகாவும் குடிசைக் கைத்தொழில் இலாகாவும் முயன்று வருகின்றன. இந்நாட்டுக் கிராமங்களில் பற்பல கைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு என தனித்தனியான கூட்டுறவுச் சங்கங்களை நிறுவியும், நிபுணர்களைக் கொண்டு தொழில் நுட்பப் பயிற்சியளித்தும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பதற்கான வியாபாரக் கடைகளை அமைத்தும், இலங்கையில் உற்பத்தியாகும் பொருள்களைப்பற்றி பகிரங்கப்படுத்துவதற்காக வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் அவ்வப்போது பல பொருட்காட்சிகளை நடத்தியும், இன்ஞேரன்ன வழிகளில் இந்நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சிக்கு குடிசைக் கைத்தொழில் இலாகாவும் கிராமாபிவிருத்தி இலாகாவும் துணைபுரியவே செய்கின்றன,

கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்து, கிராமவாசிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, கிராமப் பொருளாதாரத்தைச் சீரிய முறையில் அமைக்க வேண்டுமாளுல் கைத்தொழில்களை மென்மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

(உபயம்: இலங்கை வானொலி)

---

## வாடும் நிலை அறியாள்!

[சோமலிங்கம்]

திரை அற்றிடு உடலும்—அவள்
  திரைமூடிடு தனமும்
நரை அற்றிடு குழலும்—இள
  நகைபற்றிடு முகமும்
நிரையுற்றிடு எயிறும்—பெரு
  நிழலுற்றிடு விழியும்
புரையற்றிடு மொழியும்—எனைப்
  பொறை யற்றிட வதைக்கும்

கரைகட்டிய சேலை—இரு
  கால் தொட்டுமே கொஞ்சும்
வரைகட்டிய மார்பு—பெரு
  மலை தாழவே மிஞ்சும்
"உரைஉற்றது" என்ருல்—ஒரு
  உயிரோவிய மன்ரே
தரைபார்த்துமே சொல்வாள்—அவள்
  தமியே னெனைப் பாராள்

வரையற்றிடு நாணம்—அவள்
  வடிவில் ஒரு பாணம்
தரை தொட்டிடு கூந்தல்—அது
  தடவி நில மேந்தும்
விரை வற்றிடு நடையால்—புரு
  வெட்கித் தலை குனிய
வருவாள் அவள் அங்கு—நான்
  வாடும் நிலை அறியாள்!

---

## கொக்குவில் பகுத்தறிவு இயக்கம்

அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்க வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 5-12-59-ல் கொக்குவில் சன சமூக படிப்பகத்தில் திரு. பொ. தம்பி தலைமையில் நடைபெற்றது. அத் தருணம் திரு. பொ. தம்பி தலைவராகவும், செயலாளராக திரு. க. சீவகாருண்யமும், துணைச் செயலாளராக திரு ச. யோகேந்திரமும் பொருளாளராக திரு. வி. சண்முகநாதனும் துணை பொருளாளராக திரு. வ. நாகலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.


## ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினுல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹேரீஸ்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.



## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 டிசம்பர் மாதம் 13-ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


# அவசர கால நிலைமை மீண்டும் வரப்போகிறதா?

## பாதுகாப்பு ஸ்தாபனத்துக்கு சிட்னி டி சொய்ஸா தலைவராகலாம்

(சுதந்திரன் நிருபர்)

பிரதமர் திரு. தஹநாயகாவுடன் சகல அமைச்சர்களும் ஒத்துழைக்க மறுத்து, பிரதமரை நீக்க வேண்டும் என்று வற்புறுத்தினால், பிரதமர் சகலரையும் பதவி நீக்கம் செய்துவிட்டுத் திரும்பவும் நாட்டில் அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

வியாழக்கிழமை இரவு (10-12-59) இப் பத்திரிகை அச்சுக்குப் போகும் சமயத்தில் மேற்படி நிலைமை உருவாகி வருவதாக அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

அப்படி அவசரகால நிலைமை மீண்டும் பிரகடனம் செய்யப்பட்டால் பொதுத் தேர்தல் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்படலாம் என்றும் கூறப்பட்டது.

உள்நாட்டுப் பாதுகாப்பு சம்பந்தமாக ஒரு தேசிய ஸ்தாபனத்தை அமைத்து அதன் தலைவராக விலக்கப்பட்ட உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. சிட்னி டி சொய்ஸாவை நியமிக்கவும் ஆலோசனைகள் இருந்து வருவதாகத் தெரிகிறது. திரு. சிட்னி டி சொய்ஸா பொலிஸ், இராணுவம், வாலண்டியர் படைகளுக்குத் தொடர்பு அதிகாரியாகவும் இருப்பாராம்.

இந்த வகையில் அவருடைய புதிய பதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவியின் சம தரத்தையுடையதாயிருப்பினும், அதிகப்படியான அதிகாரம் படைத்த ஒரு பதவியாக அது விளங்கும் என்றும் நம்பப்படுகிறது.

[பிரசுரம்: வியாழன் இரவு 11-30]

# அறம் கொன்றது! அறம் வென்றது!

அரசாங்கம் கவிழ்ந்து விட்டது! அதிகாரம் குலைந்து விட்டது! பாராளுமன்றம் கலைந்துவிட்டது! அமைச்சரவை சிதறிவிட்டது! மக்கள் ஆட்சி யென்று மாய்மாலம் போட்ட வெறியர்கள் கூட்டம் சின்னபின்னப்பட்டு விட்டது!

பண்டாரநாயகா மறைந்தார்! அவர் கட்டி யெழுப்பிய மனக் கோட்டை ஹொரகொல்லை மண்ணோடு மண்ணாகி விட்டது! அவர் தீட்டிய ஆசைத் திட்டங்கள், அன்பு மனைவி சிறிமாவோவினால் கூடச் செப்பனிட முடியாதபடி, மட்டஞ் செய்யப்பட்டு விட்டன! பௌத்தப்போதை ஊட்டி, சிங்கள வெறியேற்றி, ஆர்வத்தோடு அவர் அமைத்த அரசியல் கட்சி கண் மூடிய நொடிப் பொழுதில் பொலபொலத்துப் போய்விட்டது!

சகாக்கள் சதிகாரரானார்கள். நண்பர்கள் நயவஞ்சகர்களானார்கள். வஞ்சகர்கள் பகைவர்களானார்கள். பகைவர்கள் கொலைஞர்களானார்கள்!

நாட்டில் வெள்ளம், வெறியாட்டம், வேதனை, வேலை நிறுத்தம், அல்லல், அலங்கோலம், அத்தனையும் வந்து, முடிவில் அரசாங்கம் அடியற்ற கோபுரம் போல் முடிசாய்ந்து விட்டது!

இதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. எதிர்பாராதது எதுவும் நடந்துவிடவும் இல்லை. மூன்றே ஆண்டுக்குள் இவ்வளவு இன்னல்களையும் இடையூறுகளையும் சொன்ன சொன்னபடி, திட்டமிட்டது போல் செய்துவைத்த சக்தி யாது? அந்த மாபெரும் சக்தியின் பெயர்தான் அறம் எனப்படும்.

ஆணவம் பிடித்தவர்கள், அகங்காரம் கொண்டவர்கள், நீதியைக் கொன்று அநீதியை நிலைநாட்ட முற்பட்டவர்கள், அராஜகம் புரிந்தவர்கள், அநியாயம் விளைத்தவர்கள், ஏழைகளை அடக்கு முறையினால் எதேச்சாதிகாரமாக ஆண்டவர்கள், இந்த உலகில் — இதிகாச புராண, சரித்திர காலந் தொட்டு — என்றுமே வாழ்ந்ததில்லை. இனி வாழப்போவதுமில்லை. ஆனால் இப்படியானவர்கள் வீழ்ந்ததுண்டு, மாண்டு மடிந்ததுண்டு, புதைத்த இடத்தில் புல் முளைத்துப் போனதுண்டு. இந்த வரலாற்றின் தொடர் ஏட்டிலே வந்த ஒரு சம்பவந்தான் பண்டாரநாயகாவின் உயர்ச்சியும் வீழ்ச்சியுமாகும்;

கோடிய செங்கோலை யுடைய ஆட்சி வாழாது வீழ்ந்துபடும் என்ற பேருண்மையை விளக்க எழுந்த கண்ணகி காதையான சிலப்பதிகாரத்தில் ஒரு அழகான கவிதை அடி "அல்லவை செய்தார்க்கு அறங் கூற்றம்" என்று அமைந்திருக்கிறது.

ஆம், அறங் கொன்றார்க்கு ஆக்கம் இல்லை. நடு நின்று ஆட்சி புரியாதாரை, நீதியின் பாற்படாத காரியங்களைச் செய்தாரை அறங் கொன்று விடுகிறது! அத்தகையோரின் எண்ணங்களை, முயற்சிகளை, செயல்களை எல்லாம் அறங் கொன்று குவித்துவிடுகிறது!

இங்ஙனம் அறம் என்னும் கூற்றத்துக்குப் பலியானவர்தான் பிரதமர் பண்டாரநாயகா. அறம் என்னும் கூற்றத்துக்குப் பலியானவை தாம் தஹநாயகாவின் அரசாங்கமும், பாராளுமன்றமும்.

ஒரு புறம், அல்லவை செய்தாரை அறம் கொன்றுவிட்டது. இன்னொரு புறம் நல்லவை செய்தார் சார்பில் அறம் வென்றுவிட்டது.

1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ந் தேதி பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதா கொண்டுவரப்பட்டபோது அந்த பாரபட்சமான அநியாய சட்டத்தை எதிர்த்து சத்திய வந்தர்களான தமிழரசுக் கட்சியினர் காலி முகக் கடற்கரையில் அறப்போர் தொடுத்தார்கள். அறத்தை முன்னிறுத்தி சத்தியாக்கிரகம் புரிந்தார்கள்.

காடையர்களை ஏவிவிட்டு அவர்களை அடித்துத் துன்புறுத்தியது பண்டாரநாயகா அரசாங்கம். "கொதிக்கும் உள்ளம் குளிர்ச்சியடைவதற்காகக் கொட்டும் மழையில் ஈரத் தரையில் உட்கார்ந்திருக்கிறார்கள்" என்று ஏளனஞ் செய்தார் பண்டாரநாயகா. கல்லெறியினால் பிளந்து இரத்தம் கொப்பளிக்கும் மண்டைக்கு கட்டுப் போட்டுக்கொண்டு தளபதி அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் பிரவேசித்தபோது, "கேட்டார்கள், கிடைத்துவிட்டது. கேட்டதைப் பெற்றுக்கொண்டார்கள்" என்று கூறிக் கொல்லென்று சிரித்தனர் ஆளுங் கட்சியினர்.

வேதனைப்பட்டார்கள் தமிழர்கள். வென்றுவிட்டோம் என்று எக்களித்தார் பிரதமர். ஆனால் இன்று வென்றுவிட்டது யார்? அறம் வென்றதா? மறம் வென்றதா? அன்று அவர்கள் சிரித்தார்கள். இன்று நாம் சிரிக்கிறோம். நாடே சிரிக்கிறது அவர்களைப் பார்த்து.

சத்திய நெறி நின்ற அறப்போர் வீரர்கள் என்று தாக்கப்பட்டார்களோ, என்று நிரபராதியான தமிழ் மக்கள் தெருவில் சுதந்திரமாக நடமாட முடியாதபடி துன்புறுத்தப்பட்டார்களோ அன்றே பண்டாரநாயகா கட்டிய ஆட்சிக் கோட்டையின் முதற்கல்லை மட்டுமல்ல, அதுவும் அடிக் கல்லைப் பெயர்த்துவிட்டது அறம்! வென்றுவிட்டது அறம்!

தியாகம் வீண்போவதில்லை. சிந்திய இரத்தம் [illegible] போவதில்லை. இன்று, பண்டாரநாயகா மடிந்தார், அரசாங்கம் கவிழ்ந்தது, பாராளுமன்றம் கலைக்கப்பட்டது என்றால் அதற்கு மூலகாரணம் தமிழரசுக் கட்சியின் வஜ்ரசித்தம் [illegible] தலைவர்களின் வழிநின்று தமிழ் பேசும் மக்கள் குன்றாத உறுதியோடு, குலையாத எதிர்ப்போடு தொடுத்த அறப் போராட்டமேயாகும். அரம் அன்று அறுக்கும் அறம் நின்று அறுக்கும்.

இதே அடிப்படையில், அஹிம்சையை ஆயுதமாகக் கொண்டு, ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் உறுதுணையாகக்கொண்டு தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து அறப்போர் தொடுத்தால் எந்த அரசாங்கமும் தாக்குப் பிடிக்க முடியாது போகும். முடிவில் தமிழ் பேசும் மக்கள் [illegible] தயாக வேண்டிய தவிர்க்க முடியாத நிலை உருவாகும். இந்த நிலையை உருவாக்குவதுதான் தமிழ் பேசும் மக்கள் இன்று ஒன்று திரண்டு செய்ய வேண்டிய [illegible]

## சுதந்திரன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"இன்னும் பதினெட்டு மாதங்களுக்கு இப்போதைய பாராளுமன்றத்தை நடத்தியே முடிப்பது என்று பிரதமர் வெளிப்படையாகச் சொல்லியபோதிலும் அந்தக் காலம்வரை கொண்டிழுப்பது முடியாத காரியம் என்பதை அவர் உணர்ந்துவிட்டார். எனவேதான் யாரும் எதிர்பாராத வகையில் பெப்ரவரியில் திடீரெனப் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுவது என்று தற்காலிகமாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்"

மேற்கண்டவாறு செய்தி தந்து, பொதுத் தேர்தல் மார்ச்சில் நடைபெறும் என்றும் பாராளுமன்றம் இன்ன தேதியில் கூடும் என்றும் சொல்லியிருந்தோம். நாம் சொன்னது சற்று முன்னதாகவே நடந்துவிட்டது. தேதியில் சிறிது மாற்றமே தவிர விஷயத்தில் வித்தியாசம் இல்லை.

### முந்தித் தந்தது சுதந்திரன்

சுதந்திரன் வியாழக்கிழமைகளில் இறுதியாக அச்சுக்குப்போவது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். சுதந்திரனில் செய்தி பிரசுரமாகிய 24 மணி நேரத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பிரகடனம் வெளியிட்டுவிட்டார் கவர்ணர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலகா. அதாவது கடந்த 3ந் தேதி நள்ளிரவு அச்சேறிய சுதந்திரன் இதழில் செய்தி பிரசுரமாகியது. 4ந் தேதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு பாராளுமன்றத்தைக் கலைத்து கவர்ணர் ஜெனரல் பிரகடனம் வெளியிட்டார்.

இந்தப் பிரகடனம் கூட விடிந்ததும் விடியாததுமாக 5ந் தேதி சனிக்கிழமை வெளியாகிய தமிழ்த் தினசரிகள் எதிலுமே பிரசுரிக்கப்படவில்லை. சுதந்திரன் எல்லாப் பத்திரிகைகளையும் முந்திக்கொண்டு வழமைப்பிரகாரம் செய்தியை முன்னதாகவே தந்துவிட்டது. எப்படி?

### சுதந்திரன் செய்தி இலாகா

சொல்லி விளக்க முடியாது. சுதந்திரன் செய்தி இலாகா செயல்படுவது தனியான ஒரு முறையில். எந்த இடத்துச் செய்தியும் சுதந்திரன் செய்தி இலாகாவுக்கு 'மணக்காமல்' இருக்காது. அதற்கான ஏற்பாடுகள் உண்டு.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் பிரதமர் ஒரு விஷயத்தை வெளியிட்டார். அதாவது கலைப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என்று தாம் எண்ணியதாகப் பிரதமர் சொன்னார். அவர் எண்ணியதே நமக்கு எட்டிவிட்டது. பின்னர் யாருக்கும் தெரியாமல் கவர்ணர் ஜெனரலுடன் குசுகுசுப் பேச்சு நடத்தினார். அவர்கள் மட்டில் அது குசுகுசுப் பேச்சு. நாம் செய்தி பிரசுரிக்க அது வாய்ப்பாகியது.

## அபேட்சகர் நியமனங்கள்....

### தலைக்கு ஒரு ரூபா தேர்தல் நிதி

#### மட்டக்களப்பில் இராஜதுரைக்கு

மட்டக்களப்பில் திரு. செ. இராசதுரையின் தேர்தலை நடத்துவதற்காக அவர் தொகுதியிலுள்ள வாக்காளர்களிடமிருந்து "தலைக்கு ஒரு ரூபா தேர்தல் நிதி" என்று ஒரு புதுவிதமான தேர்தல் நிதியைத் திரட்ட திரு. இராசதுரையின் ஆதரவாளர்கள் ஆலோசித்து வருவதாக அறியப்படுகிறது

இந்த "தலைக்கு ஒரு ரூபா" என்ற நிதியின் விசேஷம் என்னவென்றால், எவ்வளவு பெரிய பணக்காரராயிருந்தாலும் அவரிடமிருந்து ஒரு ரூபாவுக்கு மேல் பெறப்படமாட்டாது என்பதே.

மட்டக்களப்புத் தொகுதியில் இராசதுரைக்கு ஆதரவாக உள்ள வாக்காளர் அத்தனை பேரும் தலைக்கு ஒரு ரூபா வீதம் விரும்பிக் கொடுக்க முழுமனதோடு தீர்மானிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிதி திரட்டுவதற்கான சீட்டுகள் விரைவில் அச்சிடப்படும் என்றும் அதற்கெனப் பொறுப்பும் நாணயமும் வாய்ந்த ஒரு குழுவினர் நியமிக்கப் படுவர் என்றும் தெரியவருகிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதி, கொழும்பு மத்திய தொகுதி, கொழும்பு தெற்கு தொகுதி, புத்தளம் தொகுதி ஆகிய மொத்தம் 27 தொகுதிகளுக்கும் தனது அபேட்சகர்களை நியமித்துப் போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

#### எஸ். ஜே. வி. போட்டியிடுவார்

இம்முறை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதிக்குப் போட்டியிட மாட்டார் என்றும், வேறு தொகுதிகளில் போட்டியிடக் கூடும் என்றும், அல்லது அறவே போட்டியிட மாட்டார் என்றும் சிலர் ஒரு விஷமத்தனமான பிரச்சாரத்தை யாழ்ப்பாணப் பகுதிகளில் கிளப்பிவிட்டிருக்கிறதாகத் தெரிய வருகிறது. இந்த வதந்தி முற்றும் தவறானது, பொய்யானது என்று டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கூறினார். அபேட்சகர் நியமன சபையின் அங்கீகாரத்தோடு திரு செல்வநாயகம் இம்முறையும் காங்கேசன்துறைத் தொகுதிக்கே போட்டியிடுவார் என்றும் நாகநாதன் தெரிவித்தார்.

#### குவியும் அபேட்சகர் விண்ணப்பங்கள்

தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட நூற்றுக்கணக்கான அபேட்சகர்கள் விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளார்கள் என்றும், இப்படி விண்ணப்பம் அனுப்பியிருப்பவர்களுள் கணிசமான தொகையினர் முஸ்லிம்கள் என்றும் டாக்டர் நாகநாதன் மேலும் தெரிவித்தார். அபேட்சகர்களைத் தெரிவதில் அபேட்சகர் நியமன சபைக்கு நிரம்பிய வேலை இருக்கப்போகிறது.

#### தேர்தல் விஞ்ஞாபனம்

கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாராகிக்கொண்டிருக்கிறது. விரைவில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழரசுக் கட்சி கோரும் சமஷ்டி அரசியல் அமைப்பில் முஸ்லிம்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதும் முஸ்லிம்கள் விரும்பினால் அவர்கள் ஒரு தனியங்கமாகவோ, அங்கங்களாகவோ எவ்வாறு முஸ்லிம் சுயாட்சியை நடத்தலாம் என்பதும் பிரஸ்தாப விஞ்ஞாபனத்தில் விளக்கப்பட்டிருக்கும் என்று தெரிகிறது.

மலைநாட்டுத் தமிழர்களின் உரிமை பற்றியும், அவர்கள் சமஷ்டியமைப்பில் எவ்வாறு சுயநிர்ணய அடிப்படையில் ஒரு அங்கமாக விளங்கலாம் [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'எதிர்வரும் பொதுத்தேர்தல் தமிழினத்தின் வாழ்வை நிர்ணயிக்கும்

## ஒரே கட்சிப் பிரதிநிதிகளை அனுப்பி

### ஏகோபித்த குரலில் உரிமை கோருவது அவசியம்

## தேர்தல் நிதி தாராளமாகத் தருக'

## தமிழரசுத் தந்தை எஸ்.ஜே.வி. வேண்டுகோள்

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் வருங்கால வாழ்வைப் பெருமளவு நிர்ணயிக்கும் முறையில் எதிர்வரும் பொதுத் தேர்தல் அமையும். ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வதியும் மக்கள் தமது குடியுரிமை, மொழியுரிமை தாம் வழி வழி வாழும் இடயுரிமை ஆகிய அனைத்திற்கும் மேலாக கூட்டாட்சி அடிப்படையில் தமக்கென்று ஒரு தமிழரசை நிறுவும் உரிமைக்கு ஓர் உறுதுணையாய் — ஓர் அடித்தளமாய் இத்தேர்தல் அமையும். இந்நல்வாய்ப்பினை நாம் உண்மையாகப் பெற விரும்பின் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் அனைவரையும் தெரிவு செய்யவேண்டும். இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ் பேசும் மக்கள் ஒரே கொள்கை அடிப்படையில், ஒரே இயக்கத்தைச்சார்ந்து, ஒரு கொடிக்கீழ் ஒன்றுபட்டு நின்று போர்க்குரல் எழுப்பின் தமிழ் இனத்தின் விடுதலை எழுச்சியை எவருமே புறக்கணிக்க முடியாது.

இந்தச் சூழ்நிலையில் ஒரு முக்கிய குறிப்பை கூறியேயாக வேண்டும், அதாவது ஒருவர் அரசியல் வாதியாக இருக்க விரும்பின் ஓர் அளவு ஓய்வும் சொந்த வருமானமும் வேண்டும். எமக்கின்று ஏற்பட்டிருக்கும் சாபக்கேடு என்னவெனில் தமிழரில் சொந்த வருமானம் உள்ளவரிடம் இலங்கையில் தமிழ்ப் பேரினம தனது தனித்தன்மையை இழந்து அழிந்துபோகாது பாதுகாக்கப்படவேண்டும் என்ற எண்ணம் — அதற்கான உணர்வு போதியளவு இல்லை. அதே நேரத்தில் தமிழ்ப் பேசும் இனத்தின் நலனிலும் நல்வாழ்விலும் நாட்டம் கொண்டுள்ள ஆண்கள் பெண்கள் — இருபாலாரிடமும் தேர்தலில் போட்டியிட்டு தம் இனத்திற்காக தமது முழு நேரத்தையும் செலவு செய்ய பண பலம் இல்லை. அதாவது வருமானம் இல்லை.

இந்நிலையில் தமிழரசுக் கட்சி திறமையும் பொதுப் பணியில் ஈடுபாடும்கொண்டவர்களையே அபேட்சகர்களாய்த் தெரிவு செய்யவேண்டும். அத்தோடு அவர்களுக்காக தேர்தல் பிரசாரம் செய்து பணமும் செலவு செய்யவேண்டியிருக்கிறது.

ஆகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் இனத்திடம் நிதி உதவியையும் மற்றும் இன்னோரன்ன உதவிகளையும் வேண்டி நிற்கின்றது. கட்டுக்கோப்போடு கடந்த காலத்தில் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு இயன்றவரை பணியாற்றியுள்ளது. வருங்காலத்திலும் அதன் பணி தொடாந்து சிறப்புறவேண்டின் ஈழத்தில் தமிழ் பேசும் இனம் தொடர்ந்தும் தமிழ் பேசும் இனமாகவே வாழவேண்டின் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு தாராளமாக நிதி தந்து உதவுங்கள் என்று வேண்டுகிறேன். —இவ்வாறு திரு. செல்வநாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### முல்லைத்தீவில் தமிழரசுக் கூட்டம்

"இங்குள்ள அரசியல் வாதிகள் தமிழ் இனத்துக்கு இழைக்கும் கொடுமைகளை பாராளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் உறுதியோடு நின்று சாத்வீக முறையில் எதிர்க்கக் கூடிய பிரதிநிதிகளையே நீங்கள் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் தேர்ந்து அனுப்ப வேண்டும். தங்கள் சுய நலத்துக்குவிரோதிகளோடு ஒத்துழைக்கும்பேர்வழிகளை நீங்கள் விரும்பினால் தமிழ் இனம் அழிந்து போகும்" என்று முல்லைத் தீவு முற்றவெளி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசிய தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் குறிப்பிட்டார்.

கூட்டத்துக்கு முன்னாள் பட்டின சபைத் தலைவர் திரு. பிரான்சிஸ் தலைமை வகித்தார்.

மற்றும் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், திரு. செ. இராசதுரை, எஸ். எம். இராசமாணிக்கம், உட்பட மற்றும் பலர் பேசினர். [திரு. இராசதுரையின் பிரசங்கம் பிறிதோரிடத்தில் பிரசுரிக்கப்படுகிறது]

## தமிழினத்தின் ஏகப் பிரதிநிதி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பத்தின் உறுப்பினர் குறைந்தது ஐந்து பேர் என்று கணக்கெடுத்தாலும் சுமார் ஏழு லட்சத்து ஐம்பதினாயிரம் பேருக்கு அதிகமானோர் தமிழரசுக் கட்சியை ஆதரித்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. இருபத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்களில் பத்து லட்சம் பேர். மலைநாட்டுத்தமிழ் மக்கள். மீதி பதினைந்து லட்சம் பேர். இவர்களில் சில லட்சத்தினர் இலங்கையில் பல பாகங்களில் வாழ்கிறார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் சுமார் எட்டு லட்சம் தமிழ மக்களில் சுமார் ஏழரை லட்சம் பேர் தமிழரசுக் கட்சியை ஆதரிக்கிறார்கள். இது தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைக் காட்டவில்லையா?

வடக்கே காங்கேசன்துறை முதல் தெற்கே திருக்கோயில் ஈறாக, கிழக்கே திருகோணமலைமுதல் மேற்கே மன்னார் வரை ஒரு கட்சியின் கட்டளையை ஏற்று ஒரேநாளில் செயலில் குதிக்கும் வீரர்களை—தொண்டர்களை— உடைய வேறு கட்சி ஏதேனும் இருக்கிறதா? எப்போதாவது இருந்தது உண்டா? ஒற்றுமைபற்றிப் பேசும் பெரியோர்களை தமிழரசுக் கட்சி தமிழ் மக்களிடம் உருவாக்கியுள்ள ஒற்றுமையை ஒருகணம் எண்ணிப் பாருங்கள் என்று கேட்கிறேன்.

### அகில இலங்கைக் கட்சிகளின் நிலை

95 பிரதிநிதிகளையுடைய பாராளுமன்றத்திற்கு இலங்கை முழுவதும் இயங்குவதாகத் தம்பட்டமடிக்கப்படும் கம்யூனிஸ்ட் கட்சி சென்ற பொதுத் தேர்தலில் மூன்றே மூன்று பிரதிநிதிகளை அனுப்பியது.

முப்பது வருட கால அரசியல் கட்சியான சமசமாஜக் கட்சி இலங்கை முழுவதற்குமாக பதினான்கு பிரதிநிதிகளையே பெற்றது.

நாட்டை ஆட்சி புரிந்த யூ. என். பி. கட்சி பெரும்பாலும் எல்லாத் தொகுதிகளிலும் போட்டியிட்டு எட்டே எட்டு பிரதிநிதிகளை மட்டும் பாராளுமன்றத்துக்கு அனுப்ப முடிந்தது.

ஆனால் தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் போட்டியிட்டு- அங்கும் எல்லாத் தொகுதிகளிலும் அல்லாது மொத்தமுள்ள பதினாறில் பதினான்கு தொகுதிகளில் மாத்திரம் போட்டியிட்டு பத்துத் தொகுதிகளைக் கைப்பற்றியது. 106 வாக்குகளினால் தோற்ற பட்டிருப்பையும் எடுத்துக்கொண்டால் பதினொன்று என்று கூடச் சொல்லலாம். இந்த ஒன்றே தமிழரசுக் கட்சிக்கு இருக்கும் வரவேற்பையும் ஆதரவையும் காட்டவில்லையா?

### ஜாதி வெறிக்கு சமாதி

தமிழ் சமூகத்தைப் பல நூற்றாண்டு கூறுபோட்டு குட்டிச்சுவராக்கிய ஜாதி வெறியைக் குறைப்பதில் தமிழரசுக் கட்சி தீவிர பங்கெடுத்தது. நேரடிப் போராட்டங்களிலும் இறங்கிச் செயல்பட்டது. தமக்குக் கிடைத்த ஒரேயொரு செனட்டர் பதவியை அதே சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அளித்து ஜாதி வெறிக்கு சமாதி கட்டியது.

### கல்வி வசதி

மலைநாட்டுத் தமிழ் குழந்தைகளின் கல்விக்கு-அவர்களையும் நம்மோடு இணைக்கும் நல்முயற்சியின் சின்னமாக வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் மேற்படிப்புக்கு வசதி செய்து கொடுத்தது.

தமிழரசுக் கட்சி என்ன செய்துவிட்டது என்று கேட்கிறார்கள் சிலர். இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று கேட்கத் தோன்றுகிறது நமக்கு

முப்பது ஆண்டுகளாகப் பிறரை நம்பிக் கெட்ட தமிழர்களை 'தன் கையே தனக்குதவி' என்னும் தாரக மந்திரத்தை நம்பச் செய்தது தமிழரசுக் கட்சி

தம் இனத்தில் தோன்றி-தம்மை வழிநடத்திச் சென்ற தலைவர்கள் நெறிதவறிப் போனதைச் சுட்டிக்காட்டி உரிமையின் பெருமையை உணர்த்தியது தமிழரசுக் கட்சி.

பிரிந்து கிடந்த தமிழ் மக்களை இணைத்தது தமிழரசுக் கட்சி.

பாடசாலைகள், உபதபாற் கந்தோர்கள், பாலங்கள் முதலான இவற்றைக் கொடுத்து தமிழ் பேசும் சமூகத்தை அடிமைப்படுத்தும் படுபாதகச் செயலை வெளிக்காட்டி சலுகைகளைவிட உரிமைகள் பெரிதென்று மக்களுக்குணர்த்தியது தமிழரசுக் கட்சி.

மொழிக்காக, இனத்திற்காக, நாட்டிற்காக கல்லடிபட்டாலும்-கசையடிபட்டாலும்-காலுதைபட்டாலும் கொள்கையை விட்டுக்கொடுக்கமாட்டோம் என்று காட்டியது தமிழரசுக் கட்சி.

தமிழ் மக்களின் வாழ்வொன்றே எம் வாழ்வென்று சத்திய விரதம் பூண்டு அதனால் சித்திரவதைப்பட்டது தமிழரசுக் கட்சி.

1956-ம் ஆண்டு அதிகாரத் திமிரோடு, பெரும்பான்மை அங்கத்தினரோடு, ஆட்சிப் பீடமேறித் தனிச் சிங்களச் சட்டத்தை கொண்டு வந்த பலம் வாய்ந்த எம். ஈ பி. அரசாங்கத்தை, திருமலை யாத்திரையின் மூலம்-சத்தியாக்கிரகத்தின் மூலம்-தமிழ் மொழி மசோதா மூலம்-நம்மோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் கல கலக்கச் செய்து, பொடிப் பொடியாக உதிரச் செய்தோம்; ஆட்டம் காணச்செய்தோம்.

திருமலை மாநாட்டை தடை செய்யச் சொல்லி முன்னாள் உதவித் தபால் அமைச்சர் திரு. கே. எம். பி. ராஜரட்ண ராஜினாமாச் செய்தார்.

நம் இயக்கத்திற்கு அஞ்சி தமிழ் மொழி மசோதா பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்பட்டபோது பல வகுப்பு வாதிகள் அரசாங்கத்தை விட்டு விலகினார்கள். அரசாங்கத்தின் பலம் அப்பொழுதிருந்தே குறைய ஆரம்பித்தது.

### ஆட்டம் கண்டது

ஆகஸ்ட் போராட்டத்திற்கு அரசாங்கம் அஞ்சி தமிழரசுக் கட்சியோடு ஒப்பந்தம் செய்தது. இந்த ஒப்பந்தத்தினால் மேலும் சில தீவிர வகுப்பு வாதிகள் அரசாங்கத்தை விட்டு வெளியேறினார்கள்.

இந்த அரசாங்கத்தை ஆட்சிப் பொறுப்பேற்றிய பௌத்த பிக்குகள் இந்த ஒப்பந்தத்தினால் ஆத்திரமுற்று முதலமைச்சர் வீட்டு முன்றலில் சத்தியாக்கிரகம் செய்யுமளவுக்கு காரியம் நடைபெற்றது

இலங்கை முழுவதும் முப்பது வருடங்களாக வேரூன்றி பல தொழிற் சங்கங்களையுடைய இடதுசாரிக்கட்சிகளினால் நடத்தப்பட்ட நூற்றுக்கணக்கான வேலை நிறுத்தங்களினால் அசையாத அரசாங்கம்-தமிழரசுக் [illegible] ஆட்டங்கண்டது.

(11-ம் பக்கம் பார்க்க)

## ஐக் டில்லியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேச்சுவார்த்தை இலங்கையின் இன்றைய அரசியல் நிலை பற்றியும், எதிர்கால அரசியல் நிலைபற்றியும் அமைந்திருந்தது என நம்பப்படுகிறது.

இலங்கையில் நாளுக்கு நாள் ஏற்படும் திடீர் அரசியல் சம்பவங்களோடு மேற்படி பேச்சுவார்த்தையைப் பிணைத்துப் பார்த்தால்,விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கக்கூடும் என்று சிலர் கருதுகிறார்கள்.

அப்படி நடைபெற்ற சம்பாஷணை தனிப்பட்ட சிநேக பூர்வமான சம்பாஷணை என்றும் குதிரைப் பந்தயங்கள் சம்பந்தமான சம்பாஷணையென்றும் கருதப்படுவதாகவும் தெரியவருகிறது.

[பிரசுரம்: வியாழன் இரவு 10-30 மணி]

## இலங்கை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பதும், அரசியலில் திருப்பம் ஏற்படும் நாள் தொலைவில் இல்லை என்பதையே காட்டுவதாகப் பலரும் நம்புகிறார்கள். இந்தச் சச்சரவுகளுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க இராணுவ ஆட்சி ஏன் வரமாட்டாது என்றும் கேட்கிறார்கள்.

இராணுவத் தலைவராக இருந்த திரு அன்டன் முத்துக்குமாரு பதவியிலிருந்து அகற்றப்பட்டதே ஒரு காரணத்துக்காகத்தான் என்றும் கூடப் பலரும் அர்த்தம் கற்பிக்கிறார்கள்.

முன் அறிவித்தல் செய்துள்ளபடி பொதுத் தேர்தல் நடைபெறுவது கூடச் சாத்தியமில்லை என்று ஆரு[illegible]

[பிரசுரம்: வியாழன் இரவு 11-00 மணி]


அரியதோர் சந்தர்ப்பம். கண்டு மகிழுங்கள்.

ஸ்ரீ தியாகராஜ கான சமாஜத்தின்

ஆதரவின் கீழ்

நடன கலாநிதி ஸ்ரீஜத். கோபிநாத் தங்கமணி அவர்களின் பிரதம சிஷ்யனும், வணங்காமுடி, சந்திரலேகா, பொன்முடி, பாரிஜாதம் முதலிய அனேக திரைப்படங்களில் நடனமாடியவரும், இலங்கையில் தயாரித்த சந்தேசய படத்தின் நடன டைரக்டருமான

திரு. N. சுகுமாரன் நாயர் அவர்கள் தம் கோஷ்டியினருடன் அளிக்கும்

நடன நிகழ்ச்சிகள்

இசை அமைப்பு : ஸினிமா மியூஸிக் டைரக்டர் R. முத்துஸ்வாமி அவர்கள்

இடம்: றோயல் கல்லூரி மண்டபம்

திகதி : 12 - 12— 1959 சனிக்கிழமை

நேரம்: மாலை 6-30 மணிக்கு

கட்டணம் : ரிஸேர்வ்ட் ரூ. 10/- 1-ம் வகுப்பு ரூ 5/- 2-ம் வகுப்பு ரூ. 3/- காலரி ரூ. 2/-


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாமா!

சிறுகதை — எழுதியவர்: எஸ். ஆர். யேசுதாசன்

சுவர்க் கடிகாரம்...ஒன்பது முறை 'டாவ' டித்துவிட்டு ஓய்ந்தது. மனேஜர் பத்மநாதன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க உட்கார்ந்திருந்தார். மூன்று அறைகள் காலியாக இருந்தன. தட்டெழுத்து இயந்திரம் தூங்கிக் கொண்டிருந்தது. அங்கு வேலை பார்க்கும் குமாஸ்தாக்கள் இருவரும், டைப்பிஸ்டும் வரவில்லை. மனேஜரின் முகம் கோபத்தால் சிவந்திருந்தது. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு தன் காரியத்தில் ஈடுபட்டார். மணி ஒன்பது முப்பது.

பிரதம குமாஸ்தா சங்கரன் 'விசில்' அடித்தபடி ஆபீசுக்குள் நுழைந்தான். அவன் ஒரு துடி துடிப்பான பேர் வழி. எவரையும் எளிதில் மடக்கிவிடுவான். மனேஜர் பத்மநாதன் கூட அவனிடம் வாலாட்ட முடியாது. சங்கரன் நேரே பத்மநாதனின் முன் போய் மௌனமாக நின்றான். அவன் அப்படி மௌனமாக நிற்கிறான் என்றால் சொற்ப நேரத்தில் ஒரு பூகம்பமே ஏற்படப்போகிறது என்று அர்த்தம்! இதை நன்கு அறிவார் பத்மநாதன். ஆகையால் அவனை நிமிர்ந்து பார்க்காமல் தன் காரியத்தில் ஈடு பட்டிருந்தார்.

"சார்! அடியேன் நமஸ்கரிக்கிறேன்" என்றான் சங்கரன். மனேஜரின் இதயம் "பக்! பக்!" கென அடித்துக் கொண்டது.

"சார்! என்ன மௌனமோ? ஏன் சார் கல்லுப்பிள்ளையார் ஆட்டம் இருக்கிறீர்கள்" என்று கத்தினான் சங்கரன்.

நிமிர்ந்து பார்த்தார் மனேஜர் பத்மநாதன். இராமாயணத்தில் 'நடிகர் திலகம்' "போ! போ!" என்று முகபாவத்தால் சாடை காட்டுவது போல் மனேஜரும் சாடை காட்டினார். அதெற்கெல்லாம் அசையாத சங்கரன்-

"சார் இன்று எங்க பாட்டிக்கு கலியாணம். நான் போக வேண்டும். அனுமதி கொடுங்கள்" என்று ஒரு போடு போட்டான், எப்படியும் மனேஜரைப் பேசவைக்கவேண்டும் என்ற நோக்கத்தில்.

"யாருக்கு? உன் பாட்டிக்கா கலியாணம்? என்ன கேலி பண்ணுகிறாயா?" மனேஜர் வாய் திறந்து பேசினார்.

"ஆமாம் சார்! நான் கட்டாயம் போக வேண்டும். வருகிறேன்" என்று கூறிவிட்டு, (அவ) மரியாதையாக 'சல்யூட்' ஒன்றும் அடித்துவிட்டு வந்த வழியே ஓடினான். மனேஜர் அவன் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது—

சொல்லி வைத்தால் போல் சேகர் வந்து வாசலிலேயே நின்றான். அவன் ஓர் குமாஸ்தா சாதுவான குணம் கொண்டவன். ஆனால் சங்கரனுடன் சேர்ந்த பின்னர் சாதுவான குணம் விடை பெற்றுக்கொண்டது.

"சார்! உள்ளே வர அனுமதியுண்டா?" முறைத்துப் பார்த்தார் மனேஜர். சங்கரன் இல்லாவிடில் சேகரின் வால் ஆடாது என்பது மனேஜருக்கு நன்கு புரியும். அதனால் 'தனது அடக்கு முறை ஆட்சி'யைச் செலுத்த திடம் கொண்டார்.

"காலிப் பசங்கள்! அந்த மடையன் சங்கரன் என்றால் அவன் அப்படி! நீ இப்படி! இது என்ன ஆபீஸா? சந்தையா நீங்கள் நினைத்தபடி வரவும் போகவும்? இருங்கள் எல்லோருக்கும் அடுத்த மாசம் சீட்டுக் கிழித்து விடுகிறேன்."

"எனக்குமா சார்"? டைப்பிஸ்ட்கமலாவின்குரல் சுருதி இறக்கத்துடன் ஒலித்தது. அவளும் அப்போது தான் வந்துகொண்டிருந்தாள்.

"ஆமாம்! எல்லோருக்கும் தான். அந்த படுபாவிப் பயல் சங்கரனுடன் சேர்ந்து கொண்டு நீங்கள் ஆபீஸைப் படுத்தும் பாடு, அப்பப்பா! அடுத்த மாசம் வரை பொறுங்கள். எல்லோரையும் ஒன்று கூட்டி அனுப்பி விடுகிறேன்" மனேஜர் கூறி முடித்தார்.

"என்னையுமா சார்?"

குரல் வந்த திக்கை ஆச்சரியத்துடன் நோக்கினார் மனேஜர். சேகரும் கமலாவும் துள்ளிக் குதித்தார்கள். சங்கரன் ராஜ நடை போட்டுக் கொண்டு வந்தான். மனேஜரின் முகம் பேயறைந்ததைப் போலாயிற்று.

"சர்ர்! இது உங்களுக்கு அடுக்குமா சார்? நாங்கள் மூவரும் பிள்ளை குட்டிக்காரர்கள் சார்? தலைக்கு முக்கால் டசின். எங்களை மன்னியுங்கள் சார். உங்களையே அடுத்த மாதம் அனுப்பி வைக்கிறோம்." என்று கேலியுடன் கூறிய சங்கரன் சேகருக்கும் கமலாவுக்கும் கண் சாடைக் காட்டினான். அவர்கள் இருவரும் ஓடிச் சென்று தங்கள் அலுவலில் ஈடுபட்டனர்.

"சங்கரன்! இது உனக்கு சரியில்லாத வேலை. நீ கெடுவதும் போதாமல் எல்லோரையும் குட்டிச் சுவராக்குகிறாய்"—மனேஜர் எப்படியோ துணிவுடன் கூறினார்.

"ஆமாம் சார்! இது எனக்கு அவ்வளவு பிடிக்கவில்லைத்தான். எப்படியும் அடுத்தமாதம் இத் தொழிலையே விடச் செய்து விடுகிறேன். உங்களை இப்பக்கம் தலைகாட்டாமலே செய்து விடுகிறேன்" என்று கேலியுடன் கூறிவிட்டு தன் அறைக்குட் சென்றான் சங்கரன். அடுத்த அறையிலிருந்து ஓர் பெண்ணினதும் ஆணினதும் சிரிப்பொலி காதைப் பிளந்தது.

அவமானத்தால் துடித்துப் போன மனேஜர் பத்மநாதனின் இதயத்தில் புதிய யோசனை ஒன்று கிளம்பியது. அதன் படியே செய்யத் திட்டமிட்டு டெலிபோன் டயலைச் சுழற்றினார்.

ஃ ஃ ஃ

'டைப்பிஸ்ட்' கமலா ஒரு கடிதத்தை வேண்டுமென்றே அடிதலை மாறி டைப்பண்ணிக் கொண்டு போய் மனேஜரிடம் நீட்டினாள். அதை வாங்கிப் பார்த்த மனேஜருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அதைக் கிழித்தெறிந்துவிட்டு தாமே டைப் பண்ணச் சென்றார். கமலா சேகரது அறையை நோக்கிச் சென்றாள். அப்பொழுது ஒரு பெண் வேகமாக வந்து மனேஜரின் மேசைக்கு முன்னிருந்த கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். இதைக் கவனித்த சங்கரன் ஓடி வந்து, "தாயே நீ யாரம்மா? துணிவுடன் இருக்கிறாயே? ஏன் இங்கு வந்தீர்கள்? அதோ அங்கே மனேஜர் டைப் பண்ணுகிறார்" என்றான்.

"சடப்! நீ யாரிடம் பேசுகிறாய் என்று தெரிந்து கொள். நான் உதவி மனேஜர். கொழும்பிலிருந்து ஜெனரல் மனேஜர் அனுப்பியிருக்கிறார்" என்று பட்டாஸ் மாதிரி வெடித்தாள். அவள் அழகி, பேரழகி, அழகின் இருப்பிடம்; அழகு தேவதையின் மறு உரு. பெயர் வனஜா. அழகான பெயர் தான்.

"ஓ! தாங்களா? இருங்கள். அடுத்த மாசம் இருவரையும் சேர்த்து அனுப்பிவிடுகிறேன்." என்று கோபமுடன் கூறினான். ஆனால் இதற்கெல்லாம் அசைந்துகொடுப்பவளாக இல்லை அந்தப் பெண் வனஜா.

"மிஸ்டர், ப்ளீஸ் ரேக் யுவர் சீற். டோண்ட் கெயர் எபவுட்......" ஆங்கிலத்தில் பேசினாள்.

சங்கரன் காதவழி ஓடினான்.

பக்கத்து அறையில் நின்று இவைகளை ரசித்துக்கொண்டிருந்த மனேஜர் ஒன்றும் தெரியாதவர் போல் வெளியே வந்தார்.

"ஓ! நீங்களா? ஜெனரல் மனேஜர் தெரிவித்தார். அதுதான் உங்கள் அறை. வேண்டிய வசதிகள் யாவும் அங்கு உள்ளன" என்று அழைத்துக்கொண்டு போய் அறையைக் காட்டி விட்டு மெல்லக் கூறினார்:-

"உன் கையில்தான் எல்லாம் இருக்கிறது. எப்படி

(15-ம் பக்கம் பார்க்க)


## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறுமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.



இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




ஃ ஃ ஃ

- ஒருவரின் ஆயுள் காலம் முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

ஃ ஃ ஃ

ஸோல் ஏஜண்டுகள்:

ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது


# சூனிய விவாகமும் . . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நடுத்தீர்ப்புப் பிரிவினையும் கொடுக்கப்படும்:

### நடுத்தீர்ப்புப் பிரிவினை கிடைக்கும் சந்தர்ப்பங்கள்

1 என்னென்ன சந்தர்ப்பங்களில் மணவினைமுறி கிடைக்குமோ அச் சந்தர்ப்பங்களில் நடுத்தீர்ப்புப் பிரிவினை பெற்றுக் கொள்ளலாம். அதாவது வியபிசாரம், விஷமத்தனமாகக் கைவிடுதல் (Malicious Desertion), விவாக காலத்தில் பலட்சயமடைந்திருத்தல்.

2 தம்பதிகளுக்கிடையே நடக்கும் தகராறுகள் சச்சரவுகளின் காரணமாக ஒரு தம்பதியின் உயிருக்கு அல்லது உடம்பு நலனுக்கு அபயகரமான பாதகமேற்படுமென அத்தாட்சிப் படுத்தினால் அத் தம்பதி பிரிவினை பெறலாம். இதைவிட ஒரு தம்பதி மற்றத் தம்பதியை சதா கொடுமைப்படுத்தியும் நிஷ்டூரமாயும் நடந்து வந்தாலும் நீதிமன்றம் மேற்கூறிய நடுத்தீர்ப்புப் பிரிவினைத் தீர்ப்பு வழங்கும்.

3 கணவன், மனைவியின் ஆஸ்திகளை வீணே விரையப்படுத்தி அவளை ஆண்டியாக்கும் அளவுக்குக் கொண்டு வரக்கூடிய கட்டம் ஏற்படும் சந்தர்ப்பத்திலும் நடுத்தீர்ப்புப் பிரிவினை மனைவிக்குக் கிடைக்கும். தற்போதைய சமுதாயத்தில் நாகரிக வாழ்க்கையில் ஈடுபட்ட [illegible] யாண்டிகளாக்கி வைத்த போதிலும் சட்டம் அக் கணவன்மாருக்கு ஒரு விமோசனமும் அளிக்கவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

4 தம்பதிகளிலொருவர் பீரமேக நோய் வாய்ப்பட்ட காரணத்தாலோ அல்லது வேறெக் காரணத்தாலோ வியபிசாரம் நடத்தியிருக்க வேண்டுமெனும் சமூசயமெழும் சந்தர்ப்பத்திலும் நடுத்தீர்ப்புப் பிரிவினை மற்றத்தம்பதிகளுக்குக் கொடுக்கப்படும். இந் நோய் விவாகத்துக்கு முன்னரே யிருந்தது என நிரூபிக்கப்படின் இப் பிரிவினை வழங்கப்படமாட்டாது.

5 ஒரு தம்பதி மற்றத் தம்பதியின் உயிரைப் போக்கப் பிரயத்தனப் படுத்தினரென நிரூபித்தாலும் நடுத் தீர்ப்புப் பிரிவினை வழங்கப்படும்

6 ஒரு தம்பதி மற்றத் தம்பதியுடன் இல்லற வாழ்க்கை நடத்த மறுத்தாலும் இப் பிரிவினை வழங்கப்படும்.

7 கணவன் மனைவியைத் துர் நடத்தையில் ஈடுபடவலுக்கட்டாயப் படுத்தினலும் மனைவி நடுத்தீர்ப்புப் பிரிவினை பெறலாம். இத்தகைய கீழ்த்தரக் குணம் பெரும்பாலான மக்களிலில்லையென்பது பாராட்டக் கூடிய ஒரு விஷயம். எனினும் அத்தகைய கீழ்த்தரக் குணமுள்ள ஆடவர்கள் சிலர் இருக்கிறார்களென்பதைச் சட்டமே கவனித்திருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

8 ஒரு தம்பதி பைத்தியத்தின் உக்கிரத்தினல் மற்றத் தம்பதியின் தேகத்துக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய அளவுக்கு நோய்வாய்ப்பட்டிருந்தால், நடுத்தீர்ப்புப் பிரிவினை வழங்கப்படும்.

9 சதா குடிபோதையிலிருந்து தம்பதியைத் துன்புறுத்தும் சந்தர்ப்பத்தில் மற்றைய தம்பதி பிரிவினை கேட்க உரித்துண்டு.

10 இரு தம்பதிகளும் நீதிமன்றம் முன் தாங்கள் ஒற்றுகூடி வாழ முடியாதென ஒத்துக்கொண்டால் நீதிமன்றம் நடுத்தீர்ப்புப் பிரிவினையை வழங்கும். இச் சந்தர்ப்பத்தில் ஒன்றை நன்ருக விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது தாமாகவே ஒப்பந்தம் மூலம் பிரிந்திருக்கும் தம்பதிகளில் ஒருவர் பிரிவு ஒப்பந்தத்தை யகற்றி இல்லற வாழ்க்கை யாரம்பிக்க விரும்பலாம் அச் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தத்தை அநுகூலமாகக் கொண்டு மற்றைய தம்பதி நடுத்தீர்ப்புப் பிரிவினை கோர இடமில்லை. அப்படிக் கோரினல் மற்றைய தம்பதி அதை எதிர்த்து வழக்காடலாம். இருவரும் நீதிமன்றம் முன் சம்மதித்தால்தான் மேற்கூறியபடி நடுத்தீர்ப்புப் பிரிவினை நீதிமன்றத்தால் வழங்கப்படும்.

அடுத்த கட்டுரையில் நடுத்தீர்ப்புப் பிரிவினையின் விளைவுகளைப்பற்றியாராய்வோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவில் . . .

(9ம் பக்கத் தொடர்ச்சி)

### ஏன் அடிபட்டோம்

அரசியலில் தோல்வி கண்டவர்கள்- பொது மக்களால் அடித்துவிரட்டப்பட்ட சில அரசியல் அனுமதேயங்கள் தமிழரசுக் கட்சி அடியும்-உதையும் வாங்கிக் கொடுத்தது என்கிறார்கள். உலகநாடுகளில் அடிமைப்பட்ட இனங்கள் தம் சுதந்திரத்தைப் பெற முனைந்த போது ஆளும் இனத்தினால் நசுக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாம் அடிபட்டோம், உதை பட்டோம். எதற்காக? இந்த நாட்டில் மானத்தோடும், மரியாதையோடும், அரசியல் உரிமையோடும் வாழ்ந்த நாம் அடிமைப்பட்டபோது இழந்த வற்றைத் திரும்பப் பெறுவதற்கு முனைந்தோம். இது இங்குமட்டுமல்ல உலகம் முழுவதும் நடந்து வந்த-நடக்கிற-நடக்கப் போகும் நிகழ்ச்சியாகும்.

ஒரு நாட்டை மற்றொரு நாடு அடிமைப்படுத்தும் போது இரு நாடுகளும் நிம்மதியாக இருக்க முடிவதில்லை. அடிமைப்பட்ட தன் சுதந்திரத்தை பெற அந் நாடு முயலும். அடிமைப்படுத்திய நாடு சுதந்திரக் கிளர்ச்சியை அடக்க, அழிக்க பலாத்காரத்தைப் பிரயோகிக்கும். இது சரித்திரம் கண்ட உண்மை.

### செத்து மடியவும் தயார்

இலங்கையில் பெரும்பான்மை மக்களின் அரசியல் பலத்தினால் தமிழ் பேசும் மக்கள் தம் விழியினும் மேலான மொழியை இழந்தார்கள்; தமிழ்ப் பிரதேசத்தை இழந்தார்கள்! உயிரினும் மேலான மானத்தை இழந்தார்கள். இழந்த மானத்தை-பறிக்கப்பட்ட தாய்மொழி உரிமையை மீட்க தமிழரசுக் கட்சி உழைத்தது—உழைக்கின்றது. தொடர்ந்து உழைக்கவே போகிறது. வெற்றியும் காணவிருக்கிறது.

தமிழ் மக்களின் மொழிச் சுதந்திரத்தை வேண்டி—அவர்களின் பிரதேச பாதுகாப்பை வேண்டி—அவர்கள் சந்ததியின் தன்மானத்தைக் காக்க வேண்டி நாம் நடத்தும் தமிழ் விடுதலை இயக்கம் தவறென்று பெரிய மனிதர்கள் சிலர்—அரசியலில் செத்துப்போனவர்கள் சிலர்—சொல்லுவார்களானால் நமக்குக் கவலை இல்லை. அவர்கள் சொல்லும் அதே தவறை நாங்கள் செத்து மடியும்வரை செய்ய ஆயத்தமாக இருக்கின்றோம்.

### காந்தியே பல்லுடைபட்டார்

உலகில் சுதந்திரம் வேண்டி கிளர்ச்சி செய்த அத்தனை பேரும் இதே தவறைத்தான் செய்திருக்கிறார்கள். உலகம் போற்றும் மகாத்மா காந்தி அடிகளும் அதே தவறைத்தான் செய்திருக்கிறார்.

நூற்றைம்பது ஆண்டுகளாக இந்திய மக்கள் எத்தனை பேரை பலி கொடுத்திருக்கிறார்கள்! எத்தனை கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன! மகாத்மா காந்தியடிகளே பல்லுடைபட்டார்.

### வீணர்கள் செய்தது என்ன?

அவர் காலத்தில் சாத்வீக சத்தியாக்கிரகத்தில் மக்கள் ஈடுபட்ட சமயம் இந்திய மண்ணில் பிறந்து வெள்ளைக்காரர்களின் செல்லப்பிள்ளைகளாக வாழ்ந்த ராவ்பகதூர் திவான்பகதூர், ஜமீன்தார், சமஸ்தான மகாராஜாக்கள் ஆகியோர் வாழ்ந்தார்கள். இவர்களினால் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்ததா? இந்திய மக்கள் அடிபட்டபோது இவர்களில் பலர் ஆங்கில நாட்டில் உல்லாசப் பிரயாணம் செய்தார்கள் கிராமங்கள் தீக்கிரையான சமயம் இவர்கள் வெள்ளிக் கிண்ணங்களில் மேனாட்டு குடிவகைகளை ருசி பார்த்தார்கள். மக்கள் செத்து மடிந்த போது இவர்கள் விழியால் மொழி பேசும் வாலைக் குமாரிகளோடு களிநடனம் செய்தார்கள்.

அதுமட்டுமா? "யாருக்குத் தேவை சுதந்திரம்? சுதந்திரம் கிடைத்தால் இந்தியாவை ஆளக் காந்தியால் முடியுமா? கைராட்டையை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? சுதந்திரமாம்—சுதந்திரம்! இவர்களையெல்லாம் யார் போய் செத்துத் தொலையச் சொன்னார்கள்?" என்று கேட்டார்கள் சுதந்திரக் கிளர்ச்சி நடந்த போது சும்மாகிடந்தவர்கள். வெள்ளைக்காரர்கள் இந்தியாவில் வேரூன்ற இடமளித்தவர்கள். "சுகபோகமாக வாழ்வதற்கு சுருக்கமான வழி இருக்கிறதே. வெள்ளைக் காரர்களோடு ஒத்துழைத்தால் அடியும், உதையும் ஏன் கிடைக்கிறது?" என்றும் கேட்டார்கள்.

அப்படித்தான் சொல்கிறார்கள் நம் நாட்டிலும் சிலர்.

### நம்மவர்கள் கேட்கிறார்கள்—

சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ் மக்களிடத்தில் வேரூன்ற வழி செய்து கொடுத்தவர்கள்—

தமிழ் மக்களை எப்படி பிரித்து ஆண்டு அழிக்கலாமென்று சிங்கள மக்களுக்கு புத்தி சொல்லிக் கொடுத்தவர்கள்—

தமிழ் மக்களை அழிக்கும் திட்டங்களை தயாரித்து கொடுத்தவர்கள்—

அதற்காக முழு மந்திரி—அரை மந்திரி பதவிகளை பரிசாகப் பெற்றவர்கள்—

தமிழ் மக்கள் அநியாயமாகத் தாக்கப்பட்ட போது தாக்கிய கொடுங்கோன்மையை எதிர்க்காமல், "தமிழரசுக் கட்சியால் வந்ததைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார்கள். அதாவது இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டுமென்று கேட்ட காந்திஜியைப் பார்த்து யாருக்குத் தேவை சுதந்திரம்?" என்று கேட்டார்களே சில கேடுகெட்டவர்கள், அவர்களைப் போலத்தான் இவர்களும் கேட்டார்கள்; கேட்கிறார்கள்.

### எது தவறு?

வரிப்புலியின் வாயில் சிக்கிய மான் தன் உயிரை மீட்க போராட்டம் நடத்துவது தவறா? பாம்பின் வாயில் சிக்கிய தவளை தப்புவதற்கு முயற்சிப்பது தவறா? பருந்தின் காலில் அகப்பட்ட கோழிக்குஞ்சு தப்புவதற்கு எத்தனிப்பது தவறா? இவை தவறானால்தான் உரிமை இழந்த தமிழினம் சுதந்திரம் பெற முயற்சிப்பதும் தவறாகும்.

காட்டிக்கொடுத்தவர்கள், தமிழினத்தை இந்த நிலைக்கு கொண்டுவந்து விட்டவர்கள் வேண்டுமானால் தவறு என்று சொல்லலாம் பகுத்தறிவு உள்ளவர்கள் உண்மை உணர்ந்தவர்கள் அனைவருமே தமிழரசுக் கட்சியின் சொல்-செயல் அத்தனையையும் தகுதியானது-சரியானது என்றே முடிவு செய்வார்கள்.

# சேர். பொன். இராமநாதனின் பிள்ளைகள் 'இங்கிலீஸ்' பேசவில்லை

## சிங்களவரும்சிங்களத்திலேயேபேசவேண்டும் என்ற மொழிப் பற்றைக் கிளப்பியவரும் அவரே

## 'சிங்கள பௌத்தயா' எனும் பத்திரிகை வெளியிடும் தகவல்

"சிங்கள மக்களாகிய நீங்கள் சிங்களத்தில் பேசாதிருக்க, அதை நானா பேசுவது? அல்லது என் இனத்தவரா (தமிழர்) பேசுவது? என்னைப்பொறுத்தவரையில் என்னுடைய வீட்டில் என் குழந்தைகளைக்கூட நான் ஆங்கிலத்தில் பேச அனுமதிப்பதில்லை. தாய்மொழி வழங்கட்டும் என்பது என் விருப்பம். நீங்கள் (சிங்களவர்கள்) சிங்களத்தில் உங்கள் கருமங்களைச் செய்ய ஆர்வங்கொள்ள வேண்டாமா?"

மேற்கண்டவாறு காலஞ்சென்ற தேச பக்தர் திரு சேர் பொன்னம்பலம் இராமநாதன் சிங்களவரைப் பார்த்துக் கேட்டதாக 'சிங்கள பௌத்தய' என்ற பத்திரிகையின் 28-11-59 இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சிங்கள இனத்துக்கு மொழிப்பற்றையும் இனப் பற்றையும் ஊட்டும் வகையில் எழுதப்பட்டுள்ள அந்தக் கட்டுரையில் சேர் பொன்னம்பலம் இராமநாதனுக்கு புகழ்மாலை சூட்டப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கட்டுரையில் கூறப்பட்டுள்ளதாவது:-

### போராட விரைந்தார்

"உயர் வகுப்பைச் சேர்ந்த சிங்கள மக்கள் சாம்ராச்சியவாதிகளின் விவகாரங்களுள் மூழ்கி இன-மத எழுச்சியோ உணர்ச்சியோ இன்றி இருந்ததால் இலங்கையின் சரித்திரப் பெருமையும்புகழ் பூத்த நிலைமையும் குலையத் தொடங்கியதைக்கண்டதும் சேர் பொன்னம்பலம் இராமநாதன் சுதந்திரப் போராட்டத்துக்கு விரைந்து எழுந்தார். அவர் தமது சாதி-மத வேறுபாட்டைப் பொருட்படுத்தாமல் போராட்டத்துக்கு தயாரானார்.

### நினைவுகூரல் கடமை

"இலங்கையின் மூத்த புதல்வனாய் உலகெங்கும் புகழ் நிலவ வாழ்ந்த சேர் பொன்னம்பலம் இராமநாதன் நம்மை விட்டுப் பிரிந்து இன்று 29 வருடங்களாகின்றன. இலங்கைவாழ் சிங்கள இனத்தின் மேம்பாட்டில் புது அத்தியாயம் புரட்டப்படும் இவ்வேளையில் தேசபக்தரான சேர் பொன்னம்பலம் இராமநாதனை நினைவுபடுத்திக் கொள்வது நமது கடமையாகும்.

"சேர் பொன்னம்பலம் இராமநாதன் சொல்லுகிறார்:-

### தாய்மொழி பேசுங்கள்

"'நான் சிலவேளைகளில் ரயிலில் பிரயாணம் செய்யும் பொழுது சிங்களவர்களில் உயர்ந்தவர்கள் என்று கருதப்படும் பலரைக் கண்டுள்ளேன். அவர்கள் பேசுவது 'பறை' (பிற) மொழியில். அன்புடையீர்! சிங்கள வாய் சிங்களத்தைப் பேசவில்லையானால் அதை நானா பேசுவது? அல்லது என்னுடைய இனத்தவரா (தமிழர்) பேசுவது? என்னைப்பொறுத்தவரையில் என் குழந்தைகளைக்கூட நான் ஆங்கிலத்தில் பேச அனுமதிப்பதில்லை. தாய்மொழி வழங்கட்டும் என்பது என் விருப்பம். நீங்கள் சிங்களத்தில் உங்கள் கருமங்களை ஆற்றுவதற்கு முந்த வேண்டாமா?

### சரியான வழியில் செல்லுங்கள்

"'பிழையான வழியில் செல்லும் உங்களிடம் அதற்கு எதிர்மாறாகப் பேசுகிறேன். சரியான வழியில் செல்வீர்களானால் நான் உங்களோடு நிற்பேன். உண்மையைக் கூற விரும்புகிறேன். பொய்ப்பிரசாரம் செய்யவில்லை.

"'அருமையான கலாசாரத்தையும் சொல்வளத்தையும் உரிமையாகக்கொண்ட சிங்களவர்கள் சிங்களத்திலேயே பேசிப் பழக உணர்ச்சியுற்றெழ வேண்டும்'

"சேர் பொன்னம்பலம் இராமநாதனின் இப்படியான பேச்சுகளிலிருந்து சிங்கள மக்களிடம் அவர் காட்டிய அன்பும் பரிவும் தெரிய வருகிறது.

### உதாரண புருஷர்

"அவர் தேசிய வீரர், ஆத்மசீலர், மக்களுக்கெல்லாம் உதாரண புருஷர்"—இவ்வாறு 'சிங்கள பௌத்தயா' என்ற சிங்களப் பத்திரிகைக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.


வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்தல்

நத்தார்

பண்டிகைக்கு

வேண்டியவற்றிற்கு

கொண்டாட்ட வைபவங்களுக்குகந்த கண்ணைப் பறிக்கும் பல வண்ண வேலைப்பாடும், நவ நாகரிக மோஸ்தர்களிலுமான

சாரிகள், சில்க்குகள், நைலோன்கள் இன்னும் பல சட்டைத் துணிகளும்

பற்பல ரகங்களில் எம்மிடம் உள்ளன.

★ பியூர் சில்க் மணிப்புரி சாரிகள்
நல்ல வர்ணங்களிலும் அழகிய டிசைன்களிலுமானது.

★ பருத்தி நூல் மணிப்புரி சாரிகள்
1960 வருடத் தெரிவுகள்

★ நவீன டெக்கா சாரிகள்

★ இந்தியன் வோயில் சாரிகள்

★ அச்சடி, சதாடபேட்டா, கிளேஸ்ட்கொட்டன், நைலோன், ஓர்கண்டி ரோபியா வோயில்கள், பெர்குஸன் பெப்ரிக்குகள், பருத்தி நூல், பேப்ரிக்ஸ் இன்னும் பல

நத்தார் பரிசளிப்புக்குகந்த ஷேர்ட்டுகள், 'டை'கள் கால் மேஸ்கள், கைலேஞ்சிகள், இன்னும் பல 'உள்ளன.

அலங்கரிப்புத் துணிகள்

கண்ணைக் கவரும் வர்ணங்களில் பகட்டான பல தெரிவுகள் உள்ளன

கிறீரோன்ஸ்

பின்னல் வேலைப் பாடுடைய திரைச் சேலைகள், டெறிலேன் லேஸ் படுதாத் துணிகள்

மணமகளுக்குகந்த மண விழாச் சாரிகளும் எம்மிடம் உள்ளன.

மௌலானா

இலங்கையில் பிரபல ஜவுளி மாளிகை

கொழும்பு — கண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரன் கலைப் பகுதி
# ஆடல்பாடல்காட்சி

நாடகம்:

## டாக்டர் கல்யாணம்

நடிகர் திலகத்துக்கு சிலோன் தியேட்டர்ஸ் அதிபர் சேர் சிற்றம்பலம் கார்டினர் அளித்த இனிய விருந்திலன்று "டாக்டர் கல்யாணம்" நாடகமும் நடைபெற்றதால் முழுமையாக அதைப் பார்க்க முடியாமல் போய்விட்டது. அது ஒரு குறையாகவே படுகிறது. நாடகத்தின் கடைசிக் கட்டங்களைப் பார்த்தமட்டில் முற்பகுதியையும் பார்த்திருந்தாலோ என்ற அங்கலாய்ப்புத்தான் ஏற்படுகிறது.

### கதை

பணமே கண்ணுக இருந்த கருணாகரம் பிள்ளையின் பெண்ணை இரு சகோதரர்கள் உயிருக்கு உயிராகக் காதலிக்கிறார்கள். அவர்களுள் ஒருவரை அவளும் அடையத் துடிக்கிறாள். ஆயினும் சகோதரர் இருவர் தம் பெண்ணுக்குப் போட்டி போட்டதைச் சாக்காக வைத்துக்கொண்டு யாருக்குமே அவளைக் கட்டிக் கொடுக்க மறுக்கிறார் அவர். கட்டிக் கொடுத்துவிட்டால் பணமெல்லாம் சீதனமாகப் போய்விடுமே, அப்புறம் என்ன செய்வது என்ற கவலை அவருக்கு. கடைசியில் பெண் தாம் விரும்பியவனை அடைகிறாள். ஏமாற்றமும் அதிர்ஷ்டமும் அவளுக்குக் கைகொடுக்கின்றன.

### இராம் சுந்தர்

கனிந்த காதல் கல்யாணத் தகராறை மையமாக வைத்து விகடப் பேச்சுகளைப் பொதிந்து பெரும் பகுதியை ஓட்டியிருக்கிறார்கள். பார்த்தவர்கள் நன்றாகச் சிரித்திருக்கிறார்கள். தகராறை உண்டுபண்ணி நாடகத்தை இழுத்துச் சென்ற பொறுப்புக்கு உரியவர் கருணாகரம் பிள்ளையின் பாத்திரத்தை ஏற்று நடித்த இராம் சுந்தர் ஆவர். பேச்சு, பார்வை, அங்க அசைவு, முகச் சுழிப்பு எல்லாமே தங்கவேலு பாணி. வேஷம் கூட அப்படித்தான். பொதுவாகக் கை தேர்ந்த நடிகர்களை அடியொற்றி நடிப்பவர்கள் தங்கள் தனித் தன்மையை இழந்து ஒரிஜினலிட்டியை (Originality) கோட்டை விட்டு, அதுவும் இல்லாமல், இதுவும் இல்லாமல் இரண்டுங் கெட்டான் நிலையில நின்று தவித்து பார்ப்பவர்கள் சபிக்கும் அளவுக்குத் தாழ்ந்து விடுவது வழக்கம். இராம் சுந்தர் விஷயம் வேறாக இருந்தது. பொறுக்கியதைத் தம்மிடம் உள்ளதோடு பொருத்திச் சிறப்பாக நடித்தார்.

### மற்றவர்கள்

மகன் சந்திரனாக வந்த மணிப்பயல் பி. சந்திரசேகரனும், சகாயமாக வந்த எஸ். கந்தநாதனும், காமாட்சி என்ற பெயரில் வந்த எஸ். மோகனதாஸும் நகைச் சுவை நாடகத்தை களை சொட்ட வைத்தார்கள் என்றே சொல்லலாம்.

சாவித்திரியாக (கதாநாயகி) நடித்த செல்வி. ஜி. ஜெயமணி, சதாசிவமாக நடித்த ஜி. ராஜா மற்றும் ஜோக்கிம் பர்னாந்து, கந்தநாதன், பி. என். இராமச்சந்திரன், ஜோர்ஜ் சந்திரசேகரம், சூசைதாசன் முதலானோரின் நடிப்புப் பற்றிக் குறிப்பிடுவதற்கு அவர்கள் நடித்த கட்டங்களைப் போதியளவு பார்க்க முடியவில்லையே என்று வருந்துகிறோம்.

### சிரித்து மகிழ முடிந்தது

ஆணைப் பெண்ணாக நடிக்க வைத்து கடைசியில் தாம் ஆண்தான் என்று குட்டை வெளிப்படுத்த வைத்தது நகைச் சுவை நாடகத்துக்கு மிகப் பொருத்தமாகவும் ரஸிக்கக் கூடியதாகவும் இருந்தது. கடைசிக் கட்டங்களில் பாடல்கள் இருக்கவில்லை. ஒலி, ஒளி அமைப்புகள் நன்றாகவே இருந்தன. காட்சி அமைப்பு பார்த்த மட்டில் பரவாயில்லை. நடிகர்களின் மேக் அப்பும் அளவோடு இருந்தது. நாடகத்தைப் பார்த்து அலுத்துக் கொள்ளாமல் சிரித்து மகிழ முடிந்தது.

—கே. கே. ஆர்.



அப்பாவின் காதில் மணிப்பயல் ஏதோ சொல்கிறான். "டாக்டர் கல்யாணம்" நாடகத்தில் இராம் சுந்தர்-சந்திரசேகரன்.

## சனிக்கிழமை நடன நிகழ்ச்சி

திரு என். சுகுமாரன் நாயர் தம் குழுவினருடன் 12-12-59 சனிக்கிழமை கொழும்பு றேயல் கல்லூரி மண்டபத்தில் சுடன விருந்து அளிக்கவிருக்கிறார்.

கலைப்பணிக்கெனப் புதிதாகத் தொடக்கப்பட்ட ஸ்ரீ தியாகராஜ கான சமாஜம் இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருக்கிறது. சினிமா சங்கீத டைரக்டர் திரு ஆர். முத்துசுவாமி இசை அமைத்திருக்கிறார்.

பிரபல நாட்டியக்காரரான திரு. சுகுமாரன் நாயர் நடன கலாநிதி கோபிநாத் தங்கமணியின் சிஷ்யராவர். பல திரைப்படங்களில் நடனமாடியிருக்கிறார். மூன்று மாதங்களுக்கு முன்னர் நிருத்தியோதய நாட்டிய இசைக் கல்லூரிப் பொறுப்பாளர் திருமதி தங்கராசாவோடு இவர் சேர்ந்து ஆடியதை நேரில் பார்த்தவர்கள் மீண்டும் மீண்டும் இவர் ஆட்டத்தைப் பார்க்க விழைவது இயற்கை. இம்முறை தமது மாணவிகளோடு சேர்ந்து இவர் ஆடுகிறார்.



சுகுமாரன் நாயர் குழுவினர் தரும் "ஸ்பெஷல் போஸ்", பின்னணியில் நிற்கும் திரு சுகுமாரன் நாயருக்கு முன்னால் இடப்புறத்தில் செல்வி ஈ டி. ஹேமலதாவும் வலப்புறத்தில் செல்வி சந்திரா ராமேஷ்வரமும் தோன்றுகிறார்கள். படத்தில் உள்ள எல்லோரும் சனிக்கிழமை நிகழ்ச்சியில் பங்குபற்றுகிறார்கள்.

## ஞாயிறு இசை நிகழ்ச்சி

நாகர் கோயில் கே. மகாதேவன் 13-12-59 ஞாயிற்றுக்கிழமை மாலை வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் இசைக் கச்சேரி நிகழ்த்தவிருக்கிறார்.

இலங்கை சங்கீத நாட்டிய சங்கம் இக் கச்சேரிக்கு ஒழுங்கு செய்துள்ளது.

நாகர் கோயில் மகாதேவன் கொழும்பில் நடத்தும் இரண்டாவது இசைக் கச்சேரி இது. முந்தியது கமலா மோடி மண்டபத்தில் நடைபெற்றது.

நாடக விமர்சனம்:

## குணமே குலம்

பயில்முறை நாடகக் கலைஞர்களை நன்கு பயன்படுத்தித் தாம் உட்படச் சம்பந்தப்பட்ட அனைவரினதும் மனநிறைவுக்காகத் திரு ஜோன் சில்வஸ்டர் இக்னேஷியஸ் "குணமே குலம்" என்ற நாடகத்தைக் கடந்த சனிக்கிழமை கமலா மோடி மண்டபத்தில் நடத்திக் காண்பித்தார். "சிவசெங்கைச் சீமை" புகழ் முஸ்தபா நாடகத்தை இடைவேளை வரை பார்த்துவிட்டு நடித்தவர்களைப் பாராட்டிச் சென்றார்.

ஏழ்மை காரணமாகப் பெற்ற மகளை விற்ற தந்தை தர்மலிங்கமாக நடித்த நா. மகேசனும், வேலைக்காரத் தம்புவாக நடித்த சொ. விமலநாதனும், பணக்கார வீட்டுத் தற்குறி மோகனாக நடித்த அ. நெ. ரா. ராஜமுத்துவும் உண்மையிலேயே பாராட்டுக்கு உரியவர்கள் தாம். நடிப்பைத் தொழிலாகக்கொண்டவர்களே பார்த்துப் பிரமிக்கக்கூடியவகையில் இந்த மூவரும் தத்தமது திறமையைக் காட்டினர். மற்றவர்களும் முயன்று நடித்தார்கள். முன்னுக்கு வர இன்னும் பயிற்சி வேண்டும் அவர்களுக்கு.

### பெண்கள்

நர்ஸாக ஒரு பெண், பட்டிக்காட்டுத் தர்மலிங்கத்தின் பத்தினியாக ஒருபெண், செல்வச் சீமானின் மகளாக ஒரு பெண், ஆக மூவர் தோன்றினார்கள். முந்திய இருவருக்கும் பாகம் குறைவு. பணக்காரப் பெண்ணாக வந்த செல்வி யோகதேவி சொக்கநாதனுக்கு மற்றவர்களைக்காட்டிலும் அதிகமான வேலை இருந்தது. பேச்சும் நடிப்பும் ஒருபுறம்

(13-ம் பக்கம் பார்க்க)





"குணமே குலம்" நாடகப் படங்கள். நடிகர் ஜனாப் முஸ்தபா, திரு ஜோன் இக்னேஷியஸ் சில்வஸ்டர், திரு சொக்கநாதன் ஆகியோர் மிக்கரஸனையோடு நாடகத்தைப் பார்க்கிறார்கள். அடுத்த படத்தில் செல்வன் சொ. விமலநாதன், செல்வி யோகதேவி சொக்கநாதன், திரு அ. நெ. ரா. ராஜமுத்து ஆகியோர் தோன்றும் காட்சி.

## ஜெமினிகணேசன், சாவித்திரி, சரோஜாதேவி இலங்கை வருகை

காதல் மன்னன் ஜெமினி கணேசனும் அவரது நடிக மனைவி சாவித்திரியும் 12-12-59 சனிக்கிழமை விமானமூலம் இலங்கை வருகிறார்கள். அவர்களோடு "கல்யாணப் பரிசு" படத் தயாரிப்பாளர், டைரக்டர், கதை-வசனகர்த்தா ஸ்ரீதரும் வருகிறார். அந்தப் படத்தில் நடித்த சரோஜாதேவியும் வரவிருக்கிறார்.

"கல்யாணப் பரிசு" வெற்றிகரமாக இப்பொழுது சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் திரைகளில் ஓடிக் கொண்டிருக்கிறதல்லவா. மேற்படி படத்தின் வெற்றி விழாவில் கலந்துகொள்ளவே ஜெமினி கணேசனும், மனைவி சாவித்திரியும், சரோஜாதேவியும், டைரக்டர் ஸ்ரீதரும் வருகிறார்கள். சரோஜாதேவி 12ந் தேதிக்கு அல்லாமல் இரண்டொரு நாட்கள் பிந்தியே வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடிகர் நடிகைகளும் டைரக்டரும் கொழும்பு கிங்ஸ்லி தியேட்டரில் "கல்யாணப் பரிசு" படக் காட்சி நேரத்தில் மேடையில் தோன்றுவார்கள். மூன்று அல்லது நான்கு நாட்கள் இவர்கள் இலங்கையில் தங்கி இருப்பார்கள்.



ஜெமினி கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிநிதிகள் வெளிநடப்பு!...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பூராவும் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிகிறது. முதலாவது கிளை மட்டக்களப்பில் தான் என்று பேசிக்கொள்ளப்படுகிறது -மேற்கண்டவாறு சுதந்திரன் கண்டி நிருபர் எழுதுகிறார்.

## பண்டிதர் புகாருக்கு ஆ. க. சு. மறுப்பு

பிளவுக்குக் காரணகர்த்தர் ஆ. க. சுவே என்று கடந்த வாரச் சுதந்திரனில் மட்டக்களப்பு பண்டிதர் திரு. த. கிருஷ்ணபிள்ளை எழுதியதை மறுத்து ஆ. க. சு. கடிதம் அனுப்பியிருக்கிறார். அவர் தமது கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

### ஒத்துழைப்பு இல்லையே!

6-6-59-ல் தெரியப்பட்ட நிர்வாகிகள் மீது நம்பிக்கையில்லையென ஏழு கிளைகள் தீர்மானித்ததோடு மீதி எட்டுக் கிளைகளுள் பல அவ்வித தீர்மானங்களுக்கு நடவடிக்கை எடுத்து வந்தன. இதற்கிடையில் சில அங்கத்தவர்களின் சட்ட நடவடிக்கைகளுக்குப் பயந்து, பொதுத் தலைவரும் பொதுச் செயலாளரும் தம் பதவியை இராஜிநாமா செய்தமையால் நடவடிக்கை எடுக்கவிருந்த கிளைகள் அவற்றைத் தளரவிட்டன. மொத்த அங்கத்தவருள் 90 சத விதமானோர் மேற்படி உத்தியோகஸ்தர்கள் மீது நம்பிக்கை இழந்தமையால் அன்றோ சங்கத்தின் நடப்பு வருடம் ஒன்பது மாதம் கழிந்தபின்பும் இற்றைவரையில் சுமார் 1200 பேருக்கு மேல் சந்தா கட்டி ஒத்துழையாது ஒதுங்கி நிற்கின்றனர். இது பண்டிதருக்குத் தெரியாததேனோ?

சுமார் 200 பிரதிநிதிகள் கொண்ட பொதுச் சபையில் சூழ்ச்சியான முறையில், சூழ்ச்சியான தேதியில் கூட்டம் நடத்தியும் சுமார் 60 வாக்குகளைப் பெற்றே திரு தியாகராஜா பொதுச் செயலாளர் ஆனமை பெரும்பான்மையினர் அவரை எதிர்க்கின்றனர் என்பதற்குத் தகுந்த அத்தாட்சியாகும்.

9-8-59-ல் யாழ்நகர் கூட்டம் குழம்பியமை தலைவரும் பொதுச் செயலாளரும் கொழும்புக் கிளை பற்றிய உண்மைகளை மறைத்து சூழ்ச்சி செய்தமையினாலேயாகும். 9-8-59ன் பின், 5-12-59-ல் கண்டியில் பொதுச் சபை கூடியதேயன்றி அகற்நிடையில் எங்கும் கூடவில்லை. பொது நிர்வாக சபையினர் பெருமனசு வைத்து எங்கெங்கெல்லாமோ கூட்டம் வைத்தார்களென்றும் அதனால் சங்கப்பணம் பாழாகியதென்றும் பண்டிதர் குறிப்பிட்டது முற்றிலும் பொய்.

படத்தில் முடக்கும் பணத்தைச் சுலையாகத் திருப்பி எடுக்கத் துடிக்கும் தயாரிப்பாளர்கள் இப்பொழுது மூளையைக் கொஞ்சம் உபயோகித்து வருகிறார்கள் பெண்களின் இதயத்தைத் தொட்டுவிட்டால் போட்ட முதலுக்குப் பழுதில்லை என்ற உண்மை நன்கு தெரிந்துகொண்டு விட்டார்கள். அதைச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவுபடுத்துகிறது "பெண் குலத்தின் பொன் விளக்கு" என்றபடம்.

### நடிப்பு

துள்ளிக் குதிக்கும் தையலரும், கல்லுங் கணவன்—புல்லும் புருஷன் என்று கட்டிக் கொண்டு காலடியில் விழுந்து கதறி அழும் கோதைகளும் படத்தில் வருகிறார்கள்.

காதல் மன்னன் ஜெமினி கணேசனும் எம் என் ராஜமும் ஒரு ஜோடி. நரசிம்ம பாரதியும் ஸ்ரீரஞ்சனியும் மறு ஜோடி. அழுவதற்கு ஸ்ரீரஞ்சனி; அட்டகாசம் செய்வதற்கு ராஜம். எப்படிப் பொருத்தம்?

இந்தப் படத்தில் நம்பியாருக்கும் கருணாநிதிக்கும் வழமைக்கு மாறான பாத்திரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. வேலைக்காரனாக வரும் நம்பியாரும் சீமானாக வரும் கருணாநிதியும் நடிப்புக்கு நலல முத்திரை பொறித்துப் போகிறார்கள். பிரதம ஜோடிகளும் தம்மை நன்கு காட்டவே செய்கிறார்கள்.

பெண்களை மனதில் வைத்து எடுத்த படம் அல்லவா! ஆடல், பாடல், காட்சிகள்—இவற்றிற்கு குறைவில்லை. அத்தனையும் வேண்டுமா இல்லையா என்பது பார்ப்பவர்களைப் பொறுத்தது.

யார் பார்ப்பது? தனியாகப் பெண்கள் பார்த்துப் பயன் இல்லை. துணைக்கு ஆண்களும் வேண்டும். போனால் பொழுது போகும். அவ்வளவுதான்.

## அறிக்கைகள்

பொதுச் செயலாளர் தம் சொந்தப் பெயரில் 7-10-59ல் முதலாவதாகவும் கடைசியாகவும் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். அது என்னைத் தாக்கிவெளியிட்ட பொய்யான அறிக்கையாதலால் 17-10-59-ல் யான் பதிலறிக்கை வெளியிட்டேன். அது 20-10-59-ல் பத்திரிகையில் வெளிவந்ததேதவிர 18-10-59-ன்பின் யான் எவ்வித அறிக்கையும் வெளியிடவில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.—இவ்வாறாகத் திரு ஆ. க. சுப்பிரமணியம் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பட விமர்சனம்:

# பெண் குலத்தின் பொன் விளக்கு

## இன்ப வாழ்க்கை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டலாம்' நல்வழி யடையலாம்;

"மலாமிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்'—
—தமிழ்மறைநூ.

'மனமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளுடைய சிறந்த திருவிளையாடல்களை இடைவிடாமல் நினைக்கின்றவர்கள், உலகிலே நிலையான இன்ப வாழ்க்கை வாழ்வார்கள்'.

நிலையான இன்ப வாழ்க்கை வேண்டின், நினைப்பு, பேச்சு, செயல் மூன்றும் தூய்மையானதாக அமைய வேண்டும். நினைப்பு நல்லதாயின், பேச்சும், நல்லதாக வரும். நல்ல நினைப்பு பேச்சுக்கள் உடையவன் செயல் எப்போதும் நற் செயலாகவே இருக்கும். அவனது வாழ்க்கை, நிலையான இன்ப வாழ்க்கையாகும்.

## குணமே குலம்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்க, கழுத்து வெட்டாலும் கண் சிமிட்டாலும் காரியத்தைப் பார்த்துப் போய்விட்டார் அவர்.

### கதை, காட்சி, பாட்டு

கதையிலோ, கருத்திலோ புதுமையில்லாவிட்டாலும் அமைப்பு இருந்தது. அதனால் நாடகம் நாடகமாக நடந்தது. காட்சி அமைப்பு மட்டும் குழந்தைப் பிள்ளை விளையாட்டாகிவிட்டது. சில காட்சிகளைக் குறைத்திருக்கலாம். பெரிய மனேஜர் வீட்டில் 'பொடி' ரேடியோ இருப்பதாகக் காட்டியதைத் தவிர்த்திருக்கலாம். ஒலி—ஒளி அமைப்புகள் அந்த மண்டபத்துக்கு ஏற்றவாறு இருந்தன. பின்னணியில் பாடிய செல்வி கோகிலவர்த்தனி சுப்பிரமணியம் அழகாகப் பாடினார். ஆனால் நாடகத்துக்கு பாட்டு ஒட்டுப்போட்டது பொருந்தவில்லை.

### ஒப்பனை

நடிக நடிகையர்களுக்கு ஒப்பனை செய்யப்பட்டதுபற்றியும் ஒரு வார்த்தை. அதற்குப் பொறுப்பாயிருந்தவர் திரு பி. டபிள்யூ. சண்முகதாசன் என்று தெரிகிறது. பாராட்டுக்கு உரியவர் அவர். அவருடைய உதவியாளர் திரு நடராஜாவையும் மறப்பதற்கில்லை.

### சபைப் பண்பு வேண்டும்

இலாப நோக்கு இல்லாமல் மனநிறைவுக்கு நாடகம் நடத்தப்பட்டதே பாராட்டுக்கு உரியதுதான். திரு சில்வஸ்டரை அதற்காகப் பாராட்டும் அதேவேளையில் 'சபைப் பண்பு' கொஞ்சம் அவர் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது என்பதையும் இரகசியமாகச் சொல்லி வைக்க விரும்புகிறோம். ஜனாப் முஸ்தபாவை மேடைக்கு அழைத்துச் சென்று அறிமுகப்படுத்திய திரு சில்வஸ்டர் மேடையில் அதே இடத்தில் நின்று சிகரெட்டை ஹாயாகப் பற்ற வைத்துவிட்டு கடைசியில் அதைக் காலடியில் போட்டு உழக்குகிறார். பார்க்க இது அருவருப்பாக இருந்தது.

—கே. கே. ஆர்.


மகத்தான 2-வது வாரமாக ஓடிக்கொண்டிருக்கிறது! ★

கெயிட்டி—றெக்ஸி—வின்ஸர்
[கொட்டாஞ்சேனை] [வெள்ளவத்தை] [யாழ்ப்பாணம்]

கிங்ஸ் நெல்சன் நியூ இம்பீரியல்
[பதுளை] [திருகோணமலை] [மட்டக்களப்பு]

ஆகிய தியேட்டர்களில்

ஜெமினி கணேசன்—எம். என். ராஜம்
எம். என். நம்பியார்
நடிக்கும்

பெண்குலத்தின் பொன் விளக்கு




டிசம்பர் 11-ம் திகதி வெள்ளிமுதல்
எல்பின்ஸ்டன் (மருதானை)
மற்றும் 5 திரைகளில்

அதிசயப் பெண்
(டெக்னிக் கலர் நடனங்கள்)

சென்ட்ரல்
(மருதானை)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

அதிர்ச்சி தரும் சம்பவங்கள் மலிந்த ஓர்
புதுமை நிறைந்த கதை!

ஷேக்முக்தார்-நந்தா-டெய்சிராணி
நடிக்கும்

கைதி நீர் 911


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மூன்றின் மகிமை

எத்தனையோ எண்கள் உள்ளன. அவற்றில் மூன்று என்னும் எண் உலகில் முக்கிய இடத்தைப் பிடித்து விட்டது. நம்மைப் பொறுத்த மட்டில்-நம் மொழியைப் பொறுத்த வரையில் மூன்றிற்குப் பெரும் புகழ் கிடைப்பதாகவே தெரிகின்றது.

நம் மொழி த-மி-ழ் என மூன்றெழுத்துக்களாலேயே ஆகியுள்ளது தமிழ் என்றால் இ-னி-மை என்றே பொருள் படுகிறது. தமிழிற்கு அ-மு-து என்றும் பெயருண்டு. தமிழ் இயல்-இசை-கூத்து என்று மூவகைப்படுகிறது. இயல், கூத்து என்னும் சொற்கள் கவனிக்கத்தக்கன. இம் முப்பிரிவுகளையும் மா-பலா-வாழை என்னும் முக்கனிகட்கும் ஒப்பிடுவதுண்டு.

நம் மொழியிலுள்ள தலைசிறந்த நூலும் கு-ற-ள் என மூன்றெழுத்தாலேயே அமைந்துள்ளது. குறளும் அறம்-பொருள்-காமம் என முப்பால்களாயுள்ளது. இம் மூன்று சொற்களும மும் மூவெழுத்துக்களாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. குறள் யாத்த வள்ளுவர்-அதிகமான்-கபிலர் என்னும் மூவரே அவ்வையுடன் பிறந்த ஆண்கள் என்பர். 133 அதிகாரம், 1330 குறள் எனச் சொல்கையிலும் மூன்றுகள் வரவே செய்கின்றன. குறளின் இறுதி அடி முச் சீர்களால் அமைந்ததே.

நம் தமிழ் மொழியிலுள்ள மெய்யெழுத்துக்கள் வல்லினம்-மெல்லினம்-இடையினம் என மூன்று பிரிவாயுள்ளன. அவை முறையே நெஞ்சு-மூக்கு-தொண்டை என்ற மூவிடங்களினின்றும் பிறப்பனவாகும். இம் மூன்று சொற்களும் கவனிக்கத்தக்கவை. சுட்டெழுத்துக்களும் அ-இ-உ என மூன்றாகும்.

உயர்திணைக்குரிய பால்கள் ஆண்-பெண் பலர் என மூன்றாகும். ஆய்த எழுத்தும் ஃ என மூன்று புள்ளிகளையுடையதாகும். இடங்கள் தன்மை-முன்னிலை-படர்க்கை என மூவகைப்படுகின்றன. காலமும் சென்ற-நிகழ்-எதிர் என மூன்றாகின்றது இச் சொற்கள் கவனிக்கத்தக்கவை. ஒரு வாக்கியத்தில் எழுவாய்-பயனிலை-செய்யப்படுபொருள் என்ற மூன்று பிரிவுகளைக் காணலாம். எட்டு வேற்றுமைகளுள் மூன்றாம் வேற்றுமை ஆல்-ஒடு-உடன் என்ற மூவுருபுகளுடனும், ஏழாம் வேற்றுமை இல்-இடம்-கண் என மூவுருபுகளுடனும் விளங்குகின்றன. விகாரப் புணர்ச்சியில் தோன்றல்-திரிதல்-கெடுதல் என மூன்று பிரிவுகள் உள்ளன.

நம் தமிழ் முதல்-இடை-கடை என்ற முச் சங்கங்களில் வளர்ந்துள்ளது. கடைச் சங்கம் இருந்த ம-து-ரை என்பதும் மூன்றெழுத்தே. சங்க நூல்களைப் பத்துப்பாட்டு எட்டுத்தொகை-பதினெண் கீழ்க் கணக்கு என மூன்றாகவே பிரித்துள்ளனர். நூல்கள் முதனூல்-வழி நூல்-சார்பு நூல் என முத்திறப்படும். சுக்கு-திப்பிலி-மிளகு போல் திரிகடுகம் என்பதும் மும் மூன்று விடயங்களைக் கொண்ட ஒரு நூலாகும். தமிழில் தேவாரம் பாடியோரும் அப்பர்-சுந்தரர்-சம்பந்தர் எனும் மூவர் தான்.

பண்டைத் தமிழகம் சேர-சோழ பாண்டிய நாடுகளாகும். மன்னரும் சேரன்-சோழன்-பாண்டியன் என மூவரே. இவர்களின் கொடிகள் முறையே வில்-புலி-மீன் என்பனவும், மாலைகள் முறையே பனம்பூ-ஆத்தி-வேம்பு என்பனவுமாகும்.

ஈ-ழ-ம் என மூவெழுத்துச் சொல் கொண்ட நமது நாட்டில் தமிழ்-சிங்களம்-ஆங்கிலம் என்ற மூன்று மொழிகள்தான் முகிகியமானவை.

நாம் ஒரு நாளைக்குக் காலை-மதியம்-இரவு என மூவேளை தான் உண்கிறோம். மனம்-வாக்கு-காயம் என்ற மூன்றும் என்றுந் தூய்மையாய் இருக்க வேண்டும். என்பர் முதியோர். இச் சொற்கள் கவனிக்கத்தக்கவை. நம் உடலும் தலை-முண்டம்-கை கால் என மூன்று பிரிவுகள் தான். காற்று-நீர்-வெப்பம் என்ற வாதம்-பித்தம்-சிலேத்துமம் மூன்றும் மட்டாய் இருப்பின் நோய்கள் வாரா என்பர் மருத்துவ நூலார்.

சுதந்திரனில் வளர்மதியின் கீழ் உள்ள சுதந்திரன்-மாணவர்-மன்றம் என்பதிலும் முப்பிரிவுகளைக் காணலாம்.

புராணங்களிற் பார்ப்பினும் பிரம்மா-விட்டுணு-உருத்திரன் என்ற மும் மூர்த்திகளையும், படைத்தல்-காத்தல்-அழித்தல் என்ற முத்தொழில்களையும், சுவர்க்கம்-பூமி-பாதாளம் என்ற மூவுலகுகளையும், சித்தி-முத்தி-வல்லபை என்ற கணபதியின் மும் மனைவியரையும் மற்றும் பல மும் மூன்றாய் வருபவற்றையும் காணலாம்.

ஒருவருக்கு வேண்டிய அன்பு-பண்பு-அறிவு-அழகு-கல்வி-மானம்-அமைதி என்பன போன்றவை மூன்றெழுத்துச் சொற்களே.

ஏழு நாட்களிலும் ஞாயிறு-புதன்-வெள்ளி என்பன மூவெழுத்துக்களாலானவையே. பன்னிரு திங்களிலும் வைகாசி-ஆவணி என்பன மூவெழுத்துச் சொற்களே.

நாம் முறை சொல்லி அழைக்கும் அப்பா-அம்மா-அக்கா-அண்ணை-தம்பி-தங்கை-மகன்-மகள்-பேரன்-மாமன்-அத்தை-அண்ணி போன்றவையும் மூவெழுத்துக்களே.

இன்னும் உடல்-உலகு-வானொலி-மேகலை-ஒன்று-நான்கு-ஐந்து-எட்டு-பத்து போன்ற அனேக மூவெழுத்துச் சொற்கள் நம் மொழியிலுண்டு.

எண்-எழுத்து-வாசிப்பு மூன்றும் பள்ளியிற் பிரதான பாடங்கள். இப்படி யோசிக்க யோசிக்க மூன்றின் புகழ் இன்னும் விரிவடைந்துபோகும் போல் தெரிகிறது. இத்துடன் மூன்றிற்கு முற்றுப் புள்ளி வைப்பது நன்றெனத் தெரிகிறது. இம் மூன்றைப் பற்றி எழுத மை-தாள்-பேனா எனும் முப் பொருட்களே தேவையாயுள்ளன. அதிகம் கூறுவானேன்?

மூ-ன்-று என்ற சொல்லிலேயே மூன்று எழுத்துக்கள் தானே உள்ளன. சான்று பலதந்த மூன்று வாழ்க!

—"தாமரைத்திவான்"
மலைவீடு.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 2.

பெயர்.................................

பாடசாலை.................................

விலாசம்.................................

.................................

........................ ........................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

என்ன விநோதம் பார்: 1 ஒரு ருஷ்யக் கதையைத் தழுவியது

# வேடிக்கையான ஒப்பந்தம்

— தேவாதிதேவன் —

உங்களிடம் ஒருவர் வந்து தான் தினசரி ஆயிரம் ரூபாய் வீதம் 30 நாட்களுக்கு முப்பதினாயிரம் ரூபாய் தருவதாகவும் ஆனால் நீங்கள் அவருக்குப் பதிலுக்கு, முதல் நாள் ஒரு சதமும், 2-ம் நாள் 2 சதமும், 3-ம் நாள் 4 சதமும், இப்படியே முதல் நாள் கொடுத்த தொகையைப் போல் இரண்டு மடங்கு அதற்கடுத்த தினம் மாதம் முடியும் வரை கொடுக்க வேண்டும் என்று உங்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்தால் நீங்கள் சந்தோஷத்தால் துள்ளிக் குதிப்பீர்கள் இல்லையா? அப்படித்தான் லட்சாதிபதி இராமனும சந்தோஷப்பட்டான். ஆனால்............

இராமன் ஓர் லட்சாதிபதி யெனக் கேள்விப்பட்ட வழிப்போக்கன் ஒருவன் அவனிடம் வந்து தான் ஒரு வியாபாரியென்றும் இராமனுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தான்.

"ஏதாவதொரு வியாபார ஒப்பந்தமோ?" என்றான் இராமன்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, நாளைக்கு முதல்தேதி ஓராயிரம் ரூபாய் உங்களுக்குத் தருவேன். அதற்குப் பதிலாக உங்கள் அதிஷ்டக் கையால் எனக்கு ஒரு சதம் தந்தால் போதும்" என்றான்.

"என்ன?" இராமனுக்கு இது கனவா நனவா என்று ஒன்றும் புரியவில்லை.

"அதுமட்டு மல்ல மாதம் முடியும் வரை தினமும் நீங்கள் எனக்கு முதல் நாள் தரும் தொகையைப் போல் இரண்டுமடங்கு ஒவ்வொரு அடுத்த தினமும் தரவேண்டும்"

"புரியவில்லையே!"

"அதாவதுமுதல் நாள் ஒரு சதம், 2-ம் நாள் 2 சதம், 3-ம் நாள் நாலு சதம், 4-ம் நாள் 8 சதம், இப்படியாக முதல் நாள் தந்த தொகைபோல் இரண்டு மடங்கு அடுத்த நாள் தரவேண்டும்"

"நீங்கள் தினமும் ஆயிரம் ரூபாய் தரும்பொழுது இந்த அற்பதொகை எனக்குப் பிரமாதமா?" சிரித்தான் இராமன்.

வழிப்போக்கன் தான் சொன்னதன் பிரகாரம் அடுத்த நாட் காலை ஆயிரம் ரூபாய்களுடன் வந்தான். இராமன் மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக ஒரு சதம் கொடுத்தான். இப்படியே தினசரி ஆயிரம் ரூபாய்களைக் கொண்டுவந்து இராமனிடம் கொடுத்து அதற்குப் பதிலாக ஒப்பந்தம் செய்து கொண்டபடி இராமனிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டுசென்றான்.

முப்பது நாட்களில்முப்பதினாயிரம்ரூபாய் வரப்போகிற சந்தோஷத்தில் உள்ளம் பூரித்தான் இராமன். தன் அதிர்ஷ்டமே வழிப்போக்கனைத் தன்னிடம் கொண்டு வந்து விட்டிருக்கிறது என்று எண்ணி அகமகிழ்ந்தான்.

இரு வாரங்கள் மிகவும் சந்தோஷமாகக் கழிந்தன. பாவம் இராமன், நாட்கள் செல்லச் செல்லத்தான் விஷயம் புரிந்தது. ஒப்பந்தத்தை இடையில் முறித்துக் கொள்ள வகை தெரியாத இராமன் தினமும் ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டு ஒப்பந்தப்படி சேர வேண்டிய தொகையை வழிப் போக்கனுக்குக் கொடுத்து வந்ததில் முப்பதாம் நாள் தனது சொத்துப் பூராவையும் விற்று வழிப்போக்கனுக்குக் கொடுக்க நேர்ந்தது. இராமன் வழிப்போக்கனிடம் முப்பதினாயிரம் ரூபாய்கள் பெற்றுக் கொண்டது உண்மை. ஆனால் அவன் கொடுத்ததொகை 1-ம்நாள் 1 சதம், 2-ம் நாள் 2 சதம், 3-ம் நாள் 4 சதம், 4-ம் நாள் 8 சதம், 5-ம் நாள் 16 சதம் 6-ம் நாள் 32 சதம், 7-ம் நாள் 64 சதம், 8-ம் நாள் ரூ 1-28, 9-ம் நாள் ரூ 2-56. அதன் பின் படிப்படியாக 5-12 10-24, 20-48, 40-96, 81-92, 163-84, 327-68, 655-36 என்றும் 18-ம்நாள் ரூ 1310-72, 19-ம் நாள் ரூ. 2 621-44 ஆகவும் ஆயிரக் கணக்கில் உயர்ந்து கொண்டே போனதில் 30-ம் நாள் மாத்திரம் ரூ 5 368 709-12 இராமன் வழிப்போக்கனுக்குக் கொடுக்க வேண்டியேற்பட்டது. ஆகவே, வழிப்போக்கனிடமிருந்து முப்பதினாயிரம் ரூபா பெற்றுக் கொண்ட இராமன் அவனுக்கு மொத்தமாக (ரூ. 10 737,418-23) ஒரு கோடி ஏழு லட்சத்து முப்பத்தியேழாயிரத்து நானூற்றிப் பதினெட்டு ரூபாய் இருபத்திமூன்று சதங்கள் கொடுத்த பின் ஆண்டியாகித் தெருவிலிறங்கி நடந்தான்.

ஆயிரம் ரூபாயென்ன மூன்று லட்சம் ரூபாய்கள் தினசரி வழிப்போக்கனிடம் இராமன் பெற்றுக் கொண்டால் கூட வழிப்போக்கனுக்கே லாபம் ஏற்பட்டிருக்கும்.

ஔவை அமுதம்: 16

# சனி நீராடு

சனி வாரத்தில் எண்ணெய் தேய்த்து முழுகு என்பது இதற்குப் பொருள். இதை 'சனி நீர்—ஆடு' என்று பிரித்து ஊற்று நீரில் முழுகு என்று பொருள் கூறுவாரும் உளர்.

செல்வம் வேண்டுமென்று எல்லோரும் ஆசைப்படுகிறோம் செல்வத்துளெல்லாம் மேம்பட்ட செல்வம் எமது தேக சௌக்கியம். இதை நாம் பேணிக்கொள்ள வேண்டும். அப்போதுதான எமது கல்வி, செல்வம் முதலியவற்றை நாம் அனுபவிக்க முடியும்.

நோயுற்ற ஒருவனுக்கு வாழ்க்கை வறண்டுவிடும். அவன் கவலை வளரும். அவனால் பிறருக்குக் கஷ்டமும் பணவருத்தமுமே ஏற்படும். எமக்குச் சாந்தவருக்கு மகிழ்ச்சியும் உதவியும் கொடுக்க விரும்புர் எவனும் தன் தேக சௌக்கியத்தைப் பேணிக்கொள்ள வேண்டும்.

பணமற்றவனை அவன் நண்பர்கள், உற்றார் உறவினர் நாளடைவில் எப்படிக் கைவிட்டுவிடுவார்களோ அதேபோல் தீரா நோயாளியையும் எல்லோரும் கைவிட்டுவிடுவார்கள்.

மனத்தில் இனநதெரியாத

வள்ளுவர் குரல்: 3

# இன்ப வாழ்க்கை

நாம் வாழப் பிறந்தவர்கள்; எனவே, வாழ வேண்டும். ஏதோ, 'பிறந்தோம், இருந்தோம், இறந்தோம்' என்று, எமது வாழ்க்கை நடந்து முடிந்து விடலாமா? அங்ஙனம் முடிந்தால், மற்றை உயிர்களுக்கும் மக்களுக்கும் வேறுபாடில்லாது போய்விடுமே! ஆகவே, நாம் நிலையான இன்ப வாழ்க்கை வாழ வேண்டும் வழி என்ன?

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தெய்வப் புலவரின் குரல், இன்றும் ஒலிக்கின்றது; நம்பிக்கை

(13-ம் பக்கம் பார்க்க)

ஒரு கசப்பையும் வெறுப்பையும் கொண்டு வரும்.

நாம் நிம்மதியாய் வாழ அறங்களைச் செய்ய, இறைவனை வணங்க, மனஞ் சுத்தமாக இருக்க, வாழ்க்கையில் முன்னேற எமக்குத் தேக சௌக்கியம் மிக மிக அவசியம். தேக சௌக்கியம் பெற நாம் தேகத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் தேகம் சுத்தமாயிருக்க நாள் தவறாது முழுகிக் குளித்துக் கொள்ள வேண்டும்.

பொருளைப் பெற்று, அறத்தைச் செய்து, இன்பம் பெற அவ்வை காட்டும் வழி இது தான்.

—ஏ. ஜீ ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## தம்பலகமம் கி. மு. சங்க திறப்பு விழா

தம்பலகமம் கி. மு. சங்கக் கட்டிடத்தை கடந்த 3-11-59-ல் மூதூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு எம். ஈ. எச். முகமதலி திறந்துவைத்தார்.

திரு முகம்மது அலி, பண்டிதர் ஐ. சரவணமுத்து, புதுக்குடியிருப்பு அரசினர் பாடசாலை தலைமை ஆசிரியர் திரு வ. கதிரித்தம்பி, திரு துரைரெத்தினசிங்கம், திரு செ. கந்தையா, கிராமத்தலைமைக்காரர் திரு ஐ. கந்தையா, புதுக்குடியிருப்பு கி. மு. சங்கத் தலைவர் திரு இராமலிங்கம், துணைச்செயலாளர் திரு ஆ. பாலசுந்தரம் ஆகியோர் கிராமமுன்னேற்றச் சங்கத்தால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்படும் நன்மைகள் குறித்துப் பேசினார்.

## "நடிகர் தின விழா"

உதயசூரியன் நாடகமன்றத்தின் சார்பில் கடந்த 29-11-59-ல் மன்றப் பணிமனையில் நடிகர் தின விழா கொண்டாடப்பட்டது. விழாக் கூட்டத்திற்கு தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினர் திரு பி. ஏ. மாறன் தலைமைவகித்தார். தலைவர் முன்ரையில் காலம்சென்ற கலைவாணர் என். எஸ். கே. யின் பிறந்த தினத்தைதான் நடிகர் தினமாக கொண்டாடுவதாகவும், அவர் நடிகர்களின் முன்னேற்றத்துக்கு செய்த சீரிய பணியை விளக்கிவிட்டு, ஆண்டுக்கொருமுறை நடக்கும் இவ் விழாவில் இலங்கையில் உள்ள அத்தனை நடிகர்களும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக்கொண்டார். மற்றும் திரு பி. ஏ. மோகன், மு. அன்பரசன், என். முத்தையா, வெற்றிவேந்தன் ஆகியோரும் பேசினர்.

## சிதம்பரத்தில் நாவலர் குருபூசை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் 80ஆம் ஆண்டு குருபூசை விழா கடந்த 23-11-59-ல் சிதம்பரத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை சேக்கிழார் கோயிலில் காலை 7 மணிக்குத் திருமுழுக்கு வழிபாடுகளும் 9.15 மணிக்கு உயர் நிலைப் பள்ளியில் ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானுக்குச் சிறப்பாகக் குருபூசையும் நடைபெற்றன. நாவலர் கல்வி நிலையங்களின் மாணவ மாணவிகளுக்குச் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பெற்றது. பிறகு 10.30 மணிக்குத் தில்லைக் கூத்தப் பெருமான் கோவிலில் பகல் இரண்டாம் காலத்தில் சிறப்பாகக் குட முழுக்கு வழிபாடுகள் நடைபெற்றன.

மாலை 4 மணிக்குமேல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறையாளர் திரு கே. வெள்ளைவாரணனுர் தலைமை வகித்து முன்னுரையாக நாவலரது தமிழ் சைவம் ஆகிய இரு பெரும் பணிகளைப் பற்றிப் புகழ்ந்து பேசினுர்கள். பின் திரு ஆலால சுந்தரஞ் செட்டியார், ஏ. ஆர். சுபபிரமணியம், நாராயணசாமி ஐயர் முதலியோர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன.

நாவலர் தமிழ்க் கல்லூரி மாணவர்களும், உயர்நிலைப் பள்ளி மாணவிகளும் நாவலர் பெருமானது வாழ்க்கை செயல் முதலியன பற்றிச் சுருக்கமாகப் பேசினுர்கள். சிறுமியர்களால் கும்மி கோலாட்டம் முதலியன இன்னிசையோடு நடத்தப்பட்டன. சித்தாந்தப் பத்திரிகாசிரியர் திரு புலவர் முருகவேள் நாவலர் அவர்களைப் பற்றித் தாம் கேட்டுப், படித்து, அறிந்த குணுதிசயங்கள், செயல் முதலியன பற்றியும், திரு வி. க, மறைமலையடிகள், ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதலியவர்கள் நாவலரின் சிறப்பியல்பு பற்றிக் கூறியனவற்றையும், புறநானூறு, சிலப்பதிகாரம், திருக்குறள், தேவார திருவாசகங்களிலிருந்துமேற்கோள்களுடன் பாராட்டிச் சொற்பொழிவாற்றினுர். இடையிடையே மேனுட்டறிஞர் பல்லோர் ஆங்கிலத்தில் சொல்லியுள்ளதைத் தமிழிற் பெயர்த்தும் விளக்கிக் கூறினுர்கள்.

பின்னர் திருமதி இராசேசுவரனுல் சைவசமயப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

## கைதடி கிழக்கு இளைஞர் மன்றம்

கைதடி இளைஞர் மன்றக் கூட்டம் கைதடி கிழக்கு ஜனசமூக நிலையத்தின் ஆதரவில் கடந்த 29-11-59-ல் செல்வன் செ. வேலாயுதரின் தலைமையில் செல்வன் சே. செல்வத்துரையின் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. காரியதரிசியால் கடந்த கூட்டறிக்கை வாசிக்கப்பட்டது. பின் செல்வன் வி. ச. இராசையாவினுல் "இளைஞர் மன்றத்தாரின் கடமை" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு ஆற்றினுர். அவரைத் தொடர்ந்து செல்வர்கள் க. ச. சிவசுப்பிரமணியம், வி. சி. சுப்பிரமணியம், செ. கந்தசாமி ஆகியோரும் பேசினர்.

கீழ் கண்டவர்கள் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: செ. வேலாயுதர், உப தலைவர்: க. ச. சிவசுப்பிரமணியம், கௌரவ காரியதரிசி: ஆ. கந்தையா, உப காரியதரிசி: க. இராசையா, தனுதிகாரி: வி. ச. இராசையா, உப தனுதிகாரி: வி. சி சுப்பிரமணியம், பத்திராதிபர்: செ. கந்தசாமி, உப பத்திராதிபர்: த. பாலசுப்பிரமணியம். நிர்வாக உறுப்பினர்களாக சுந்தரம், செல்வத்துரை, சிற்றம்பலம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் கூட்டத்தில் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## மானிப்பாயில் இளந் தமிழர் இயக்கம்

மானிப்பாய் சி. ரி. கட்டிடத்தில் இளந்தமிழர் இயக்கக் கிளையொன்று கடந்த 28-11-59-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

கூட்டத்துக்கு திரு. த. சிவசுப்பிரமணியம் தலைமை வகித்தார். அவ்வமயம் செனட்டர் ஜி நல்லையா, தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் கதிரவேற்பிள்ளை, இளந் தமிழர் இயக்கத் தலைவர் திரு கரிகாலன், திரு ஈழவேந்தன் முதலியோர் சொற்பொழிவாற்றினுர்கள்.

உத்தியோகத்தர் தேர்தலில் தலைவராக திரு இ. சடாஜயரும், செயலாளராக திரு க. தர்மசீலனும், துணைச் செயலாளராக திரு. க. நடேசனும், பொருளாளராக திரு. ச. பேரானந்தமும், நிர்வாக சபை அங்கத்தவர்களாக திரு. வ. சுப்பிரமணியமும் திரு. க ராசேந்திரமும் தெரிவு செய்யப்பட்டனர்.

பின்னர் திரு. வ. சுப்பிரமணியமவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடைந்தது.

## வாசிகசாலைத் திறப்பு விழா

பேருவலை மாளிகா ஹேனை அரசினர் முஸ்லிம் மாவித்யாலயத்தில் வாசிகசாலையொன்று சென்ற 13-11-59-ல் பாடசாலைத் தலைமையாசிரியர் ஜனுப். எம். எச். எம். அஸாய்தீனுல் திறந்து வைக்கப்பட்டது.

வாசிகசாலை திறந்து வைக்கப்பட்டபின் பாடசாலைத் தலைமையாசிரியரின் கீழ் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மாணவன் எம். எஸ். எம். வபா கூட்ட ஆரம்பத்திற்காகக் கிருத் ஒதினுர். வாசிகசாலையின் அத்தியாவசிய விஷயத்தைப் பற்றி தலைவர் தமது தலைமையுரையில் கூறினுர்.

பாடசாலை ஆசிரியர் ஜனுப். ஏ. எச். ஏ. அப்துல்லா "வாசிக சாலையின் பயன்" என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினுர்.

"நமது வாசிகசாலை" என்ற மகுடத்தில் வாசிகசாலைப் பொறுப்பாளரான ஆசிரியர் ஜனுப். ஏ ஸீ. எம். மஷ்ஹூர் தற்போதுள்ள நமது வாசிக சாலையின் நிலைமையை எடுத்துரைத்தார். அத்துடன் வாசிகசாலையை மாணவர்கள் தமது அறிவு வளர்ச்சிக்கு நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றுர்.

ஆசிரியர் எம். எஸ். எம். நிஸார், சிரேஷ்ட வகுப்பு மாணவன். எம். எஸ். எம். வபா ஆகியோர் வாசிகசாலையின் நன்மைகளை எடுத்துக் கூறினுர்கள்.

## ஆசிரியருக்குப் பிரிவுபசாரம்

வெள்ளாம்போக்கட்டி நெசவு நிலைய ஆசிரியர் திரு. க. வாரித்தம்பி இந் நிலையத்தினின்றும் மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு நிலைய மாணவிகளாலும் மேற்படி சனசமூக சேவா சங்கத்தார்களாலும் ஓர் பிரிவுபசாரக் கூட்டம் சென்ற 29-11-59-ல் நிலைய மண்டபத்தில் திரு. எஸ். கே. செல்லையா, ஜே. பி. தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

சாந்தி சுதேசிப் பிடைவை நிலைய அதிபர் திரு. கே. வி. மகாலிங்கம் நெசவுத் தொழிலின் அத்தியாவசியத்தை வற்புறுத்திப் பேசினுர்.

நெசவு நிலைய சார்பிலும் சன சமூகசேவா சங்கத்தார் சார்பிலும் செல்விகள் க. சந்திரா, வே. திரவியம், சி. சின்னம்மா, டாக்டர், இ. கந்தையா, ஆகியோர் பிரிபவர்க்கும், அவரது பாரியாருக்கும், அன்பளிப்புகளும், பிரிவுபசாரப் பத்திரமும், பிரிவுரைகளும் வழங்கினுர்கள் பின் இ. த. சுப்பிரமணியம், ஆசிரியர் க. சதாசிவம், கிராம அதிகாரி க. வாரித்தம்பி ஆசிரியர்: செல்வி சி. சின்னம்மா ஆகியோர் சொற்பொழிவாற்றினுர்கள். சன சமூகசேவா சங்கக் காரியதரிசி டாக்டர், ஆர். கந்தையாவால் யாவர்க்கும் நன்றியுரை கூறப்பட்டது.

## சித்திரக் கைப்பணிக் காட்சி

நு-பிளாய்க்பூல் அரசினர் சிங்கள தமிழ்க கலவன் பாடசாலை மாணவரின் சித்திர கைப்பணிக் காட்சியும், கதம்ப நிகழ்ச்சியும், தமிழ் மாணவர் கழகத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவும், கடந்த (3-12-59) நடைபெற்றன.

பெற்றேரும் மற்றேருமாகப் பெருந் தொகையானேர் பொருட்காட்சியையும் கதம்ப நிகழ்ச்சிகளையும் கண்டு களித்தனர்.

ஈற்றில் நடைபெற்ற ஆண்டு நிறைவுக் கூட்டத்திற் பேசியவர்கள், மாணவரின் கலை, கைப்பணித் தேர்ச்சியையும் முன்னேற்றத்தையும், சிங்கள தமிழ் மாணவரின் ஒற்றுமையையும் பாராட்டிப் பேசினர்.

## முகத்துவாரத்தில் நாவலர் குருபூசை

முகத்துவாரம் அருணுசலேஸ்வரர் ஆலயத்தில் கடந்த 29-11-59.ல் வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தாரின் கூட்டுப் பிரார்த்தனையும், நாவலர் குரு பூசையும் சங்கத் தலைவர் திரு. வை. முத்துக்குமாரசுவாமியின் தலைமையில், வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் நாவலர் பெருமானின் பெருமைகளைப்பற்றி, ஆசிரியர்கள் சண்முகம், சுப்பிரமணியம், கந்தவணம், திருவாளர்கள் கிருஷ்சாமி ஐயர், சிவகுருநாதன் ஆகியோரின் சொற்பொழிவுகளும், திரு. சு. பாலசிங்கத்தின் பக்திப் பாடல்களும் நடைபெற்றன.

## கந்தரோடை சனசமூக நிலையம்

கந்தரோடை சன சமூக நிலையத்தின் நிர்வாக சபைக் கூட்டம் சென்ற 10-11-59-ல் சனசமூக நிலையத்தின் தலைவர் திரு. பாலசிங்கம் தலைமையின்கீழ் நடைபெற்றது. அன்று சன சமூகத்தின் அலுவல்கள் எல்லாம் அதாவது கடிதம், மேல்விலாசம், தந்தி, துண்டுப் பிரசுரங்கள் எல்லாம் தனித்தமிழில் தான் நடைபெறவேண்டும் என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

---

## மாமா

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் இவர்களைப் பணிய வைத்துவிட வேண்டும். அதற்கு முன்னர் திட்டங்களைத் தெரியப்படுத்தி அம்பலமாக்கிவிடாதே. மிக ஜாக்கிரதையாக நடந்து கொள்"

உதவி மனேஜர் வனஜா வந்து இருவாரங்கள் கடந்துவிட்டன ஆபீஸிலும் புதிய சூழ் நிலை உருவாக்கிக் கொண்டது. எதற்கெடுத்தாலும் 'வெடு சுடு' என்று பாயும் வனஜாவின் போக்கைக் கண்டு சேகரும் கமலாவும் அடித்துப் போட்ட பாம்புபோல் இருந்தனர். சங்கரன் இடையிடையே, தன் வாலாட்டத்தைக் காட்ட முயன்ருன். ஆனுல் ஒட்ட நறுக்கிக்கொண்டு வந்தாள் வனஜா.

ஒரு நாள் எப்படியும் வனஜாவை மட்டம் தட்டி விடவேண்டும் என நினைத்துக் கொண்டு அவள் மேசை முன் போய் நின்று "ஒரு குண்டூசி தாருங்கள்" என்று கேட்டான். தன்னை மட்டந்தட்டவே இப்படி வலை வீசுகிருன் என்று புரிந்துகொண்ட வனஜா, "ஏன் உங்களிடம் இல்லையா? ஆபீஸ் நேரத்திலா இங்கு வந்து தொல்லை கொடுப்பது?" என்று கடிந்து கொண்டாள்.

"இப்போது நான் கேட்பது குண்டூசி. இதைத் தவிர வேறெதையும நான் விரும்பவில்லை" என்ருன் வெடுக்கென்று. அவள் மெலலச் சிரித்துவிட்டு குண்டூசியைக் கொடுத்து அனுப்பினுள். தன் ஐம்பம்பலிக்கவில்லையே என நினைத்துக்கொண்டு மெல்ல அகன்ருன். ஆனுல் ... கொடுத்துவிட்டுச்சென்ருன்.

அவன் எதையோ இழந்துவிட்டவன்போல் காணப்பட்டான். அது என்ன? ஆமாம். அது அவனது இதயம் தான்; வனஜாவிடம் இருந்தது.

***

அன்று தபாலில் வந்த கடிதங்களைப் பிரித்துக் கொண்டிருந்த பத்மநாதன் ஒரு கடிதத்தை சங்கரனிடம் கொடுக்குமாறு பியூனிடம் அனுப்பிவைத்தார்.

கடிதத்தை வாங்கிப் படித்த சங்கரனுக்கு கட்டடமே இடிந்து தலைமீது விழுவது போலிருந்தது. துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடினுன். மனேஜருக்கு விஷயம விளங்கிவிட்டது "சார்! இது அநியாயம் சார்! என்னை வேறூருக்கு மாற்ற உத்தரவாகியுள்ளது. தயவு செய்து ஜெனரல் மனேஜருக்கு எழுதி இதை ரத்துச் செய்யுங்கள் சார்!" அழுபாட்டாத குறையாகக் கூறினுன், கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், "படியாது! நீ இங்கு பண்ணிய அட்டகாசங்களுக்குப் பரிகாரமே இதுதான்" என்று தாக்குப் பிடித்தார். இறுதியில் வனஜாவின் தலையீட்டினுல் மனேஜர் பத்மநாதன் ரத்துச் செய்வதாக ஒப்புக் கொண்டார். வனஜாவை நன்றி கலந்த பார்வையுடன் நோக்கிவிட்டு அகன்ருன் சங்கரன்.

***

பிற்பகல்—

மனேஜர் பத்மநாதனின் மேசை முன் வனஜா, கமலா, சங்கரன், சேகர் முதலியோர் அமர்ந்திருந்தனர். மனேஜர் தொடங்கினுர்:—

"நான் கூறப்போவதை கவனமாகக் கேளுங்கள். இங்கு உதவி மனேஜராகக் கடமையாற்றுபவர் எனது புத்திரி என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

சங்கரன் 'ஆ' வென வாயைப் பிளந்தான்.

"மிஸ்டர் சங்கரனின் கொட்டத்தை அடக்கவே இந்த ஏற்பாட்டைச் செய்தேன். அது பலனளித்து விட்டது. ஆனுல் இத்துடன் விஷயம முடிந்து போகாது சேகருக்கும் கமலாவுக்கும் அவரவர் தாய் தந்தையரின் அனுமதி கிடைத்துவிட்டது. இருவரும் தம்பதிகளாகத் தடையில்லை. அத்துடன் பிரதம குமாஸ்தா பதவியையும் சேகர் ஏற்றுக்கொள்வான். ஆனுல் மிஸ்டர் சங்கரனின் நிலைமை தான் மிக மிக மோசமாக உள்ளது. அவரின் நிலையை எண்ணி மிக வருந்துகிறேன். காரணம் என்னவெனில் இனிமேல் வனஜாவையும் மனேஜர் பதவியையும் சங்கரனிடமே ஒப்படைக்கிறேன் இதில் வனஜாவிற்கும் ஆட்சேபனையில்லை. நான இம்மாத முடிவில் ஓய்வு பெறுகிறேன் சங்கரன் இடம் மாற்றக் கடிதம் ஜெனரல் மனேஜரும் நானும் செய்த திருவிளையாடல்களில் ஒன்று!" முடித்துவிட்டு எல்லோரையும் ஒருதடவை நோக்கினுர் மனேஜர் பத்மநாதன்.

சங்கரன் "மாமா" என கூறிக்கொண்டு கதிரையுடன் இழே சாய்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாஸ் தாபனத்தாரின் எல்லாக் கொழும்பு தியேட்டர்களிலும்

# கல்யாண பரிசு

## நடிகர்கள் ★ தயாரிப்பாளர்கள் ★ டைரக்டர்

எல்லோரும் எதிர்வரும் சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை எல்லாக் காட்சிகளிலும் நேரில் சமுகம் கொடுத்து ரசிகர்களை மகிழ்விப்பார்கள்.

## உள்ளத்தை கொள்ளை கொள்ளும் 9-வது வாரம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) ★ **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)



உள்ளத்தை உருக்கும் **கதை** மட்டுமல்ல....
நெஞ்சையே கொள்ளை கொள்ளும் **காதல்**
நினைத்து நினைத்து சிரிக்க வைக்கும் **ஹாஸ்யம்**
இவையனைத்தும் கொண்டதுதான்......

**வீனஸ்** பிக்சர்ஸ்

# கல்யாண பரிசு

கதை, வசனம் டைரக்ஷன் **ஸ்ரீதர்**



சங்கீதம் · A.M.ராஜா
காமரா · வின்சென்ட்
ஆர்ட் · கங்கா
எடிட்டிங் · N.M.சங்கர்
ஸ்டூடியோ விஜயா-வாஹினி

ஜெமினி கணேசன், விஜயகுமாரி, நாகேஸ்வரராவ், சரோஜாதேவி, தங்கவேலு, சரோஜா நடித்தது.

BAKTHA

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 19...-ம் இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 டிசம்பர் மாதம் 13-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org